https://t.me/tamilpdfebooks

# சண்ட கோழி

எழுதியவர் - ரம்யா ராஜன்



https://t.me/tamilpdfebooks

# சண்ட கோழி

## அத்தியாயம் 1

*“ஏம்ப்பா மதியழகா, என்னோட கொஞ்சம் வந்திட்டு போப்பா.”*

*“என்ன திம்சு உன்னோட இம்சையா இருக்கு. என்னவோ கட்டின பொண்டாட்டியை கூப்பிடுற மாதிரி கூப்பிடுற.”*

*“என்னப்பா நீதான் நியாயத்தைச் சொல்வேன்னு கூப்பிட்டா, நீ ஏதோ லந்து அடிச்சிட்டு இருக்க.”*

*“சரி சீக்கிரம் சொல்லு, என்ன உன் பிரச்சனை?”*

https://t.me/tamilpdfebooks

*“இந்தச் சேகர் பையன், என் கடைக்கு வாடகையும் கொடுக்க மாட்டேங்கிறான். கடைய காலி பண்ணி கொடுன்னா, அதுவும் செய்ய மாட்டேங்கிறான். நான் எத்தனை நாள் பா… வாடகை வாங்காமலே இருக்கிறது. நானும் குடும்பஸ்தன் தானே?”*

*“சரி நீ போ… நான் பின்னாடியே வரேன்.” என்ற மதியழகன் பேருக்கு ஏற்றார்போல் ஆளும் அழகு. அறிவும் அழகுதான். ஆனால் என்ன கொஞ்சம் முன்கோபம் அதிகம். சில நேரம் வாய் பேசுவதற்குள் கைபேசி இருக்கும். அவனை நன்றாகத் தெரிந்தவர்கள், கொஞ்சம் எட்ட நின்றே அவனிடம் பேசுவார்கள்.*

*வீட்டில் கடைசிப் பிள்ளை என்பதால், குடும்பத்தில் செல்லமும் அதிகம், செல்வாக்கும் அதிகம், அவனோடு உடன்பிறந்தவர்கள் மூன்று பேர். முதலில் அண்ணன் கதிரேசன், அடுத்து அக்கா எழிலரசி, திரும்ப ஒரு அண்ணன் கருணா. எல்லோருக்கும் திருமணம் ஆகி இருக்க. சார் தான் கல்யாணத்திற்குக் காத்திருக்கிறார்.*

*ஆமாம் அவன் காத்திருக்கிறான். பெண் எல்லாம் அவனே பார்த்து வைத்து விட்டான். வீட்டில் கல்யாண பேச்சை எடுத்து விட்டால். உடனே இவள்தான் பெண் என்று காட்டி,. அடுத்துத் திருமணம் செய்துகொள்ள வேண்டியதுதான். ஆனால் இவன் வீட்டில் தானாகத் திருமணப் பேச்சை எடுப்பதாகக் காணோம்.*

https://t.me/tamilpdfebooks

சரி இந்த விஷயம் அந்தப் பெண்ணுக்காவது தெரியுமா? அதுவும் இல்லை. அவளுக்கு மட்டும் தெரிந்தாள். இவனைத் துவைத்து தொங்க விட்டுவிடுவாள். அவளுக்கு இவனை மட்டும் அல்ல, இவன் குடும்பத்தினரையும் பிடிக்காது.

அவர்கள் ஒன்றும் மோசமான குடும்பம் இல்லை. அந்த ஊரில் நல்ல குடும்பம்தான். அந்த ஊரில் பாதிச் சொத்து அவர்களது தான். மளிகை கடை, பான்சி ஸ்டோர், எலெக்ட்ரி கடை என மகன்கள் ஆளுக்கு ஒரு கடை பார்த்துக் கொண்டாலும், வருமானம், செலவு எல்லாம் பொதுதான்.

தெருவில் பெரிய வீடு அவர்களுடையது. வீட்டை கூட மூன்று மகன்களுக்கு, மூன்று பாகமாகத்தான், அவன் அப்பா கட்டி இருக்கிறார். ஆனால் இரவு படுக்கும் வரை, எல்லோரும் ஒரே இடத்தில் தான் இருப்பார்கள்.

அந்த வீட்டில் அதிகம் படித்தது மதியழகன்தான். M.Com., படித்து விட்டு அரசு வேலைக்குத் தேர்வு எழுதிக் கொண்டு இருக்கிறான். தனக்கு தப்பு என்று பட்டால் தட்டிக் கேட்பான். அதெல்லாம் வெளியே தான்.

வீட்டிற்க்குள் அவன் தந்தை துரை வைத்ததுதான் சட்டம். அதை அண்ணன் தம்பி மூன்று பேருமே கண்ணை மூடிக் கொண்டு பின்பற்றுவார்கள். அவரை எதிர்த்து இதுவரை ஒருவரும் பேசியது இல்லை.

“என்ன சேகர் அண்ணே, வாடகை ஒழுங்கா கொடுக்க முடியலைனா, கடையைக் காலி பண்ணிக் கொடுக்க வேண்டியதுதான? ஏன் இழுத்து அடிக்கிற?

https://t.me/tamilpdfebooks

*“நான் என்னப்பா வச்சிகிட்டா இல்லைன்னு சொல்றேன். வருமானம் இல்லாம நானே நட்டத்தில கடையை நடத்திட்டு இருக்கேன். இதுல கடையையும் காலி பண்ண சொன்னா, நான் என்ன செய்ய முடியும்? கொஞ்சம் டைம் கொடுக்கச் சொல்லு.”*

*“அது அப்படி இல்ல அண்ணே… நீ ஊருக்கு தெரிஞ்சு ஒரு பொண்டாட்டி, ஊருக்கு தெரியாம ஒரு தொடுப்பு வச்சி இருக்கியா. அதுதான் உனக்கு வருமானம் பத்தலை.”*

*“வேண்டாம் மதியழகா, என்னைப் பத்தி தெரியாது உனக்கு.” சேகர் சொல்லி முடிக்கவில்லை, மதியழகன் அவனை அடித்து இருந்தான்.*

*ஒரு அறை விட்டு, “என்ன தெரியனும் சொல்லு,” என்றவன், திரும்ப ஒரு அறை வைத்து, “உன்னைப் பத்தி என்ன தெரியனும்.” என்றான்.*

*அடி வாங்கிய சேகர் பின்னே செல்ல.. அடித்துக் கொண்டே மதியழகன் முன்னேற, கடை முன்னால் கூட்டம் கூடியது.*

https://t.me/tamilpdfebooks

*"ஒழுக்கமா பொழைக்கப் பாரு... இல்லை நடக்கிறதே வேற.... உன் பொண்டாட்டி பிள்ளைகளைப் பரதேசி மாதிரி வச்சிக்கிட்டு... எவளுக்கோ கொண்டு போய் நீ அள்ளி விடுறது எனக்குத் தெரியாதுன்னு நினைச்சியா?"*

*"இனிமே ஒழுங்கா இருந்துக்க... இல்லைனா பஞ்சாயத்து கூட்ட வேண்டியதா இருக்கும்." என எச்சரித்து விட்டு மதியழகன் செல்ல, சேகர் ஆடிப் போய் நின்றிருந்தான்.*

*அன்று இரவு கடை அடைத்துவிட்டு வீட்டிற்கு அவன் சாப்பிட செல்ல, அவன் இளைய அண்ணி தட்டில் சோறு போட்டு வைக்க, அதில் கை வைத்த நொடியில் இருந்து, அவன் சாப்பிட்டு முடிக்கும் வரை, அவன் தந்தை வசை பாடினார்.*

*அவனை நேராக எதுவும் சொல்லவில்லை. யாரையோ திட்டுவது போலத் திட்டிக் கொண்டு இருந்தார்.*

*அவர் எதோ பாட்டு பாடுவது போல, மதியழகன் அமைதியாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். கடைசியாக அவன் கைகழுவும் போது, "நம்ம வீட்லயே ஆயிரம் சோலி இருக்கு. இதுல ஊர் பய பஞ்சாயத்து எதுக்கு? நம்ம வேலையைப் பார்த்தா போதும்." என்றார்.*

https://t.me/tamilpdfebooks

அவர் அறைக்குள் சென்றதும், அவன் அம்மா நீலவேணி ஆரம்பிக்க, "நீயுமா, ஏற்கனவே காதுல ரத்தம் வருது. ப்ளீஸ்..." என எல்லாமே வாய்த் திறக்காமல், நடித்துக் காட்டிவிட்டு, அவன் அறைக்கு ஓடிவிட்டான்.

அவன் அறை என்பது ஒரு பெரிய ஹால், சின்னப் படுக்கை அறை, சமையல் அறை, பிறகு பொதுவாக ஒரு குளியல் அறை, அங்கே இருக்கும் சின்ன டிவியைப் போட்டுக் கொண்டு தரையில் அமர்ந்தான்.

சேனல் மாற்றிக்கொண்டே வந்தவன், "நீ தானே நீதானே என்னை நெஞ்சை தட்டும் சத்தம்." என்ற பாடலை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். கண்கள் கனவில் மிதக்க, கனவுலகில் தன் சண்டைக் கோழியுடன் வளம் வந்தான்.

மறுநாள் தங்கள் எலெக்ட்ரிக் கடையில் மதியழகன் உட்கார்ந்து இருக்க, திம்சு என அழைக்கப்படும் திரு வந்து, "நீ போட்ட போடுல, பணத்தை ஒழுங்கா வந்து கொடுத்திட்டான் பா." என்றான் மகிழ்ச்சியாக.

"இவனுங்க கிட்ட எல்லாம் வாய் பேசக் கூடாது திம்சு, கைதான் பேசணும்." என்றான்.

புதுகோட்டை ஊரில், அன்று அந்த மகளிர் கல்லூரி, களைகட்டி இருந்தது. காரணம், அன்றுதான் மூன்றாம் வருட மாணவிகளுக்கு, பிரிவு உபச்சார விழா.

https://t.me/tamilpdfebooks

*பட்டுப் புடவையில் கண்ணுக்குக் குளிர்ச்சியாக ஒவ்வொருவராகக் கல்லூரிக்கு வர தொடங்கினர்.*

*சங்கமித்ரா நீல நிற பட்டுபுடவையில், பஸ்ஸில் இருந்து இறங்க, அவளுக்காகவே காத்திருந்த நவீன், விழிகள் தெறிக்கும் அளவிற்கு அவளையே வெறித்து இருந்தான்.*

*சாதாரண நாட்களிலேயே ஏதோ காணாததைக் கண்டது போலத்தான் பார்த்து வைப்பான். இன்று கல்லூரி விழாவுக்கென அவள் நன்றாக அலங்கரித்துக் கொண்டு வேறு வந்திருக்கிறாள், பிறகு கேட்கவே வேண்டாம்.*

*அவன் தன்னையே வெறித்துப் பார்ப்பது சங்கமித்ராவுக்கு எரிச்சலை கொடுத்தது. எப்போதும் போல், அவன் இன்றும் அவள் பின்னால் வர… எப்போதும் கண்டுகொள்ளாமல் செல்பவள், இன்று நின்று அவனிடம் பேசினாள்.*

*“இங்க பாரு, என் பின்னாடி வராத. எங்க வீட்டுக்குத் தெரிஞ்சா பிரச்சனை ஆகும். நான் படிக்கணும், என்னை நிம்மதியா படிக்க விடு.” என்றாள்.*

*“எனக்கு உன்னை ரொம்பப் பிடிக்கும் சங்கமித்ரா. நான் உன்னை லவ் பண்றேன்.” என்றான் நவீன் உல்லாசமாக.*

https://t.me/tamilpdfebooks

*“அதுதான் எனக்கு இஷ்ட்டம் இல்லைன்னு சொல்றேன் இல்ல.. விட்டுடு.” என்றவள், வேகமாகக் கல்லூரிக்குள் சென்று மறைந்தாள்.*

*தோழிகளைப் பார்த்ததும், நவீனை மறந்தும் விட்டாள். மாலை விழா முடிய தாமதமானதால்… அவள் அண்ணன் ஜெய் அவளை அழைக்க வந்திருந்தான்.*

*அவள் அண்ணனோடு இரு சக்கர வாகனத்தில் செல்லும்போது வாயாடிக்கொண்டே வந்தாள். எதற்கோ அவள் பின்னால் திரும்பி பார்க்க, நவீன் அவனது வண்டியில், அவளைப் பின் தொடர்ந்தான்.*

*இந்தப் பக்கி ஏன் வருது என அவளுக்குப் பதட்டமாக இருந்தது. அண்ணனுக்குத் தெரிந்தால்… அவளைத் தான் திட்டுவான் எனத் தெரியும். பயத்தில் திரும்பி திரும்பி நவீன் வருகிறானா எனப் பார்த்துக் கொண்டு வந்தாள்.*

*வண்டியின் பக்கவாட்டுக் கண்ணாடியில், நவீன் பின்தொடர்ந்து வருவதை ஜெய்யும் கவனித்து இருந்தான். சங்கமித்ராவின் பதட்டமே, அவளுக்கு அவனைத் தெரிந்திருக்கிறது எனக் காட்டிக் கொடுத்தது.*

*வழியில் எதுவும் பேசாதவன், வீட்டிற்கு வந்ததும், அவன் யாரென்று விசாரித்தான். கூடவே அவன் அம்மா வேறு இருந்தார்.*

https://t.me/tamilpdfebooks

*“அவன் யாருன்னே எனக்குத் தெரியாதுண்ணே…. அவன் என் பின்னாடி வந்தா நான் என்ன பண்ணுவேன்?”*

*“உனக்கு அவன் பின்னாடி வர்றது தெரிஞ்சதும், வீட்ல சொல்லி இருக்கனுமா வேண்டாமா?”*

*“நான் சொன்னா, நீங்க என்னைத் தான் திட்டுவீங்க. அதோட என் படிப்பை நிறுத்திட்டா.”*

*“என்ன காரணமா இருந்தாலும், நீ செஞ்சது தப்புதான்.”*

*“நானே அவன்கிட்ட என் பின்னாடி வராதன்னு சொன்னேன்.”*

*“என்னது ! நீ அவன்கிட்ட நின்னு வேற பேசினியா? உனக்கு கொஞ்சமாவது அறிவு இருக்கா? அவன் கோபத்தில் உன்னை எதாவது பண்ணி இருந்தா?”*

*ஜெய் சொன்னதைக் கேட்டு, அவன் அம்மா பதட்டம் கொண்டார். “ஆமாம், இப்பதான் டிவில எல்லாம் வருதே, லவ் பண்ண ஒத்துக்கலைனா*

https://t.me/tamilpdfebooks

பொண்ணுங்களை வெட்டுறாங்க, ஆசிட் ஊத்துறாங்க. இன்னும் என்னென்னமோ நடக்குது. அப்படி எதாவது ஆகி இருந்தா? எனக்கு நினைக்கவே பயமா இருக்கே."

"போதும் டா இவ படிச்சு கிழிச்சது. இவளைக் சீக்கிரம் கல்யாணம் பண்ணி கொடுத்திடலாம்." என்றார்.

சங்கமித்ரா எதை நினைத்து பயந்தாளோ, அதுதான் நடந்தது.

"ப்ளீஸ் அண்ணா, நான் எம்.எஸ்.சி கூடப் படிக்கலை. B.ed., மட்டும் முடிச்சிக்கிறேன். அதுக்கு அப்புறம் நான் கல்யாணம் பண்ணிக்கிறேன்." சங்கமித்ரா கெஞ்ச,

"நீ ஒழுங்கா வாயை மூடிட்டு இருந்தா, பரிட்சையாவது எழுத கூடிட்டு போவேன். இல்லைனா, அதுவும் எழுத முடியாது." ஜெய் முறைத்துக் கொண்டு சொல்ல, முதலில் இந்தப் பட்ட படிப்பையாவது முடிப்போம் எனச் சங்கமித்ராவும் வாயை மூடிக் கொண்டாள்.

கல்லூரியில் உடம்பு சரி இல்லை என மருத்துவச் சான்றிதழ் கொடுத்து, அவளை மிச்ச வகுப்புகளுக்கு அனுப்பவே இல்லை. பரிட்சைக்கும் அவனே அழைத்துச் சென்று, தேர்வு எழுதி முடித்ததும், திரும்ப அழைத்து வந்தான்.

https://t.me/tamilpdfebooks

வேறு வழியாக ஜெய் அவளைக் கல்லூரிக்கு அழைத்து சென்றதால், நவீனால் சங்கமித்ராவை பார்க்க முடியாமல் போனது. அவள் எப்போது வருகிறாள் போகிறாள் என்றே அவனுக்குத் தெரியவில்லை.

சங்கமித்ராவும் அவன் வருகிறானா என்றெல்லாம் பார்க்கவில்லை. போகும் போதும், வரும் போதும், புத்தகத்தைதான் விரித்து வைத்து பார்த்துக் கொண்டு வருவாள். அதை ஜெய்யும் கவனித்து இருந்தான்.

பரீட்சை முடிந்ததும் வீட்டிற்குள் சிறை வைக்கப் பட்டாள். இது தெரியாத நவீன், இப்போது விடுமுறை அதனால் பார்க்க முடியாது என நினைத்து இருந்தான்.

சங்கமித்ராவுக்குத் தீவிரமாக மாப்பிள்ளை பார்க்க ஆரம்பித்தனர். அதன் பயனாக, அவளுடைய அக்காள் சுபத்ராவுக்கும் செய்தி போனது.

இரவு உணவு நேரத்தில், துரை சாப்பிட்டுக் கொண்டிருக்க, அவரிடம் வந்த கதிரேசன், “அப்பா, சங்கமித்ராவுக்கு மாப்பிள்ளை பார்க்கிறாங்களாம். எதாவது நல்ல இடமா இருந்தா, உங்களைச் சொல்ல சொன்னாங்க.” என்றான்.

“கண்டிப்பா தெரிஞ்சா சொல்றேன்.” என்றார் துரை.

https://t.me/tamilpdfebooks

*அப்போது அங்கே இருந்த மதியழகனுக்கு நெஞ்சம் படபடவென அடித்துக் கொண்டது. காத்திருந்தவன் பொண்டாட்டியை நேத்து வந்தவன் கொண்டுட்டு போன கதையாகிட கூடாது மதியழகா… சீக்கிரம் எதாவது பண்ணு. என அவன் மனசாட்சி குரல் கொடுத்தது.*

*அப்போதே அக்கா எழிலுக்கு அழைத்தவன், "எழில், நாளைக்குக் கொஞ்சம் நம்ம வீடு வரை வந்திட்டு போயேன்." என்றான்.*

*"எதுக்குச் சொல்லு, அப்பதான் வருவேன்."*

*"நம்ம அண்ணியோட தங்கச்சி சங்கமித்ராவுக்கு மாப்பிள்ளை பார்க்கிறாங்களாம். நீ வந்து அந்தப் பெண்ணை எனக்குப் பேச சொல்லேன்."*

*"ஐயையோ ! அப்பாவுக்குத் தெரிஞ்சா கொன்னுடுவாரு. என்னால முடியாது."*

*"ஏய் நீ சும்மா சொல்லிப் பாரு. கண்டிப்பா அப்பா ஒத்துக்குவாங்க." என்றான்.*

https://t.me/tamilpdfebooks

அங்கே சங்கமித்ரா வீட்டில் அவளது அம்மா, “எங்கையோ வெளிய பார்க்கிறதுக்கு, நம்ம மூத்தவளோட கொழுந்தனுக்குப் பார்க்கலாம். ரொம்ப நல்ல தம்பி.” என்றார்.

“யாரு அந்த வளர்ந்து கெட்டவனா. அவனை எல்லாம் நான் கட்டிக்க மாட்டேன். அவங்க வீட்ல பொண்ணுங்களை, மனுஷியா கூட மதிக்க மாட்டாங்க. அந்த மாதிரி வீட்டுக்கு நான் போகமாட்டேன்.” எனச் சங்கமித்ரா போட்ட கத்தலில், ஜெய்க்குக் கோபம் வந்தது.

“வேண்டாம்னா வேண்டாம்ன்னு சொல்லு. எதுக்கு இப்படிப் பேசுற? அம்மா, நாம வேற இடம் பார்ப்போம்.” என்றான்.

“ஆமாம், என்னை அங்க கட்டி கொடுக்கிறதுக்கு, பேசாம நீங்களே கிணத்துல பிடிச்சு தள்ளி விட்டுடலாம்.” என முனங்கிக்கொண்டே சென்றாள் சங்கமித்ரா.

அங்கே ஒருவன் இவளை திருமணம் செய்யப் போராட, சங்கமித்ராவோ, அதற்கு நான் கிணற்றிலேயே குதித்து விடுவேன் என்கிறாள். ஆரம்பமே இருவரும் எதிரும் புதிருமாக இருக்கிறார்கள்.

# அத்தியாயம் 2

https://t.me/tamilpdfebooks

*தம்பியின் அழைப்பை ஏற்று எழிலரசியும் தன் பிறந்த வீட்டிற்கு வந்துவிட்டாள். அவளைப் பக்கத்துக்கு ஊரில் தான் கட்டி கொடுத்து இருக்கிறார்கள். பதினெட்டு வயதிலேயே கட்டி கொடுத்து விட்டனர்.*

*பன்னிரெண்டாம் வகுப்பு வரைதான் படித்து இருக்கிறாள். படிப்பும் சரியாக வரவில்லை. அதனால் நல்ல சம்பந்தம் வர, உடனே திருமணம் முடித்து விட்டனர். அவளுக்கு இரண்டு பெரிய பையன்கள் இருக்கிறார்கள்.*

*"வாங்க எங்க வீட்டுக்கு போயிட்டு வந்திடலாம்." என மதியம் சாப்பிட வந்த கணவரை அழைத்துக் கொண்டு வந்தாள். அவள் தனியாகப் போய்க்கொள்ளப் புகுந்த வீட்டினர் கூட அனுமதிப்பார்கள், ஆனால் அவள் தந்தை அனுமதிக்க மாட்டார்.*

*'நீ வரணுமா ஒன்னு உன் வீட்டுக்காரரோட வா... இல்லைனா உன் அண்ணங்களைக் கூப்பிட வர சொல்லு, தனியா எல்லாம் வரக் கூடாது." என்பார்.*

*"என்ன டி பிறந்த வீட்டுப் பாசம் திடிர்ன்னு அடிக்குது." எனக் கேட்ட கணவரிடம், எழிலரசி வாயே திறக்கவில்லை. இவரிடம் விஷயத்தைச் சொன்னால், "என்ன நீயே பொண்ணு பார்த்திட்டியா?" என எல்லோரின் முன்பே, மதியழகனிடம் எக்குத்தப்பாகக் கேட்டு வைப்பார்.*

https://t.me/tamilpdfebooks

"சும்மா, அம்மா வர சொன்னாங்க. அதுதான் பார்க்க போறேன்." என்றாள்.

வீட்டிற்கு வந்து நின்ற மகளை, பெற்றோரும் உடன் பிறந்தோரும் மகிழ்ச்சியாக வரவேற்றனர். தனக்காக அக்கா வந்ததில், மதியழகனுக்கு மிகுந்த மகிழ்ச்சி.

அப்போது மதிய நேரம் என்பதால்... ஆண்கள் எல்லோரும் ஹாலில் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டு இருந்தனர்.

சாப்பிட சொல்லி, மாப்பிளைக்கும் இலை போட்டனர். இருக்கும் கூட்டதிற்குத் தட்டில் போட்டால்... கழுவி மாளாது என்றே இலையில் வைப்பது.

சாப்பிட்டு முடித்ததும், அவள் தந்தை படுக்கச் சென்றுவிட,

"நீங்க போங்க, நான் சாயந்திரம் மதியோட வரேன்." என எழிலரசி தன் கணவனை அனுப்பி வைத்தாள்.

பிறகு பெண்கள் எல்லோரும் சேர்ந்து சாப்பிட்டனர். சாப்பிட பின் தன் அம்மாவிடம் எழிலரசி மெதுவாக, "நம்ம தம்பிக்கு சங்கமித்ராவை கேட்கலாம் இல்ல மா.... மூத்த அண்ணி ரொம்பப் பொறுப்பு, இவளும் நல்ல பெண்ணாதான் தெரியுறா." என அவளது விருப்பம் போலச் சொன்னாள்.

https://t.me/tamilpdfebooks

அதைக் கேட்ட நீலவேணி யோசிக்க ஆரம்பித்தார். இவரிடம் சொன்னால், எப்படியும் தந்தையின் காதுக்குப் போய்விடும் என்று தெரியும்.

நீலவேணி எப்போது அதைக் கணவரிடம் சொன்னாரோ தெரியாது. ஆனால் சிறிது நேர ஓய்வுக்குப் பின் வெளியே வசந்த துரை கதிரேசனிடம், “உங்க அம்மா மதிக்கு உன் கொழுந்தியாளை கேட்போமான்னு கேட்கிறா?” என்றவர், அங்கிருந்த சேரில் யோசனையாக அமர்ந்தார்.

அப்போது மதியழகனும் அங்கேதான் இருந்தான். அப்பா என்ன சொல்லப்போறாரோ எனப் பதைபதைப்பில் இருந்தாலும், வெளியே முகத்தில் எதையும் காட்டாது இருந்தான்.

அப்போது துரை எதுவும் முடிவு சொல்லவில்லை. டீ குடித்து விடு கடைக்குக் கிளம்பி சென்றுவிட்டார். கடைக்குச் செல்வது போலப் போக்கு காட்டிய இரண்டு அண்ணன்களும், தந்தை வெளியே சென்றதும், வீடு திரும்பினர்.

“ஏய் ! நீ இதுக்குத் தான வந்த? நீயா வந்திருக்க மாட்ட, மதி கேட்க சொன்னனா?” எனக் கதிரேசனும், கருணாவும் எழிலரசியைக் கட்டம் கட்ட, அதற்கு எழிலரசி இல்லை என மறுக்க, பொய் சொல்கிறாள் என நன்றாகவே தெரிந்தது.

https://t.me/tamilpdfebooks

"ஏய், நாங்க அப்பாகிட்ட சொல்ல மாட்டோம். எங்க பொண்டாட்டி கிட்ட கூடச் சொல்ல மாட்டோம்." என்றதும், எழிலரசி ஒத்துக் கொண்டாள்.

"சரி விடு பார்த்துக்கலாம்." என இருவரும் சென்றனர்.

மதி எழிலரசியை அவள் வீட்டில் விடச் சென்றான். செல்லும் வழியில் எழிலரசி , "அப்பா ஒத்துக்கலைனா என்ன டா தம்பி பண்ணுவ?" எனக் கவலையாகக் கேட்க, அவனுக்கும் ஒன்றும் புரியவில்லை.

அவனைப் பார்த்ததும், "மதி மாமா…" எனப் பாசமாக வந்த தன் மருமகன்களுக்கு, பையில் இருந்த பணத்தை எடுத்து, அப்படியே கொடுத்துவிட்டு வந்தான்.

இரவு சாப்பிட்டதும், துரை பேச்சை ஆரம்பித்தார். "ஒரே வீட்ல இருந்து ரெண்டு பொண்ணு எடுக்க யோசனையா இருக்கு."

"ஏன்னுங்க?" என்ற நீலவேணியிடம்,

https://t.me/tamilpdfebooks

*“நாளைக்குப் பெரியவனும், சின்னவனும் ஒன்னு சேர்ந்திட்டு, நடுவுலவனை விட்டுடக் கூடாது இல்லை.” என்றார்.*

*அவர் சொல்வது நியாயம் என்பதால்... நீலவேணி மறுத்துச் சொல்லாமல் இருந்தார். ஆனால் கதிரேசன், “அதெப்படி நாங்க அவனை விட்டுக் கொடுப்போம். நீங்க அதை எல்லாம் நினைச்சு கவலைப்படாதீங்க.” என்றான்.*

*கருணாவும், “அப்படியெல்லாம் ஒன்னும் ஆகாதுப்பா. சங்கமித்ரா நல்ல பொண்ணு, அதையும் இதையும் நினைச்சு விட வேண்டாம்.” என்றான்.*

*தம்பியின் விருப்பம் தெரிந்தே, அண்ணன்கள் இருவரும் அவனுக்காகப் பேசினர். அவர்கள் திருமணத்தில் இந்தப் பேச்சு வார்த்தை கூட இல்லை. துரை பார்த்த பெண்ணை, கேள்வியே கேட்காமல் இருவரும் திருமணம் முடித்து இருந்தனர். இதில் எதுவும் கலந்து கொள்ள முடியாமல், மதியழகன் பார்த்துக் கொண்டு இருந்தான்.*

*“சரி, அந்தப் பெண்ணையே பார்ப்போம். கதிரு, நீயும் உன் பொண்டாட்டியும், நல்லநாள் பார்த்து போய் அவங்க வீட்ல பேசிட்டு வந்திடுங்க.” எனத் துரை எழுந்து உள்ளே சென்றார்.*

https://t.me/tamilpdfebooks

*சந்தோஷத்தை கூட வெளியே காட்ட முடியாமல், மதியழகன் உட்கார்ந்து இருந்தான்.*

*வீட்டினர் எல்லோருக்குமே மகிழ்ச்சிதான். ஆனால் கருணாவின் மனைவி ரேவதிக்கு அவ்வளவு விருப்பம் இல்லை. இனி அவங்க அக்காவும் தங்கச்சியும் இல்ல சேர்ந்துப்பாங்க என நினைத்தாள். ஆனால் அவள் எதாவது பேசினால், கருணா துளைத்து விடுவான். அதற்குப் பயந்து பேசாமல் இருந்தாள்.*

*அறைக்கு வந்ததும் மதியழகன் முதலில் எழிலரசியை அழைத்துத் தன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டான். அவளும் மிகவும் சந்தோஷப்பட்டாள்.*

*"அம்மா சொல்லும்போது தெரிஞ்ச மாதிரி காட்டிக்காத கா..." எனச் சொல்லிவிட்டு வைத்தான்.*

*நேரில் சென்று பேசுவோம் என நினைத்து, சுபத்ரா அவள் வீட்டில் எதுவும் சொல்லவில்லை. இரண்டு நாள் கழித்து அவளும், கதிரேசனும் தங்கள் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு புதுக் கோட்டைக்குச் சென்றனர்.*

*அவர்களுக்கு ஆண் ஒன்று பெண் ஒன்று என இரண்டு பிள்ளைகள். வீட்டில் அனைவருக்கும் பொதுவாக ஒரு டாட்டா சுமோ இருந்தது. அதை கதிரேசனே ஓடிக் கொண்டு சென்றான்.*

*இவர்கள் ஊரில் இருந்து ஐந்து மணி நேர பயணம்.*

https://t.me/tamilpdfebooks

செல்லும் வழியில்தான் சுபத்ரா அவர்கள் வருவதாகச் சொல்லி இருந்தாள். இவள் வருவதற்குள் பெரிய விருந்தே தயார் செய்து இருந்தனர்.

பிறந்த வீட்டிற்கு அடிக்கடி சீராட வரும் மகள் அல்ல அவள். வருடத்திற்கு ஒன்றோ இரண்டோ முறையோ வருவாள். அதுவும் ஒரு வாரம் மட்டுமே இருந்துவிட்டு செல்பவள். அதனால் அவள் எப்போது வந்தாலும், அவள் வீட்டில் அவளைச் சீராட்டுவர்.

தங்கை வருவது தெரிந்து, ஜெய்யும் வீட்டிற்கு வந்துவிட்டான். அவன் அங்கே பெரிய ஜவுளிக்கடை வைத்திருக்கிறான்.

மதியம் போல இவர்கள் அங்கே போய்ச் சேர, தயாராக இருந்த விருந்தை ஒரு பிடிபிடித்தனர். பிறகு கதிரேசன் சென்று ஓய்வு எடுக்க, சங்கமித்ரா சகோதரியின் பிள்ளைகளோடு பின்னே தோட்டத்தில் விளையாடிக் கொண்டு இருந்தாள்.

சுபத்ரா மெதுவாகத் தன் பெற்றோர் மற்றும் சகோதரனிடம் விஷயத்தைச் சொல்ல, அவர்களுக்கு விருப்பம்தான். ஆனால் இந்தச் சங்கமித்ரா தான் பிடிவதமாக இருக்கிறாளே.. அதை நினைத்துதான் யோசித்தனர்.

“நாம எங்க போய் நல்ல இடமா தேடுறது. இங்கேயே செய்வோம்.” என்றார் அவளுடைய தந்தை. ஆனால் ஜெய், “வேண்டாம்பா ஏற்கனவே ஒரு பெண்ணை

https://t.me/tamilpdfebooks

அங்கதான் கொடுத்திருக்கோம். எதுக்குத் திரும்ப அங்கயே செஞ்சிட்டு, வெளியில பார்ப்போம்." என்றான்.

தங்கைக்கு விருப்பம் இல்லை என்றே அப்படிச் சொன்னான். அவன் சொன்னதும், அவன் அப்பாவும் யோசித்தார். இதை எல்லாம் பார்த்த சுபத்ராவுக்குதான் முகம் வாடிவிட்டது.

மாலை எழுந்து வந்த கதிரேசனுக்கு, பலகாரங்களைக் கொண்டு வந்து சுபத்ரா கொடுக்க, அவன் மனைவியின் முகத்தை ஆவலாகப் பார்த்தான். ஆனால் அவள் பிடி கொடுக்காமல் விலக, அவன் முகம் மாறியது.

"அப்புறம் மாமா, சுபத்ரா நாங்க வந்த விஷயம் சொன்னாளா?" என அவனே பேச்சை ஆரம்பித்தான்.

"எங்களுக்குச் சந்தோஷம் தான் மாப்பிள்ளை. ஆனா முதல்ல சங்கமித்ராவுக்குச் செய்யலாம்ன்னு நினைச்சோம். ஆனா இப்ப ஜெய்க்கு முடிச்சிட்டு, அப்புறம் அவளுக்குப் பண்ணலாம்ன்னு பார்க்கிறோம். இங்க பக்கத்திலேயே எங்காவது கொடுத்தா வந்து போய் இருக்கும்." என்றார் நயமாகவே. தன் மூத்த பெண்ணை அவர்கள் வீட்டில் அல்லவா கொடுத்திருக்கிறார். அதனால் தழைந்து தானே போக வேண்டும்.

https://t.me/tamilpdfebooks

*கதிரேசனுக்கா புரியாது, சட்டென்று தன் இருக்கையைத் தள்ளி விட்டு எழுந்து நின்றான். அதைப் பார்த்து ஒரு நொடி எல்லோருமே பயந்து விட்டனர்.*

*“நீங்கதான் மாப்பிள்ளை பார்க்கிறதா சொல்லிவிட்டீங்க. இப்ப ஜெய்க்கு முடிக்கப் போறதா சொல்றீங்க. என் தம்பிக்கு பொண்ணு கொடுக்க இஷ்ட்டமில்லைனா, அதை நேரா சொல்லுங்க. எதுக்குச் சுத்தி வளைக்கிறீங்க?”*

*“உங்க ரெண்டாவது பொண்ணைக் கட்டி கொடுக்க விரும்பாத இடத்தில, உங்க மூத்த பொண்ணு மட்டும் ஏன் இருக்கணும்? அவளையும் நீங்களே வச்சுக்கோங்க.” என்றவன்,*

*“பிள்ளைங்களா கிளம்புங்க, நம்ம வீட்டுக்கு போவோம்.” என்றான்.*

*ஒரு நொடி எல்லோருமே ஆடிவிட்டனர். கதிரேசன் இப்படியெல்லாம் கோபம் கொண்டு சங்கமித்ரா பார்த்ததே இல்லை. எப்போதும் அமைதியாகப் பேசும் அத்தானுக்கு இப்படியும் பேச தெரியுமா எனப் பார்த்து இருந்தாள்.*

*சுபத்ரா தான் ஒரே அழுகை. கோபத்தில் தன்னை அல்லவா, அவள் கணவன் தள்ளி வைக்கப் பார்க்கிறான். அவளை அவள் பெற்றோரும், சகோதரனும் சமாதானம் செய்ய, அவர்களைத் தள்ளிவிட்டு தன் கணவனிடம் சென்றவள்,*

*“நானும் உங்களோட வரேங்க.” என்றாள்.*

https://t.me/tamilpdfebooks

*“இனி உனக்குப் பிறந்த வீடு கிடையாது. அப்படின்னா வா.. நாளைக்கு அண்ணன் கல்யாணத்துக்குப் போகணும், தங்கச்சி கல்யாணத்துக்குப் போகணும்ன்னு எதாவது சொன்ன, உன்னை வெட்டிடுவேன். இனி இவங்களும் உன்னைத் தேடி வரக் கூடாது.” என்றான்.*

*எல்லாவற்றிற்கும் சுபத்ரா தலையைத் தலையை ஆட்ட, “போய், நம்ம பையை எடுத்திட்டு வா.” என்றான்.*

*“மாப்பிள்ளை நீங்க ஏன் இவ்வளவு கோபப்படுறீங்க. நாம பேசலாம்.” என்றார் முத்துக்குமார்.*

*“என் தம்பிக்கு பொண்ணு கிடைக்காம, நாங்க இங்க வரலை. இன்னைக்கு நாங்க அவனுக்குப் பொண்ணு பார்க்கிறோம்ன்னு வெளிய தெரிஞ்சா, நாளைக்கே அத்தனை சம்பந்தம் எங்களைத் தேடி வரும். ஆனா நீங்க எதோ தகுதி இல்லாதவனுக்குப் பொண்ணு கொடுக்கிற மாதிரி யோசிக்கிறீங்க.”*

*அவன் சொல்வது உண்மைதான். அவர்களுடையது எல்லாவற்றிலும் தகுதியான குடும்பம் தான்.*

https://t.me/tamilpdfebooks

*“உங்களை நாங்க குறைவா எல்லாம் நினைக்கலை மாப்பிள்ளை. ஒரு தங்கச்சியை அந்த வீட்ல கொடுத்தோம், இன்னொன்னு பக்கத்தில இருந்தா, அடிக்கடி போய் வர இருக்குமேன்னு நான்தான் சொன்னேன்.” என்றான் ஜெய்.*

*அவன் சொல்ல வரும் காரணம் கதிரேசனுக்குப் புரியாமல் இல்லை. “உங்க தங்கச்சி உங்க வீட்டுக்கு அடிக்கடி வர்றது இல்லை, உண்மைதான். ஆனா நாங்க எதுக்காவது அவ உங்களை எதிர்பார்க்கிற மாதிரி வச்சிருக்கோமா.” என்றான்.*

*ஒருநாளும் அதை வாங்கி வா, இதை வாங்கி வா எனக் கதிரேசனோ, அவன் குடும்பத்தினரோ சொன்னதே இல்லை. ஜெய் அமைதியாக இருக்க,*

*“நாங்க பேசினது தப்புதான். நாங்க வேற எதோ நினைச்சோம். ஆனா உங்க குடும்பத்தைத் தப்பா எல்லாம் நினைக்கலை.” என்றார் முத்துக்குமார்.*

*வீட்டுக்கு சென்றால் மதி தன் முகத்தை ஆவலாகப் பார்ப்பாளே, அவனுக்கு என்ன சொல்வது எனக் கதிரேசன் கலங்கி போனான். சுபத்ராவுக்கு அது புரிந்தது.*

*“இவங்களுக்கு நம்ம மதி மாதிரி மாப்பிள்ளை கிடைக்கக் கொடுத்து வைக்கலை. நீங்க ஏன் கலங்குறீங்க? இப்படியெல்லாம் யோசிச்சு யாரும் பொண்ணு தர வேண்டாம். வாங்க போகலாம்.” என்றாள் சுபத்ரா.*

https://t.me/tamilpdfebooks

*“இரும்மா, நீயும் அவசரப்பட்டா எப்படி? நாம பேசலாம்.” என்றார் முத்துக்குமார்.*

*“வாங்க அத்தான். நாம கடை வரை போயிட்டு வருவோம்.” என ஜெய் கதிரேசனை அழைத்துச் சென்றான்.*

*அவர்கள் சென்றதும், “நான் அப்பவே நம்ம மதிக்கு பர்ப்போம்ன்னுதான் சொன்னேன். இதோ இங்க இருக்காளே, இவ பண்ண வேலைதான். இவதான் அக்கா வீடு வேண்டாம், வேற இடம் பார்க்க சொன்னா…” என அவர் அம்மா போட்டு உடைக்க, சுபத்ரா தங்கையைக் கோபமாக முறைக்க, சங்கமித்ரா முகத்தைத் திருப்பினாள்.*

*“நான் எதோ ஜெய் சொல்றான்னு இல்ல நினைச்சேன். சின்னப் பிள்ளை பேச்சை கேட்டுகிட்டா, அவன் வேண்டாம்ன்னு சொன்னான்.”*

*“சங்கமித்ரா, நீ அவ்வளவு பெரிய ஆள் ஆகிட்டியா. உன் அக்கா நாங்க பார்த்த மாப்பிள்ளையைக் கல்யாணம் பண்ணலை. நீ மட்டும் ஏன் இப்படியெல்லாம் பேசிட்டு திரியுற. ஒழுங்கா இருக்கணும்.” என்றார் முத்துக்குமார்.*

*சங்கமித்ராவுக்கு அவள் அப்பா என்றால்… மிகுந்த பயம். அதனால் மறுத்துப் பேசாமல் இருந்தாள்.*

https://t.me/tamilpdfebooks

*கடையில் இருக்கும் போது, மதியழகன் இரண்டு முறை செல்லில் அழைத்து விட, கதிரேசன் எடுக்கவில்லை. தன் குரலில் இருந்தே அவன் கண்டுகொள்வான் என்றுதான் எடுக்கவில்லை.*

*அதைக் கவனித்த ஜெய்க்கு, மதியழகனுக்குச் சங்கமித்ராவை திருமணம் செய்ய விருப்பம் இருக்கிறது போல, அதனால்தான் கதிரேசன் இவ்வளவு பேசுகிறான் எனப் புரிந்தது.*

*கதிரேசனை கல்லாவில் உட்கார வைத்து விட்டு, தனியே சென்று ஜெய் தன் அப்பாவிற்கு அழைத்தான்.*

*மாப்பிள்ளை எங்கே இருக்கிறார் எனக் கேட்டுக் கொண்ட பிறகே முத்துக்குமார் பேச ஆரம்பித்தார்.*

*“என்ன டா? நான் நீ எதோ யோசிக்கிறேன்னு பார்த்தா, நீ அந்தச் சின்னப் பிள்ளை பேச்சை கேட்டுகிட்டு ஆடுற.” என்றார்.*

*“ஆமாம் பா... நான் அவ பேசுறதை பெரிசாவே எடுத்திருக்கக் கூடாது.”*

https://t.me/tamilpdfebooks

*“சரி நீ மாப்பிளையை வீட்டுக்கு கூடிட்டு வா... நாம அவர்கிட்ட சரின்னு சொல்லிடுவோம்.” என்றார். ஜெய் கதிரேசனோடு வீடு திரும்பும் போது, நவீன் இவர்கள் வீட்டையே வண்டியில் சுற்றி வருவதைப் பார்த்தான்.*

*இவன் கண்டிப்பா ஓரண்டைய இழுப்பான் என நினைத்தவன், தன் தங்கையின் திருமணத்தைச் சீக்கிரமே முடிக்க வேண்டும் என நினைத்தான்.*

*இத்தனை நாள் அவன் நவீன் மீது கைவைக்காததற்குக் காரணம். விஷயம் வெளியில் தெரிந்தால்.... இவன் ஏன் அவனை அடிச்சான். அப்ப எதோ நடந்திருக்கு என்றுதான் மற்றவர்கள் நினைப்பார்கள். அந்த ஒரு காரணத்திற்குத் தான் விட்டு வைத்திருக்கிறான்.*

*கதிரேசன் வந்ததும், முத்துக்குமார், மதியழகன் சங்கமித்ரா திருமணதிற்குச் சம்மதம் சொல்லிவிட்டார். அவனுக்கு இப்போதுதான் நிம்மதியாக இருந்தது.*

*“ஒரு தடவை முடிவு பண்ணா பண்ணதுதான் மாமா. பின்னாடி எந்தப் பேச்சும் இருக்கக் கூடாது.” எனக் கதிரேசன் உறுதியாகக் கேட்க,*

*“இல்லை நாங்க மாறமாட்டோம். நீங்க தேதி குறிங்க.” என்றார் முத்துக்குமார்.*

https://t.me/tamilpdfebooks

இரவு படுப்பதற்கு முன், “எல்லாம் ஓகே .” எனக் கதிரேசன் மதியழகனுக்கு மெசேஜ் தட்டி விட, அவன் கனவில் மிதந்தான். இங்கே சங்கமித்ரா கடுப்பில் இருந்தாள்.

# அத்தியாயம் 3

அடுத்து வந்த முஹூர்த்த நாளில். அவர்கள் ஊர் பெரிய கோவிலில் வைத்து, பரிசம் போட்டு முடித்தனர். மதியழகனை தவிர அனைவரும் வந்திருந்தனர்.

“நீ வீட்டையும், கடையையும் பார்த்துக்கோ. நாங்க போயிட்டு வரோம்.” என அவன் அப்பா சொல்லும் போது, அவனால் மட்டும் என்ன செய்ய முடியும். வேறு வழியில்லாமல் சரி என்றான்.

அண்ணன்கள் இருவரும் சங்கமித்ராவை வளைத்து வளைத்துப் புகைப்படம் மற்றும் வீடியோவாக எடுத்து தம்பிக்கு அனுப்பினர். எதோ இதாவது கிடைத்ததே எனச் சந்தோஷப்பட்டுக் கொண்டான்.

புகைப்படத்தில் இருந்து அவனால் எதையும் கண்டுகொள்ள முடியவில்லை. அவள் அடக்கமாக இருப்பதாக நினைத்தான். கோபத்தை அடக்கிக் கொண்டு இருப்பதாக நினைக்கவில்லை.

https://t.me/tamilpdfebooks

துரை தெளிவாகச் சொல்லிவிட்டார். திருமணத்தை அவர்கள் ஊரில்தான் வைக்க வேண்டும் என்று. தங்கள் வீட்டில் கடைசித் திருமணம், அதனால் அங்கே வைக்க வேண்டும் என்றார்.

ஜெய்யின் திருமனத்தை இவர்கள் ஊரில் வைப்பதால்... முத்துகுமாரும் திருமணத்தை அவர்கள் ஊரில் நடத்த ஒத்துக் கொண்டார்.

அடுத்த மாதமே நல்ல முஹூர்த்தம் இருந்ததால்...அன்றே திருமணத்தை வைத்து விட்டனர். முன் தினம் பெண் அழைப்பதாக இருந்தது.

பரிசம் கோவிலில் வைத்ததால் நவீனுக்கு ஒன்றும் தெரியவில்லை. இவன் அவர்கள் ஆளும் இல்லை. அதனால் சங்கமித்ராவுக்குத் திருமணம் நிச்சயம் ஆனது, அவனுக்குத் தெரியாமலே போய் விட்டது.

ஒருநாள் நவீன் சங்கமித்ரா வீட்டுப் பக்கம் சுற்றிக் கொண்டு இருக்க, அந்தப் பக்கம் வந்த தெரிந்த காவலரை நிறுத்திய ஜெய், “சார், இந்தப் பையன் ஒரு மாதிரி இந்த ஏரியாவையே சுத்தி சுத்தி வரான். என்னன்னு பாருங்க.” என்றான்.

அவருக்கு ஜெய்யை நன்றாகத் தெரியும். அதனால், “நான் பார்த்துகிறேன். நீங்க போங்க.” என்றார். நவீன் இவர்களைக் கவனிக்கவில்லை. சிறிது நேரம் நின்று

https://t.me/tamilpdfebooks

பார்த்த காவலருக்கும் அவன் மேல் சந்தேகம் வர, "யாரு நீ? ஏன் இங்கயே சுத்திட்டு இருக்க? ஸ்டேஷன் வா..." என்றதும், நவீன் அரண்டு விட்டான்.

"என் ப்ரண்ட் வீடு தெரியாம தேடினேன் சார். வேற ஒண்ணுமில்லை." எனச் சொல்லிவிட்டு, அங்கிருந்து பதறி அடித்துக் கொண்டு சென்றுவிட்டான். அதன் பிறகு அவன் இந்தப் பக்கமும் வரவில்லை.

திருமணதிற்கு ஒரு மாதமே இருந்ததால்... இரண்டு பக்கமும் வேலை நெட்டி முறித்தது. அதுவும் பத்திரிக்கை வைக்கும் வேலைதான் அதிகம். மூன்று மகன்களை ஆளுக்கு ஒரு பக்கம் அனுப்பி, துரை பத்திரிகை வைத்தார்.

மதியழகன் நிறைய நாள் சங்கமித்ராவை செல்லில் அழைப்போமா என நினைத்து, கடைசியில் முடிவை மாற்றிக்கொள்வான். அவன் அப்பாவுக்குத் தெரிந்தால்... திட்டு விழும்.

இன்னும் ஒரு மாதம் தானே... நேரிலேயே பேசிக் கொள்ளலாம் எனத் தன்னையே சமாதானம் செய்து கொள்வான்.

அங்கே சங்கமித்ராவோ கொதிப்பில் இருந்தாள். இந்த நகை பிடிச்சிருக்கா, புடவை பிடிச்சிருக்கா என்றால்... "ம்ம்... மாப்பிள்ளை பிடிச்சிருக்கான்னு கேட்கலை... இது ரொம்ப முக்கியம்." என்றாள் இடக்காக.

https://t.me/tamilpdfebooks

“இந்தப் புடவை வேணும், இந்த நகை வேணும்ன்னு கேளுங்க. மாப்பிள்ளை எல்லாம் எங்களுக்குப் பார்க்க தெரியும்.” என்றார் அவளின் அம்மாவும் பதிலுக்கு.

அதன் பிறகு அவள் வாயே திறக்கவில்லை. இரண்டு நாட்கள் முன்பு சுபத்ரா வந்துவிட்டாள். ‘தன் கொழுந்தனை வேண்டாம் என்றாள்’ என்ற கோபத்தில் அவளும் தங்கையிடம் பேசவில்லை… ‘இவளால வந்தது இந்தக் கல்யாணம்.’ என்ற கோபத்தில் சங்கமித்ராவும் அவளோடு பேசவில்லை.

முன் தினம் சொந்த பந்தங்களை அழைத்து, வீட்டில் சாமி கும்பிட்டுவிட்டு, மதியம் உணவு அருந்தியதும், காரில் மாப்பிள்ளையின் ஊருக்கு சென்றனர்.

நேராகக் கல்யாண மண்டபத்திற்குச் சென்றுவிட்டனர். அங்கே மதியழகனை தவிர அனைவரும் இருந்தனர். இவர்களை வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றனர்.

சங்கமித்ரா மனப் பெண் அறையில் இருந்தாள். பிரயாணம் செய்து வந்தது களைப்பாக இருக்க, அமைதியாக உட்கார்ந்து இருந்தாள்.

அவளை முகம் கழுவ வைத்து, தலைவாரி பூ சூடி, வேறு புடவை மாற்றி விட்டனர். பெண் பார்க்க என்று யாரவது வருவார்கள் அல்லவா.

https://t.me/tamilpdfebooks

*பெண் பக்க உறவினர்கள், மாப்பிள்ளையின் வெளியூர் சொந்தங்கள் என எல்லோரும் மண்டபத்தை ஆக்ரிமிப்புச் செய்ய, உறவினர்களைச் சந்தித்த மகிழ்ச்சியில், ஒருவரோடு ஒருவர் பேசி மகிழ்ந்தனர். சின்ன வாண்டுகள் எல்லாம் மேடையில் ஏறி ஆடிக் கொண்டும், பாடிக் கொண்டும் இருந்தனர்.*

*மதியழகன் உள்ளூரில் விட்டு போனவர்களுக்கு எல்லாம் பத்திரிகை வைத்துக் கொண்டு இருந்தான். அவனைப் பார்த்த அவனின் நண்பன் வெங்கடேஷ், “டேய் மாப்பிள்ளை ! என்ன டா இன்னும் இங்க சுத்திட்டு இருக்க. மண்டபத்துக்குப் போக வேண்டாமா? போய்ச் சீக்கிரம் ரெடி ஆகு. நான் மத்தவங்களைக் கூடிட்டு வரேன்.” என்றான்.*

*மதியழகன் சந்தோஷமாக வீட்டிற்குச் சென்று குளித்து, புதுப் பேன்ட் ஷர்ட் அணிந்து தயார் ஆனான். அப்போது அவனின் நண்பர்களும் வந்துவிட… அவனைக் கேலி கிண்டல் செய்து ஓட்டினர்.*

*ஆளுக்கொரு வண்டியில் மண்டபம் சென்று சேர்ந்தனர். ஆனால் உள்ளே எல்லாம் போகவில்லை. வெளியேவே இன்று அரட்டை அடித்துக் கொண்டு இருந்தனர். அப்போது மேலும் சில நண்பர்கள் வந்து சேர்ந்து கொண்டனர்.*

*“டேய் மாப்பிள்ளை இவன் கல்யாணத்துல நடந்த கூத்து தெரியுமா? நீ இவன் கல்யாணத்துக்கு வரலையே?” என வெங்கடேஷ் நட்ராஜை காட்டி, மதியழகனிடம் கேட்க,*

https://t.me/tamilpdfebooks

*“அதைப் போய் ஏன் டா இப்ப சொல்ற?” என கேட்டான் நட்ராஜ்.*

*“எனக்கு அப்ப பரீட்சை வர முடியலை. நீ சொல்லு என்ன ஆச்சு?” என மதியழகன் ஆர்வம் தாங்காமல் கேட்டான்.*

*“இவன் கல்யாணத்துல பெண்ணே வந்து ஆரத்தி எடுக்குது, அங்கயும் இங்கயும் நடக்குது. எல்லார்கிட்டயும் நின்னு பேசுது, எங்களுக்கு எல்லாம் ஒரே ஆச்சர்யம்.”*

*“பிறகுதான் தெரியுது. அது பெண்ணோட தங்கச்சியாம், ரெண்டும் ரெட்டை பிறப்புங்க. அச்சு அசல் ஒரே மாதிரி இருக்குங்க டா…”*

*“ஏன் டா கல்யாணப் பெண்ணுக்கும், தங்கச்சிக்கும் கூடவா வித்தியாசம் தெரியாது?” மதி சிரிப்புடன் கேட்க,*

*“அது எங்க தப்பு இல்லை டா மாப்பிள்ளை. அந்தப் பொண்ணும் கல்யாணப் பொண்ணு மாதிரிதாண்டா சிங்காரிச்சு இருந்தது. அப்புறம் சந்தேகம் வருமா இல்லையா?”*

*“ஹே நட்டு, இந்தக் கூத்து வேற நடந்துச்சா?” மதியழகன் சிரிக்க,*

https://t.me/tamilpdfebooks

*“அதை விட முக்கியம், நான் இவன் அண்ணிகிட்ட சொல்லிட்டு வந்தேன். ரெண்டு பொண்ணும் ஒரே மாதிரி இருக்கு, நம்ம பையன் மாத்தி முதல்ராத்திரி கொண்டாடிட போறான். எதுக்கும் பார்த்துக்கங்கன்னு சொல்லிடு வந்தேன்.” என வெங்கடேஷ் சிரிக்காமல் சொல்ல, அதைக் கேட்டு மற்றவர்கள் விழுந்து விழுந்து சிரித்தனர்.*

*“இப்படியா டா எங்க அண்ணிகிட்ட சொல்லுவா?”*

*“பின்ன அவனுங்கதான் அறிவு இல்லாம ரெண்டு பொண்ணுங்களுக்கும் ஒரே மாதிரி டிரஸ் பண்ணி விடுறாங்க. யாரு பொண்ணு தங்கச்சின்னு எல்லாம் ஆராய்ச்சி பண்ணிட்டு இருக்க முடியுமா... நீ பாட்டுக்கப் பாஞ்சுட்டா என்ன பண்றது? அப்புறம் ரெண்டையும் வச்சிகிட்டு நீ இல்ல சமாளிக்கணும். அதனால உன் நல்லதுக்குதான் செஞ்சேன் மாப்பிள்ளை.”*

*வெங்கடேஷ் சொன்னதைக் கேட்டு, நட்ராஜ் எனப்படும் நட்டு வெட்கப்பட, அப்போது ஒரு பெண் வந்து வெங்கடேஷ் அண்ணா எனக் குரல் கொடுத்து விட்டுச் சென்றது.*

*“சரி உள்ள போகலாம்.” வெங்கடேஷ் சொன்னதும், மதியழகன் அவனைப் பார்க்க, வெங்கடேஷும் பதிலுக்கு அவனைப் பார்த்தான். அவன் சொல்லாமலே விஷயம் மதியழகனுக்குப் புரிய.. இதயம் இன்பமாகத் துடித்தது.*

https://t.me/tamilpdfebooks

*மற்றவர்களைக் கழட்டிவிட்டு, வெங்கடேஷும், நட்ராஜும் மட்டும் உடன் சென்றனர். அவர்கள் இருவரும் தான் அவனுக்கு நெருக்கம்மும் கூட.*

*இவர்கள் உள்ளே சென்றபோது, தோழியர் புடைசூழ சங்கமித்ரா சாப்பிடுவதற்காக வந்து கொண்டிருந்தாள்.*

*"டேய் மச்சான், நீ ரொம்ப விவரம் டா... வெளியே இருந்தாலும் உள்ளேயும் ஒரு கண்ணு இருக்கு." நட்ராஜ் சொல்ல,*

*"ம்ம்... நம்ம மாப்பிள்ளைக்கு நாம பண்ணாம யாரு பண்ணுவா?" என்றான் வெங்கடேஷ் சாதாரணமாக.*

*சங்கமித்ராவுக்குத் தெரியும் அவளைத் தான் எல்லோரும் பார்த்துக் கொண்டிருப்பார்கள் என்று, அதனால் குனிந்த தலை நிமிராமல் நடந்து வந்தாள்.*

*எதிரே மதியழகன் நண்பர்கள் கேலி கிண்டலுக்கு இடையே, தன்னவளை பார்த்தும் பார்க்காதது போல வந்தான். ஆனால் முகத்தில் இருந்த மலர்ச்சியை, அவனால் மறைக்க முடியவில்லை.*

https://t.me/tamilpdfebooks

எதிரே யாரோ வரவும், அவர்கள் விலகி போவார்கள் எனச் சங்கமித்ரா நினைக்க, ஆனால் வந்தவர் நகரவில்லை என்றதும், மெதுவாகப் பார்வையைக் காலில் இருந்து மேலே ஏற்றினாள்.

அது போய்க் கொண்டே இருக்க… அந்த வளர்ந்து கெட்டவனா இருக்குமோ… என நினைத்த போது, சரியாக நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்த்தும் இருந்தாள்.

மதியழகன் அவளைப் பார்த்ததும் பெரிதாகப் புன்னகைக்க, அவன் பார்வையில் பாவை அவள் தடுமாறினாள்.

“எப்ப வந்தீங்க மித்ரா?” அவன் சாதாரணமாகக் கேட்க, மற்றவர்களை வைத்துக் கொண்டு பேசாமல் இருக்க முடியுமா?

“சாயந்தரம் வந்தோம்.” என்றாள்.

வேறு என்ன கேட்பது மதியழகன் யோசிக்க, அவனுக்கு அந்த வாய்ப்பை கொடுக்காமல் நண்பர்கள் பேச்சில் நுழைந்தனர்.

https://t.me/tamilpdfebooks

*"டேய் ! எங்களை அவங்களுக்கு அறிமுகப் படுத்துடா." அவர்கள் சொன்னதும், நண்பர்களை அவளுக்கு அறிமுகம் செய்தான்.*

*"இவன் வெங்கடேஷ், நாங்க சின்ன வயசில இருந்தே ப்ரண்ட்ஸ். இவனும் இதே ஊர்ல கடை வச்சிருக்கான்."*

*"இவன் நடராஜ் என்னோட சீனியர். கணக்கு வாத்தியா இருக்கான். இதே ஊருங்கிறதுனால ப்ரண்ட் ஆகிட்டோம்."*

*"தங்கச்சி எனக்குக் கல்யாணம் ஆகிடுச்சு? ரெண்டு பசங்க இருக்காங்க. என் பொண்டாட்டி காலையில வருவா, உனக்கு அப்ப காம்மிகிறேன்." என நட்ராஜ் வாயெல்லாம் பல்லாகச் சொல்ல,*

*"இப்ப ஒத்த யானை பார்த்த... நாளைக்கு யானைக் கூட்டம் வரும் பாரு." என வெங்கடேஷ் சொல்ல, சங்கமித்ரவுக்குச் சிரிப்பு வந்தவிட்டது. கிட்டத்தட்ட நட்ராஜ் பாதி யானை சைசுக்கு தான் இருந்தான். ஆனாலும் தவறாக நினைத்துக் கொள்வானோ என அவள் பயந்து போய்ப் பார்க்க, நட்ராஜ் சிரித்துக் கொண்டுதான் இருந்தான்.*

*அவளின் மனம் புரிந்தது போல, "மாப்பிள்ளை அதுக்கு எல்லாம் கோவிச்சிக்க மாட்டான்." என மதியழகன் நட்ராஜின் தோளில் கைபோட,*

https://t.me/tamilpdfebooks

“உண்மைய தான சொன்னோம்.” என்றான் வெங்கடேஷ்.

பக்கத்தில் இருந்த தோழி சங்கமித்ராவை இடிக்க, “நாங்க போகணும்.” என்றாள் அவள் பொதுவாக.

“சரி நாளைக்குப் பாப்போம்.” என நண்பர்கள் விலகி நிற்க, சங்கமித்ரா அவர்களைக் கடந்து சாப்பிடும் அறை நோக்கி சென்றாள்.

அங்கிருந்த உறவினர்களை மதியழகன் நலம் விசாரிக்க, பிறகு இவர்களும் சென்று, பந்தியில் அவளுக்கு எதிரில் அமர்ந்தனர்.

இலையில் சோறு போட்டதும், நட்ராஜ் சாம்பாருக்காகப் பெரிய குழி பறிக்க, “போன வாரம் ரவி வீட்டு கல்யாணத்துல, சாப்பாடு ரொம்பக் கேவலமா இருந்துச்சு. அதுக்கே நம்ம மாப்பிள்ளை நாலு ரவுண்டு போனான். இன்னைக்கு டேஸ்டா வேற இருக்கு... எத்தனை ரவுண்டு போவானோ.” என வெங்கடேஷ் சொல்ல, மதியழகன் நட்டுவை பார்த்து பெரிதாக புன்னகைத்து விட்டு சாப்பிட ஆரம்பித்தான்.

https://t.me/tamilpdfebooks

*நண்பர்களிடம் பேசிக் கொண்டு இருந்தாலும், பார்வையால் சங்க மித்ராவை வருடவும் மறக்கவில்லை. ஆனால் அவள் இவன் பக்கம் பார்வையைத் திருப்பவே இல்லை.*

*சாப்பிட்டு முடிக்கும் வரை, அவள் பார்ப்பாளா எனப் பார்த்துக் கொண்டே இருந்தான்.*

*“அதெல்லாம் விவரமா இருப்பாங்க. நீ பார்க்கிறது தெரிஞ்சு இருக்கும். நீ பார்க்காத போது பார்ப்பாங்க பாரு.” என வெங்கடேஷ் கை கழுவ எழுந்து சென்றான்.*

*வெங்கடேஷ் அதிகம் படிக்கவில்லை. பள்ளி படிப்பு மட்டும்தான். படித்து முடித்த கையோடு, அவன் அப்பா கடைக்குச் சென்றுவிட்டான். ஆனாலும் உலக அறிவு உண்டு. அவன் கடைக்கு வருபவர்களிடமே அவ்வளவு பேசுவான். மனிதர்களை எளிதாகப் புரிந்தும் கொள்வான்.*

*மதியழகன் சாப்பிட்டுக் கை கழுவி வரும்போதுதான் ஜெய் அவனைப் பார்த்தான்.*

*“சாரி மாப்பிள்ளை, நான் உங்களைக் கவனிக்கலை.” என ஜெய் சொல்ல,*

https://t.me/tamilpdfebooks

*"நீங்க எங்க ஊருக்கு வந்திருக்கீங்க. நாங்கதான் உங்களைக் கவனிக்கனும். வாங்க சாப்பிடுங்க." என்றான் மதியழகன் உபசரிப்பாக. அவன் பேசும் விதம் ஜெய்யைக் கவர்ந்தது.*

*"நான் சாப்பிடுறேன். அப்புறம் ரொம்ப வேலையா…. பெரிய மாப்பிள்ளை சொன்னாரு, நீங்க பத்திரிகை வச்சிட்டு இருக்கிறதா."*

*"ஆமாம், சில பேருக்கு விட்டு போச்சு. அதுதான் வச்சிட்டு இருந்தேன்."*

*இருவரும் பேசிக் கொண்டு இருந்தபோது, அவர்களைத் தாண்டி சங்கமித்ரா கைகழுவ சென்றாள். சாப்பிட்டுவிட்டு வந்தவளை, யாரோ உறவினர் நிறுத்தி வைத்து பேசி… ஒருவழியாக இப்போதுதான் விட்டார். கூட வந்த பெண்கள் அப்போதே கைகழுவி விட்டு சென்றிருந்தனர்.*

*அது திருகு குழாய் அல்ல… மேல் பக்கத்தை அழுத்தினால் தண்ணீர் வரும். அவளும் ஒவ்வொரு குழாயாக அழுத்தி பார்க்கிறாள், தண்ணீர்தான் வரவில்லை.*

*மதியழகன் ஜெய் இருவருமே அவள் போராடுவதைப் பார்த்தனர். "அண்ணா…" எனச் சங்கமித்ரா குரல் கொடுக்க, அவனுக்கு முன்பு மதியழகன் சென்றான். அதைப் பார்த்து புன்னகையுடன் ஜெய் அங்கிருந்து கழண்டு கொண்டான்.*

https://t.me/tamilpdfebooks

*“சரியா சாப்பிட மாட்டியா நீ... ஒரு குழாய் அழுத்த கூடத் தெம்பு இல்லை.” எனக் கேட்டுக் கொண்டே , குழாயில் இருந்த அவள் கைமீது தன் கைவைத்து, லேசாக அழுத்த நீர் வந்தது.*

*அவன் கைப்பட்டதும் பதட்டத்தில் அவள் கையை உருவ முயல, “முதல்ல கழுவ.” என்றான் கொஞ்சம் சத்தம் உயர்த்தி.*

*அவள் கை கழுவியதும், தன் கையை எடுத்தவன், “கல்யாணம் ஆகப்போற பொண்ணு நல்லா சாப்பிட வேண்டாமா.” என்றான்.*

*“ஏன் என் கூட நீங்க தினமும் சண்டைப் போட போறீங்களா?” என்றாள் வாய் துடுக்காக.*

*அவள் சொன்னதில் சிரிப்பு வந்தாலும், “யோசிக்காம பேசுற பார்த்தியா?” என்றான்.*

*“அட்வைஸ் பண்ண ஆரம்பிச்சுடீங்களா. என்ன இன்னும் பண்ணலைன்னு நினைச்சேன். உங்களுக்கு என்னைப் பார்க்கும் போது எல்லாம் அட்வைஸ் பண்ணத் தான் தோணுமா?” அவள் எரிச்சலாகக் கேட்க,*

https://t.me/tamilpdfebooks

*“இதுக்கு நாளைக்குப் பதில் சொல்றேன்.” என்றான் புன்னகையுடன் . ஆனால் அதைச் சங்கமித்ரா கவனித்தால் அல்லவா…*

*அதற்குள் அங்கு வந்த நட்ராஜ், “டேய் எவ்வளவு நேரம் டா பேசுவீங்க? இந்தப் பக்கம் கை கழுவ வர்றவங்களை அந்தப் பக்கம் அனுப்பிட்டு இருந்தோம். உன் அப்பா இந்தப் பக்கம் வர்றாரு. வெங்கடேஷ் அவரைப் பிடிச்சு வச்சு பேசிட்டு இருக்கான்.” என்றான் பதட்டமாக.*

*“நீ போ மித்ரா.” என்றவன், அவள் உள்ளே சென்றதும், மண்டபத்தின் பின்பக்கம் செல்ல, உடன் நட்ராஜ் சென்றான்.*

*சங்கமித்ரா உள்ளே வரவும், அவள் தோழிகள் சேர்ந்துகொள்ள, “எங்க டி போனீங்கஎன்னை விட்டுட்டு?” என அவள் கேட்க,*

*“எங்களை உன்கிட்ட வரவிடாம தான். அவர் ப்ரண்ட்ஸ் நின்னாங்களே, நாங்க என்ன பண்றது?” என்றனர்.*

https://t.me/tamilpdfebooks

சங்கமித்ரா களைப்பில் போய்ப் படுத்ததும் உறங்கி விட, அதிகாலையில் அவளை எழுப்பிக் குளிக்கச் செய்து, அலங்காரம் செய்கிறேன் என ஒருவழியாக்கி, மணமேடையில் மதியழகன் அருகில் நிறுத்தியும் விட்டனர்.

மணமக்களைச் சுற்றி அவ்வளவு பேர்.. இதில் கழுத்தில் வேறு இரண்டு பெரிய மாலைகள். கழுத்தை அவளால் நிமிர்த்தவே முடியவில்லை. இதில் என்ன நடக்கிறது என அவள் பார்ப்பதற்குள், கெட்டி மேளம் ஒலிக்க... மதியழகன் அவள் கழுத்தில் தாலி சங்கலியை அணிவித்து இருந்தான்.

கழுத்தில் தாலியை பார்த்ததும்தான் திருமணம் ஆகிவிட்டதே தெரிந்தது.

போச்சா ! இனிமே நமக்கு இந்த ஜெயில் வாழ்க்கைதான் என நினைத்ததும், அவளுக்குக் கண்களில் கண்ணீர் பெருகியது.

இவளே மனதில் சிலவற்றை உருவகப்படுத்திக் கொண்டாள். நல்லதை நினைத்து சென்றால்... நல்லதே நடக்கும் நடக்கும். இவள் புகுந்த வீட்டை சிறைச்சாலை என நினைத்து செல்கிறாள்….. அப்போது அவளுக்கு அப்படித்தான் இருக்கும்.

மங்கை அவள் எண்ணத்தை மணாளன் அவன் மாற்றுவானா?

# அத்தியாயம் 4

https://t.me/tamilpdfebooks

*காலை ஏழரை ஒன்பது முஹூர்த்தம் என்பதால்.... சாப்பிட்டதும் உள்ளூர் மற்றும் வெளியூர் ஆட்கள் கிளம்பி விட, மாப்பிள்ளையின் பக்கம் நெருங்கிய உறவினர்களும், பெண் வீட்டினர் தாங்கள் பஸ் பிடித்து அழைத்து வந்த சொந்தங்கள் மட்டும் இருந்தனர். பன்னிரெண்டு மணிக்கு மதிய உணவு முடிந்ததும் அவர்களும் கிளம்பி விடுவார்கள்.*

*நல்ல நேரத்தில் புதுமணத் தம்பதிகள் முதலில் மாப்பிள்ளை வீடு சென்றனர். அவர்கள் வீட்டிற்கு வருவதற்குள், சுபத்ரா ஆரத்தி எடுக்கத் தயார் செய்தவள், "நீ எடுக்கிறியா ரேவதி?" எனச் சாதரணமாகக் கேட்க,*

*"உங்க தங்கச்சி தானே நீங்களே எடுங்க." என ரேவதி இடக்காகப் பதில் கொடுக்க,*

*"என்னது உங்க தங்கச்சியா? அப்ப உனக்கு அந்தப் பிள்ளை யாரு? எக்குத் தப்பா பேசிட்டு இருந்த, பல்லை உடைச்சிடுவேன்." எனக் கருணா கோபத்தில் கொந்தளிக்க,*

*"ஆத்தி ! இந்த ஆளு இருக்கிறது தெரியாம பேசிட்டேனே." என ரேவதி மனதிற்குள் நொந்து கொள்ள, 'பாரு இதுக்குதான் சொன்னேன்.' என்பது போலத் துரை, தன் மனைவி நீலாவேணியை ஒரு பார்வை பார்த்தார்.*

https://t.me/tamilpdfebooks

*“அக்கா தங்கச்சி எல்லாம் அவங்களுக்குள்ள, அவளும் இந்த வீட்டு மருமகள்தான், அதனால பார்த்து சூசனமா நடந்துக்கோங்க.” நீலவேணி பொதுவாகச் சொன்னாலும், அது தனக்குத்தான் எனச் சுபத்ராவுக்குப் புரிந்தது.*

*மதியழகன் சங்கமித்ரா இருவரும் காரில் இருந்து இறங்க, காரில் கொஞ்சமும், பின்னே நடந்தும் பல பேர் வந்தனர். ‘மாப்பிள்ளை வீடு இங்கனதான் இருக்கான். வாங்க, போய் ஒரு எட்டு பார்த்திட்டு வருவோம்.” என ஒரு சிலரை தவிர மற்ற அனைவருமே வந்திருந்தனர்.*

*கருணா, ரேவதிதான் ஆரத்தி எடுக்க வேண்டும் எனச் சொல்லிவிட்டான். அதனால் மணமக்களுக்கு அவள்தான் ஆரத்தி எடுத்தாள். சங்கமித்ரா கையில் குத்து விளக்குடன் வலது காலை எடுத்து வைத்து உள்ளே வர… பின்னே வந்த அவளது சொந்தங்கள், சீர்வரிசை கொண்டு வந்தனர்.*

*செய்ய வேண்டிய சடங்குகள் எல்லாம் முடிந்து, சங்கமித்ராவை ஹாலில் இருந்த ஜமுக்காளத்தில் உட்கார வைக்க, அவளோடு உறவுப் பெண்களும் உட்கார்ந்து இருந்தனர்.*

*துரை சங்கமித்ராவின் அப்பா மற்று தாய் மாமன்களுடன் ஹாலில் உட்கார்ந்து பேச…. மதியழகன், ஜெய், கதிரேசன், கருணா என இளவட்டங்கள், ஒருபக்கம் நின்று பேசிக் கொண்டு இருந்தனர்.*

https://t.me/tamilpdfebooks

*சுபத்ரா, ரேவதி, எழிலரசி மூவரும் வந்திருந்த பெண் வீட்டினருக்குக் குடிக்கக் கலர் ஊற்றிக் கொடுத்துக் உபசரித்தனர்.*

*கல்யாணம் ஆகிடுச்சு, இனிமே இங்க இருந்து தப்பிச்சா போக முடியும், நமக்கு இந்த ஜெயில்தான் என்ற மனநிலைக்குச் சங்கமித்ரா வந்திருந்தாள். அதனால் முகத்தில் அப்படியொரு அமைதி.*

*அதை வைத்து மாப்பிள்ளை வீட்டினர், "பொண்ணு ரொம்ப அமைதி." என்பது போல முடிவு செய்து கொண்டு, அதைத் தங்களுக்குள் பேசியும் கொண்டனர்.*

*இவளா அமைதி என நினைத்த மதியழகனுக்குச் சிரிப்பு வர, அதை வாய்க்குள் அடக்கினான்.*

*"இப்ப எந்திரிச்சு நான் டான்ஸா ஆட முடியும்? அமைதியாம் அமைதி." எனச் சங்கமித்ரா மனதிற்குள் கொந்தளித்துக் கொண்டு இருந்தாள்.*

*சிறிது நேரத்தில் சங்கமித்ராவின் பிறந்த வீட்டினர் கிளம்ப, அதுவரை அமைதியாகக் காட்டிக் கொண்டவாளால் அதற்கு மேல் முடியவில்லை.*

https://t.me/tamilpdfebooks

ஒவ்வொருவராக அவளிடம் சொல்லிக் கொண்டு வெளியில் செல்ல, ஜெய்க்கு தங்கையின் முகம் பார்க்கவே கஷ்ட்டமாக இருந்தது.

சுபத்ரா திருமணம் முடிந்து சென்றவுடன், இவர்கள் இருவர் மட்டும் தானே... எது என்றாலும் சங்கமித்ரா அவனைத் தான் தேடுவாள், அதனால் இருவருக்கும் நெருக்கமும் அதிகம்.

ஜெய் அவளிடம் சொல்லிக் கொண்டு கிளம்ப, “என்னை விட்டு போகாத அண்ணே.” என அழுதபடி, அவன் கையைப் படித்தவள், அவள் தோளில் சாய்ந்து அப்படியொரு அழுகை.

யாரின் சமாதானத்தையும் அவள் கேட்கும் நிலையிலேயே இல்லை.

“அதுதான் அக்கா இருக்கா இல்ல, அவ உன்னைப் பார்த்துப்பா.” சங்கமித்ராவின் அம்மா அவளின் முதுகை வருட, அப்போதும் அவள் அண்ணன் தோளில் இருந்து தலையை நிமிர்த்தவே இல்லை.

ஜெய்க்கும் கஷ்ட்டம்தான், இவள் அழுகிறாள்...அவனால் அதுவும் முடியவில்லை. மதியழகன் எதுவும் நினைத்துக் கொள்வானோ எனச் சங்கடமாக அவன் முகம் பார்க்க, அவன் இருவரையும் புரிந்து கொண்டது போலத்தான் பார்த்துக் கொண்டு இருந்தான்.

https://t.me/tamilpdfebooks

*அவனும் எழிலரசி திருமணம் செய்து போகும் போது, இப்படி அழுதவன் தானே. இவளாவது பரவயில்லை அவன் தேம்பி தேம்பி அழுக, "மச்சான், நான் அவ்வளவு கொடுமைக்காரன் எல்லாம் இல்லை. உங்க அக்காவை நல்லா பார்த்துப்பேன்." என எழிலரசியின் கணவன் சொல்ல.. அதைக் கேட்டு எல்லோரும் கொல்லென்று சிரித்து இருந்தனர்.*

*"இவன் அக்கா கல்யாணத்துல இவன் அடிக்காத கூத்தா?" என இப்போது அதை யாரோ ஒருவர் சொல்ல, உறவுகள் வாய்விட்டு சிரிக்க, மதியழகன் கூட லேசாக வெட்கப்பட்டான்.*

*அது வரை விலகி இருந்த மதியழகன் சங்கமித்ராவின் அருகே வர, தங்கையைத் தன் தோளில் இருந்து நிமிர்த்திய ஜெய், அவளை மதியழகனின் கையில் பிடித்துக் கொடுத்தான்.*

*"இங்கப் பாரு... இனி இவரைத்தான் நீ கெட்டியா பிடிச்சிக்கனும்." என்றான். அதைக் கேட்டு மதியழகன் பெரிதாகப் புன்னகைத்தான்.*

*சங்கமித்ரா முடியாது என்பது போல எதோ சொல்ல வர, அதை உணர்ந்த சுபத்ரா இடையில் புகுந்தாள்.*

https://t.me/tamilpdfebooks

"இன்னைக்குச் சாயந்திரம் நம்ம ஊருக்குதான் போறோம். அதனால இப்ப அழுகாம அவங்களை அனுப்பி வை." என்றாள்.

அப்படியா என்பது போல, சங்கமித்ரா நிமிர்ந்து பார்க்க, "ஆமாம் டி, முதராத்திரி நம்ம வீட்ல தான வைக்கணும். அப்புறம் நம்ம வீட்ல விருந்து இருக்கு, அது முடிஞ்சுதான் இங்க வருவீங்க." அவளின் அம்மா மெதுவான குரலில் சொல்ல, அதன் பிறகு சங்கமித்ரா கொஞ்சம் அமைதி அடைந்தாள்.

அவள் விலகி நிற்க, சங்கமித்ரா வீட்டினர் கிளம்பினர். முத்துக்குமார் துரையிடம், "சம்பந்தி, நாளை மறுநாள் நம்ம வீட்ல விருந்து இருக்கு. எல்லோரும் கண்டிப்பா வந்திடனும். நன் நாளைக்குப் போன் பண்றேன். வேற யாரு யாருக்கு சொல்லணும் சொல்லுங்க, போன்ல சொல்லிடலாம்." என முறையாக அழைத்து விட்டே சென்றார்.

"மண்டபத்தில சாப்பாடு ரெடியா இருக்கு. எல்லோரும் சாப்பிட்டுதான போகணும்." என்ற துரை, "டேய் கதிரு, கருணா… முன்னாடி போய் அவங்களைக் கவனிங்க, நான் பின்னாடி வரேன்." என்றதும், மகன்கள் இருவரும் விரைந்து, தங்கள் வண்டியில் மண்டபம் நோக்கி சென்றனர்.

பெண் வீட்டினர் மதிய உணவு அருந்தியதும், அவர்கள் வந்த பஸ்சில் ஏறிக்கொள்ள, இன்னொரு காரில் முத்துக்குமார் அவரது மனைவி இன்னும் சிலரும் ஏறிக்கொள்ள, அவர்களை அனுப்பி விட்டு, தங்கையை அழைத்துச் செல்ல வேண்டி, ஜெய் மட்டும் அங்குத் தங்கினான்.

https://t.me/tamilpdfebooks

சங்கமித்ராவுக்கு இன்னும் சுபத்ரா மீது கோபம்தான். அதனால் அவளிடம் கேட்காமல், ரேவதியிடம் அக்கா, “நான் பாத்ரூம் போகணும்.” என்றாள் மெதுவாக.

அவங்க அக்காவை கேட்காம நம்மைக் கேட்கிறாளே என ரேவதி அதில் கொஞ்சம் குளிர்ந்து போய், “வா..” என மாடிக்கு அழைத்துச் சென்றாள். அது சுபத்ராவின் அறைதான். இரவில் கதிரேசனின் குடும்பம் அங்குதான் இருக்கும்.

சங்கமித்ரா பாத்ரூமிற்குள் சென்று கதவைத்தான் சாற்றி இருப்பாள். அங்கே மதியழகனும் வந்துவிட்டான்.

“நீ இங்க என்ன பண்ற?” எனக் கேட்ட ரேவதியிடம்,

“ஒரு அஞ்சு நிமிஷம் ப்ளீஸ்...” என மதியழகன் செய்கையில் காட்ட,

“சீக்கிரம் வந்திடுங்க. இல்லைனா அத்தை திட்டப்போறாங்க.” எனச் சொல்லிவிட்டு ரேவதி கீழே இறங்கி சென்றாள்.

https://t.me/tamilpdfebooks

*மனைவி வருவதற்காக மதியழகன் ஹாலில் உட்கார்ந்து இருந்தான். சங்கமித்ரா பாத்ரூமில் இருந்து வெளியே வந்தவள், மதியழகனை அங்கே எதிர்பார்க்கவில்லை.*

*அவள் கீழே செல்லப் போக, விரைந்து அவளிடம் சென்றவன், அவளைத் தள்ளிக் கொண்டு பக்கத்தில் இருந்த படுக்கை அறைக்குச் சென்றான்.*

*"என்ன பண்ணப் போறீங்க?" சங்கமித்ரா பயத்துடன் கேட்க, மதியழகனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது.*

*"என்ன பண்ணலாம், நீயே சொல்லேன்." என்றான் சிரிப்பை வாய்க்குள் அடக்கியபடி.*

*"நீங்க வேணா உட்கார்ந்து சட்டியும் பானையும் செய்ங்க. நான் போகணும்." என்றாள்.*

*"அதெல்லாம் வேண்டாம், ரெண்டு நிமிஷம் என்னோட பேசேன்." என்றான் ஆசையாக.*

https://t.me/tamilpdfebooks

முதல் கேள்வியே, "நாம எப்ப எங்க வீட்டுக்கு போவோம்." என்றுதான் கேட்டாள்.

அதில் நொந்து போனாலும், "அது சாயங்காலமா போவோம்." எனப் பதிலும் கொடுத்தவன், "உனக்கு எங்க வீடு பிடிச்சிருக்கா?" என ஆர்வக் கோளாறில் அவன் ஒரு கேள்வி கேட்டு வைக்க,

"பிடிக்கலைன்னு சொன்னா என்ன பண்ணுவீங்க?" என இடக்காகப் பதில் கேள்வி ஒன்று சங்கமித்ரா கேட்டு வைத்தாள்.

"திருந்த மாட்ட டி நீன்னு, எப்பவும் எடுக்கு மடக்கா பேசுறதே வேலை."

"நான் அப்படித்தான்னு தெரியும் இல்ல, அப்புறம் ஏன் கல்யாணம் பண்ணீங்க?" சங்கமித்ரா முறைத்துக் கொள்ள,

"அது உன்னைப் பிடிச்சு தொலைச்சிருச்சு, என்ன பண்றது?" என்றான். கோபமாக எல்லாம் சொல்லவில்லை, புன்னகையுடந்தான் சொன்னான்.

https://t.me/tamilpdfebooks

அப்போது கீழே இருந்து ரேவதி, "மதி..." எனக் குரல் கொடுக்க, அவசரமாகச் சங்கமித்ராவை அணைத்து, அவள் கன்னத்தில் முத்தமும் கொடுத்துவிட்டு, மதியழகன் வேகமாகக் கீழே இறங்கி சென்றான்.

இப்போ என்ன நடந்தது எனச் சங்கமித்ரா திகைத்து போய் நிற்க, சுபத்ராவின் இரண்டு பிள்ளைகளும் சித்தி என அவளைத் தேடி வந்துவிட்டனர். அவர்களுடன் பேசிக் கொண்டே கீழே இறங்கி வந்தாள்.

அங்கே ஹாலில் நல்லபிள்ளை போல, மதியழகன் உட்கார்ந்து பேசிக் கொண்டு இருந்தான். சங்கமித்ரா அவனைப் பார்த்து முறைக்க, மற்றவர்கள் இருந்ததால்... அவளைப் பார்த்தும் பார்க்காதது போல் இருந்தான்.

நல்லவேளை வீட்டில் அப்போது பெரியவர்கள் யாரும் இல்லை. எல்லோரும் மண்டபத்திற்குச் சாப்பிட சென்று இருந்தனர்.

சாப்பிட போவோம் என மாப்பிள்ளையும் பெண்ணையும் அழைத்துக் கொண்டு மிச்சம் இருந்தவர்களும் கிளம்ப, எல்லோரும் நடந்தே தான் மண்டபம் சென்றனர்.

ஊரில் உள்ளவர்களுக்கு எல்லாம், யார் பொண்ணு மாப்பிள்ளை என்று தெரிய வேண்டாம். அதனால் இப்படி நடந்து செல்வதுதான் வழக்கம்.

https://t.me/tamilpdfebooks

அதற்குள் விஷயம் எப்படித்தான் தெரியுமோ… அவரவர் வாசலில் நின்று, மாப்பிள்ளையும் பெண்ணும் வருவதைப் பார்த்து, தங்களுக்குள் பேசி சிரித்துக் கொண்டனர்.

வழியில் வெங்கடேஷும், நடராஜும் அவர்களுடன் சேர்ந்துகொள்ள, பேசிக்கொண்டே மண்டபம் வந்து சேர்ந்தனர்.

எல்லோரும் நேராகச் சென்று சாப்பிட அமர, மாப்பிள்ளையும் பெண்ணையும் ஊட்டி விடச் சொல்லி, நண்பர்கள் ரகளைச் செய்ய, விருப்பம் இல்லையென்றாலும், மற்றவர்களுக்காகச் சங்கமித்ரா அவனுக்கு ஊட்டி விட்டாள். அவள் எதோ கடமையாகச் செய்ய, மதியழகன் அதையே விரும்பி செய்தான்.

சாப்பிட்டு முடித்ததும் வீட்டு ஆட்கள் மட்டும்தான் மண்டபத்தில் இருந்தனர். ஆளுக்கொரு பக்கம் மண்டபத்திலேயே உட்கார்ந்து பேசிக் கொண்டு இருந்தனர். மதியழகன் சங்கமித்ராவுடன் வெங்கடேஷும், நட்ராஜும் உட்கார்ந்து இருந்தனர்.

“எங்க வீட்ல கல்யாணத்துக்கு வந்திருந்தாங்களே பார்த்தியா?” நட்ராஜ் ஆர்வமாகச் சங்கமித்ராவிடம் கேட்க,

https://t.me/tamilpdfebooks

*“ஆமாம் பார்த்தேன், உங்களுக்கு ட்வின்ஸா.” என்றாள் ஆர்வமாக.*

*“ஆமாம்.” என நட்ராஜின் முகத்தில் மகிழ்ச்சி டின் டின்னாக வழிய...*

*“நீங்க எப்ப அண்ணா கல்யாணம் பண்ணிக்கப் போறீங்க?” என்றாள் வெங்கடேஷிடம்.*

*“நீதான் வந்துட்டியே, இந்த அண்ணனுக்கு ஒரு பொண்ணு பாரு.” வெங்கடேஷ் உரிமையாகச் சொல்ல...*

*“உங்களுக்கு எப்படிப்பட்ட பொண்ணு வேணும் சொல்லுங்க.” என்றாள் சங்கமித்ராவும்.*

*“எந்தக் கழுதையைக் கட்டினா என்ன? ஏதோ ஒன்னு பாரு. எவ வந்தாலும் உதைக்கப் போறா.” என்றான் வெங்கடேஷ் இலகுவாக.*

*“நீ என்ன டா மாப்பிள்ளை இப்படிப் பொசுக்கு பொசுக்குன்னு உண்மையைப் பேசுற?” நட்ராஜ் சிரிக்க,*

https://t.me/tamilpdfebooks

*“இருங்க கழுதைன்னு நீங்க சொன்னதை, அவங்க வந்ததும் போட்டுக் கொடுக்கிறேன்.” என்றாள் சங்கமித்ரா.*

*“அவ கழுதைனா நான் மட்டும் குதிரையா? நானும் கழுதைதான்.” வெங்கடேஷ் புன்னகைக்க,*

*“பாரு இப்பவே பயப்படுற?” என்றான் நட்ராஜ்.*

*தன் மனைவி தன் நண்பர்களிடம் உரிமையாகப் பேசி பழகுவதை மதியழகன் ரசித்துப் பார்த்துக் கொண்டு இருந்தான். அதற்குள் எதேச்சையாகத் திரும்பிய சங்கமித்ரா அங்கே தன் சகோதரன் தனியாக உட்கார்ந்து இருப்பதைப் பார்த்ததும், “இருங்க வரேன்.” என்றவள், எழுந்து செல்லப் போக,*

*“எங்கப் போற இங்க உட்காரு.” என்றான் மதியழகன் கொஞ்சம் அதட்டலாக.*

*அதைச் சங்கமித்ரா சட்டை செய்தால் தானே... “நான் போவேன்.” என்றவள், போய்யே விட்டாள்.*

*மதியழகன் முகம் மாற, “விடு, கொஞ்ச நாளைக்கு அப்படித்தான். அப்புறம் நீயே போகச் சொன்னாலும் போக மாட்டங்க.”*

https://t.me/tamilpdfebooks

*“மதி, உனக்கும் சட்டுன்னு கோபம் வரும். அந்தப் பிள்ளையும் பார்த்தா பொறுமையான்ன பிள்ளை மாதிரி தெரியலை. யாரவது ஒருத்தர் விட்டுக் கொடுத்து போங்க... இல்லைனா ரெண்டு பேரும் முட்டிக்க வேண்டியதுதான்.” என்றான் வெங்கடேஷ் நண்பனாக.*

*சங்கமித்ரா அவர்களுடன் உட்கார்ந்து பேசிக் கொண்டு இருந்தது, பிறகு மதி சொல்லி கேட்காமல், அவள் இங்கே வருவது, எல்லாமே ஜெய் பார்த்து இருந்தான்.*

*“நீ ஏன் இங்க வந்த? அங்க மாப்பிள்ளையோடு இரு.” என்றான் அருகில் வந்த தங்கையிடம்.*

*அவனும் அப்படிச் சொன்னதில் சங்கமித்ராவுக்குக் கோபம், “நீ தனியா இருக்கியேன்னு வந்தேன்.”*

*“இவ்வளவு நேரம் பெரிய மாப்பிள்ளை என்னோடதான் இருந்தார். இப்பதான் போனார். நீ மாப்பிள்ளைகிட்ட போ.”*

https://t.me/tamilpdfebooks

சங்கமித்ரா போவது போலத் தெரியவில்லை என்றதும், அவளையும் அழைத்துக் கொண்டு மதியழகனிடம் சென்று அமர்ந்தான். ஜெய் வந்ததும், ஆண்கள் மட்டும் பேச, சங்கமித்ரா பார்த்துக் கொண்டு இருந்தாள்.

நல்ல நேரத்தில் பெண்ணையும் மாப்பிள்ளையும் மறுவீட்டுக்கு அனுப்பி வைத்தனர். சங்கமித்ரா ஆர்வக் கோளாரில் முந்திக்கொண்டு காரில் ஏற செல்ல, "எல்லார்க்கிட்டையும் சொல்லிக்க வேண்டாமா?" மதி அவள் காதில் கடிக்க, பிறகே நினைவு வந்து, எல்லோரிடமும் போய் வரேன் என்றாள்.

'என்ன டா இவ இப்படி இருக்கா…' இவளை வச்சு எப்படிச் சமாளிக்கப் போறோம் என உண்மையிலேயே மதியழகனுக்குப் பயம் வந்துவிட்டது. பயம் அவனுக்கு மட்டும் அல்ல ஜெய்க்கும் தான்.

# அத்தியாயம் 5

ஜெய் காரை ஓட்ட அவன் அருகில் இருந்த இருக்கையில் சுபத்ராவின் பிள்ளைகள் இருவரும் இருந்தனர். பின்புறம் மதியழகன் சங்கமித்ரா மற்றும் சுபத்ரா அமர்ந்துகொள்ள… கார் புதுக்கோட்டையை நோக்கி சென்றது.

ஜெய் காரில் பாடல் ஓடவிட்டு வண்டி ஓட்டுவதில் கவனம் செலுத்த, சுபத்ரா அந்தப் பக்கம் ஜன்னல் வழியாக வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்தாள்.

https://t.me/tamilpdfebooks

மதியழகன் சங்கமித்ராவுடன் பேசிக் கொண்டு வரலாம் என்று நினைக்க, அவள் அதற்கு இடம் கொடுத்தால் தானே…

“எனக்குத் தலை வலிக்குது.” என்றவள், சீட்டின் பின்புறம் சாய்ந்து கண்ணை வேறு மூடிக் கொண்டாள். ஜெய் அதைக் கவனித்துக் கொண்டுதான் இருந்தான்.

பிறகும் ஜெய்யும், மதியழகனும் தான் பேசிக் கொண்டு வந்தனர். ஊர் செல்ல நான்கு மணி நேரங்கள் ஆகும் என்பதால்… வழியில் ஒரு இடத்தில் டீ குடிக்க நிறுத்தினர்.

மதியழகன் தனக்கும் சங்கமித்ராவுக்கும் டீ எடுத்து வர.. அதற்குள் ஜெய் சுபத்ராவுக்குக் கொடுக்கச் சென்றதை, அவள் வாங்கி இருந்தாள். அதனால் மதியழகன் தான் கொண்டு வந்ததைத் தன் அண்ணியிடம் கொடுத்தான்.

சுபத்ராவை முன்புறம் உட்கார சொல்லிவிட்டு, அவள் பிள்ளைகளைத் தங்கள் இருவருக்கும் நடுவில் உட்கார வைத்து, சங்கமித்ரா அவர்களுடன் விளையாடிக் கொண்டு வந்தாள்.

https://t.me/tamilpdfebooks

தன்னைத் தவிர்க்கவே அவள் இப்படிச் செய்கிறாள் என மதியழகனுக்குப் புரியாமல் இல்லை. அவன் இப்போது சீட்டில் சாய்ந்து கண் மூடிக் கொண்டான். அதன் பிறகு அவன் அவளோடு பேச முயற்சிக்கவே இல்லை.

மணமக்களை ஆரத்தி எடுத்து உள்ளே அழைத்துச் சென்றனர். நிறைய உறவினர்கள் சென்று இருந்தனர். பக்கத்தில் இருந்தவர்கள் மட்டும் இவர்கள் வருவதற்காகக் காத்திருந்து, இவர்கள் வந்ததும் கிளம்பினர்.

வீட்டு ஆட்கள் மட்டுமே எஞ்சி இருக்க., ஹாலில் முத்துகுமாருடன் மதியழகன் பேசிக் கொண்டு இருந்தான். சங்கமித்ரா சென்று அறையில் இருந்த கட்டிலில் படுத்துக் கொண்டாள்.

அந்த அறைக்கு வந்த அவளது அம்மா, “விளக்கு வச்சத்துக்கு அப்புறம் இப்ப என்ன படுக்கை. போ.. போய்க் குளிச்சு வேற புடவை மாத்து.” என்றார்.

“இருங்க மா இப்பத்தான் வந்தேன், கொஞ்சம் ரெஸ்ட் எடுக்க விடுங்க.” என அவள் சிடு சிடுக்க, ஜெய் அப்போது அந்த அறைக்கு ஏதோ எடுக்க வந்தவன், அங்கே படுத்து இருந்தவளைப் பார்த்து முறைத்து வைக்க, அதைப் பார்த்துப் பயத்தில் சங்கமித்ரா எழுந்து அமர்ந்தாள்.

https://t.me/tamilpdfebooks

*கதவை சாற்றித் தாள் போட்டு வந்தவன், “அவர் அங்க ஹாலில் உட்கார்ந்து இருக்கார். அவருக்கு எதாவது வேணுமா, என்ன ஏதுன்னு எதுவும் கேட்காம, இவ இங்க வந்து படுத்திட்டா? அவர் சுபத்ராகிட்ட தண்ணி வாங்கிக் குடிக்கிறார்.”*

*“அந்த மனுஷன் நம்மைப் பற்றி என்ன நினைப்பார். என்ன பொண்ணு வளர்த்து வச்சிருக்கீங்கன்னு காரி துப்ப போறார்.” என்றான்.*

*“நீ கொஞ்சம் பொறுப்பா இரும்மா.” அவள் அம்மா சொல்ல,*

*“அம்மா, இவ சரியே கிடையாது. அவர் வந்து பேசினா முகத்தைத் திருப்பிக்கிறா, நானும் பார்த்திட்டே இருக்கேன், எதுக்கு இப்படிப் பண்றான்னு புரியலை.”*

*“அந்தப் பய வேற நம்ம வீட்டையே சுத்தி சுத்தி வரான். அப்போ அன்னைக்கு எங்ககிட்ட ஒன்னும் இல்லைன்னு பொய் சொன்னியா? நீ அவனை மனசுல வச்சிட்டுதான் இப்படிப் பண்ற?” என்றான் ஜெய் கடுமையாக.*

*இதுக்கு இப்படி வேற அர்த்தம் வேறு இருக்கா... எனச் சங்கமித்ரா அரண்டே போனாள். அண்ணனே தன்னைத் தவறாகப் பேசுகிறான். மதியழகனும் தன்னைத் தவறாகப் புரிந்து கொண்டால், தன் வாழ்க்கை என்ன ஆகும் எனப் பயம் வந்தது.*

https://t.me/tamilpdfebooks

அவள் எதோ அவள் எரிச்சலை அவர்களிடம் காண்பித்தாளே தவிர, இனி தன் வாழ்க்கை மதியழகனோடு தான் எனப் புரியாதவள் இல்லை.

"அண்ணா, அப்படியெல்லாம் எதுவும் இல்லைனா…நீ என்னை நம்ப மாட்டியா?" என அவள் ஜெய்யின் முகம் பார்க்க, அவன் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

"இவ எதாவது எக்குத்தப்பா பண்ணி வச்சா… சுபத்ராவையும் சேர்த்து நம்ம வீட்டுக்கே அனுப்பிடுவாங்க." என்றார் அவர்களது அம்மா பயந்து போய்.

"இப்ப சொல்லுங்க. நான் இதுக்குதான் அந்த வீட்ல இவளை செய்ய வேண்டாம்ன்னு சொன்னேன்." என்றான் ஜெய். தங்கை ஏதாவது எக்குதப்பாகச் செய்து பெயரை கெடுத்துக் கொள்வாளோ என அவனுக்குப் பயமாக இருந்தது.

"என்ன சொல்ற சங்கமித்ரா? இனிமே ஒழுங்கா இருக்கியா?" அவள் அம்மா கேட்க, சரி எனத் தலையசைத்தவள், கண்களில் துருத்தியை கண்ணீரை துடைத்து விட்டு, சட்டென்று எழுந்து ஹாலுக்குச் சென்று மதியழகன் அருகே உட்கார்ந்து கொண்டாள்.

அவன் அவள் வந்ததைப் பார்த்தாலும், அவன் அவளைக் கண்டுகொள்ளவில்லை. செல்லில் எதோ பார்த்துக் கொண்டு இருந்தான்.

https://t.me/tamilpdfebooks

"எதாவது வேணுமா?" சங்கமித்ரா மெதுவாக அவனிடம் கேட்க,

என்னய்யா கேட்கிற என்பது போலப் பார்த்தவன், எதுவும் வேண்டாம் எனத் தலையசைத்தான்.

அவர்கள் இருவர் மட்டுமே ஹாலில் இருந்தனர். ஆனால் அவன் அவளிடம் எதுவும் பேச முயற்சிக்கவே இல்லை. அதை அந்தப் பக்கம் வரும்போது, போகும் போது சுபத்ரா, ஜெய் இருவருமே கவனித்தனர்.

மதியழகன் குணம் அப்படித்தான், அவன் தானாக யார் வம்புக்கும் போக மாட்டான். ஆனால் யாரவது அவனிடம் வம்பு செய்தால்... திரும்ப அவர்களுக்குத் தான் யார் என்று காட்டாமல் விட மாட்டான்.

சங்கமித்ராவுக்கும் அவன் கோபமாக இருக்கிறான் என்று புரிந்தது. தேவையில்லாமல் அவனைச் சீண்டி விட்டோம் என நினைத்துக் கொண்டாள்.

எவ்வளவு நேரம் இப்படியே உட்கார்ந்து இருப்பது. "நான் போய் டிரஸ் மாத்தட்டா?" அவள் அவனிடம் அனுமதி கேட்க,

https://t.me/tamilpdfebooks

*என்ன டா இவ? கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி வரை நம்மை மதிக்காம இருந்தா... இப்ப பெர்மிஷன் கேட்கிறா என்பது போலப் பார்த்தவன், அப்போதும் சரி என்று சொல்லவில்லை. "உன் இஷ்ட்டம்." என்றான்.*

*அவள் அறைக்குச் சென்ற போது, கட்டிலில் அவளுக்கு உடைகள் தயாராக இருந்தது. அப்போது உள்ளே வந்த அவளது அம்மா, "ரெண்டு சொம்பு உடம்புக்கு ஊத்திட்டு புடவை மாத்து." என்றார்.*

*அவள் குளித்து வேறு புடவையில் புது மலராக வெளியே வர... மதியழகன் சிரத்தையாக டீவி பார்த்துக் கொண்டு இருந்தான். இவள் போய் அவன் அருகில் உட்கார்ந்து கொண்டு டிவி பார்த்தாள்.*

*இருவரையும் சாப்பிட அழைத்தனர். டைனிங் டேபிளில் இலை போட்டு உணவு பரிமாறினார்கள். அவர்கள் கூடவே முத்துகுமாரும் ஜெய்யும் அமர்ந்து சாப்பிட்டனர். மதியழகன் ஜெய் இருவரும் பேசிக்கொண்டே சாப்பிட... மூன்று இட்லிகளை முக்கால் மணி நேரமாக ஒருத்தி சாப்பிட்டுக் கொண்டு இருந்தாள்.*

*இந்த லட்ச்சனத்தில் சாப்பிட்டால் விளங்கிடும் என மதியழகன் நினைத்துக் கொண்டான்.*

*சாப்பிட்டு திரும்ப ஹாலில் உட்கார்ந்து டிவி பார்த்தனர். சிறிது நேரத்தில் முத்துகுமார், ஜெய் என ஒவ்வொருவராகக் கழண்டு கொள்ள, "அவரைக்*

https://t.me/tamilpdfebooks

கூட்டிக்கிட்டு மாடிக்கு போ... அவருக்குக் குளிக்கணும்னா துண்டு எல்லாம் எடுத்துக் கொடு.” அவள் அம்மா சொல்ல,

“மாடிக்கு ஏன் போகணும். இங்கதான் பாத்ரூம் இருக்கே.” என்றாள்.

மதியழகனுக்குச் சிரிப்புதான். ஆனால் முகத்தில் எதையும் காட்டவில்லை.

“சொன்னா கேளு, அவரைக் கூடிட்டு போ.” என்றார்.

இதுவரை ஜெய் மட்டும் தான் மாடியில் உறங்குவான். அதுவும் ஹாலில்தான். அங்கிருக்கும் அறையை யாரும் உபயோகிக்க மாட்டார்கள். இவர்களின் படுக்கை கீழேதான். அதுதான் மாடிக்குப் போகச் சொன்னதும், அவளுக்குப் புரியவில்லை.

“சரி வாங்க.” என்றவள், மாடிக்கு செல்ல, மதியழகன் அவளோடு சென்றான்.

பாதிப் படிக்கட்டுகள் ஏறியதும், “ஐயோ ! துண்டு எடுத்திட்டு வர மறந்திட்டேன். நான் போய் எடுத்திட்டு வரேன்.” என அவள் திரும்ப, அவள் கைபிடித்துத் தடுத்தவன், “என்கிட்டே இருக்கு, மேல போ.” என்றான்.

மாடி அறையில் இருந்த பால் பழங்கள் எல்லாம் பார்த்த பிறகுதான், இன்னைக்கு இங்க தான் தூங்கனும் என அவளுக்குப் புரிந்தது. அவன் முகம் பார்க்க சங்கடப்பட்டு, தலை குனிந்து கொண்டாள்.

https://t.me/tamilpdfebooks

அவள் நிலை புரிந்தவன், அங்கிருந்த தன் பையை எடுத்து திறந்து குளிக்க உடைகள் எடுத்து வைத்தான். அறையிலேயே பாத்ரூம் இருக்க... குளிக்கச் சென்று விட்டான்.

முதல் இரவை நினைத்ததும், அடி வயிற்றில் ஒரு கலக்கம். அந்த நிலை பிடித்தும் பிடிக்காமலும் இருந்தாள். கவனத்தை வேறு எதிலாவது வைக்க எண்ணி, என்ன இருக்கிறது எனச் சுற்றிப் பார்க்க, கட்டிலில் அவன் செல் இருந்தது.

அவளிடம் செல் இல்லை. அவள் செல் கேட்டதற்கு, உனக்குச் செல் வாங்கித் தர்றதும் ஒன்னும், ஒரு பாய் ப்ரண்ட் பிடிச்சுத் தர்றதும் ஒன்னு. அதனால செல் மட்டும் கேட்காத என்றுவிட்டார் அவளின் அம்மா. அதனால் அவள் அண்ணன் செல்லைத்தான் எப்போதாவது எடுத்து பார்த்துக் கொண்டிருப்பாள்.

லாக் போட்டு வைத்திருந்தான். அதைத் திறக்க தெரியாமல் கையில் வைத்து பார்த்துக் கொண்டு இருந்தாள்.

மதியழகன் குளித்து விட்டு கையோடு உள்ளாடைகளைத் துவைத்துக் கொண்டு வந்தவன், அதைக் காயப் போட வெளியில் சென்றான். அவன் திரும்பி வந்ததும், “இதைக் கொஞ்சம் திறந்து தாங்க.” என்றாள்.

https://t.me/tamilpdfebooks

*எதை எனப் பார்த்தவனுக்கு அது அவனது செல் எனத் தெரிந்ததும், "என்கிட்டே கேட்க வேண்டாமா?" என்றான்.*

*"நான் பார்க்கலாம்." என்றாள் அதிகாரமாக.*

*மதியழகனுக்குச் சிரிப்பு எட்டி பார்க்க, அவளிடம் இருந்து செல்லை வாங்கி, அதைத் திறக்க, பக்கத்தில் வந்து நின்று எப்படி எனப் பார்த்துக் கொண்டாள்.*

*திறந்து கொடுத்ததும் கட்டிலில் சென்று உட்கார்ந்து பார்த்தாள். ஸ்க்ரீன் சேவரில் அவள் புகைப்படத்தைத் தான் வைத்து இருந்தான். பரிசம் போடும் போது எடுத்தது.*

*அட பரவாயில்லை நம்ம போட்டோ எல்லாம் வச்சிருக்கான் என நினைத்தவள், அதில் மேலும் என்னென்ன இருக்கிறது என ஆராய்ந்தாள்.*

*செல்லை பார்க்கும் ஆவலில் அன்று என்ன நாள் என்றெல்லாம் மறந்து விட்டாள்.*

*"ம்ஹ்ம்…." எனச் செருமியபடி கட்டிலில் வந்து அமர்ந்த மதியழகன், "அந்தப் பால் ஆறுறதுக்கு முன்னாடி ஊத்திக் கொடுப்பியா இல்லையா?" என்றான்.*

https://t.me/tamilpdfebooks

அவன் கேட்டதும்தான் அன்று என்ன என்பது நினைவு வர, செல்லை வைத்து விட்டு, பதட்டமாகச் சென்று சொம்பில் இருந்த பாலை டம்ளரில் ஊற்றி எடுத்து வந்தாள்.

பால் சரியான சூடில் தான் இருந்தது. “இந்தா இதை நீ குடி.” என அதை அவள் கையில் கொடுத்துவிட்டு, அவள் கையில் இருந்த சொம்பை வாங்கி, அப்படியே தூக்கி குடித்தான்.

சங்கமித்ரா பால் குடித்து முடித்ததும், என்ன செய்வது எனத் தெரியாமல் நிற்க, “என்ன பார்த்திட்டே இருக்க. படுத்து தூங்கு.” என்றான்.

என்னடா இவன்? கிடைச்ச கொஞ்ச நேரத்தில் முத்தம் கொடுத்தான், இப்ப தூங்க சொல்றான். நிஜம் தானா என்பது போலப் பார்த்தாள்.

அவள் எண்ணம் புரிந்தது போல, “முதல் ராத்திரி அன்னைக்கே எல்லாம் பண்ணனும்ன்னு இல்லை.” என்றான்.

கட்டிலை சுவற்றை ஒட்டி போட்டிருந்தனர். சங்கமித்ரா கட்டிலின் உள்பக்கம் ஏறி படுக்க, மதியழகன் விளக்கை அணைக்க... அறையின் இருளை பார்த்து எழுந்து அமர்ந்தவள், “எனக்கு இருட்டுன்னா பயம்.” என்றாள்.

https://t.me/tamilpdfebooks

*அவன் விடிவிளக்கை தேடி போட்டு விட்டு வந்தான். சங்கமித்ரா திரும்பப் படுத்துக் கொண்டாள். மதியழகன் அவள் பக்கத்தில் படுத்துக் கொண்டான். கட்டில் கொஞ்சம் சின்னதுதான். அதனால் அவளை நெருங்கி தான் படுத்து இருந்தான்.*

*இன்றே எல்லாம் நடக்க வேண்டும் என அவனும் நினைத்து இருக்கவில்லை. ஆனால் அவளோடு மனம் விட்டு பேச வேண்டும், இடையிடையே அவளைக் கொஞ்சவும் வேண்டும் என்று நினைத்து இருந்தான். ஆனால் இன்று அவள் நடந்து கொண்ட விதத்தில், இப்போது எதற்கும் மனம் இல்லாமல் இருந்தான்.*

*சங்கமித்ராவும் உறக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தாள். மதியழகன்அவள் பக்கம் திரும்பி படுக்க, அவள் புரண்டு படுத்ததில் புடவை அங்கங்கே நழுவி இருக்க, அவனுக்கு மனம் தடுமாற ஆரம்பித்தது.*

*“புடவையை கூட ஒழுங்கா கட்ட தெரியாதா உனக்கு.” என அவளிடம் எரிந்து விழுந்தான். அவளும் இழுத்து இழுத்துதான் விட்டாள். அது ஷிப்பான் புடவை என்பதால்… நழுவிக் கொண்டே இருந்தது.*

*அவளின் போராட்டத்தைப் பார்த்து, “நீ நைட்டி போட மாட்டியா?” என்றான்.*

https://t.me/tamilpdfebooks

*"தூங்கும்போது போடுவேன் தான்." என்றாள்.*

*"போய் ட்ரெஸ் மாத்திட்டு படு." என்றான்.*

*அவன் காலை மடக்கிக் கொள்ள, கட்டிலை விட்டு கீழே இறங்கினாள். விளக்கை போட்டு அங்கிருந்த அலமாரியில் நைட்டி இருக்கிறதா என்று பார்த்தாள்.*

*நைட்டி மற்றும் மேலும் சில உடைகள் இருந்தது. காலையில் குளித்து விட்டு மாற்ற புடவை, புதுத் துண்டு எல்லாமே அங்கு இருந்தது. அப்போதுதான் அவளுக்குகே தெரியும்.*

*அறையில் மதியழகன் இருந்ததால்... வெளியே ஹாலில் சென்று மாற்றுவோம் என நைட்டியை கையில் எடுத்துக் கொண்டு, அவள் கதவை நோக்கி செல்ல, "நான் உனக்குப் புருஷன் தானே, இங்கயே மாத்து." என்றான்.*

*ஒரு நொடிதான் திகைத்து நின்றாள். பெரிய விளக்கை அனைத்து விட்டு, அவனுக்கு முதுகு காட்டி நின்று, நைட்டியை தலை வழியே போட்டுக் கொண்டவள், புடவையின் முந்தானையை எடுத்துவிட்டு, ரவிக்கையும் கழட்டி விட்டு, அப்படியே கைவிட்டு நைட்டி அணிந்து கொண்டாள். பிறகு இடையில் இருந்த புடவையை எடுத்துவிட்டு, நைட்டியை நன்றாக இழுத்து விட்டாள்.*

https://t.me/tamilpdfebooks

விடி விளக்கின் ஒளியில் அவளைப் பார்த்தபடியே மதியழகன் கட்டிலில் படுத்து இருந்தான். அவள் உடை மாற்றிய விதம் அவனுக்குப் பிடித்திருந்தது. சங்கமித்ரா சென்று கட்டிலில் படுத்தவள், சிறிது நேரத்தில் உறங்கியும் போனாள். அவளைப் பார்த்துக் கொண்டே மதியழகனும் உறங்கிப் போனான்.

எப்பவும் போல மதியழகனுக்கு விடியற்காலையில் விழிப்பு வர... மெதுவாகக் கண்திறந்தான். ஏசி அறை என்பதால்... விடிந்து விட்டதா இல்லையா என ஒன்றும் தெரியவில்லை. நேரம் பார்க்க செல்லை தேடினான்.

செல் சங்கமித்ராவுக்கு அந்தப்புறம் இருந்தது. பாதி மட்டும் எழுந்த நிலையில், எட்டி அவள் பக்கம் இருக்கும் செல்லை எடுக்க முனைந்தான்.

அவன் அவள் மேல் பாதிக் கவிழ்ந்த நிலையில் செல்லை எடுத்து நேரத்தை பார்க்க, அது காலை ஐந்து மணி எனக் காட்ட, அஞ்சுதான் ஆகுதா... என நினைத்தவன், அப்போதுதான் தன்னையே பார்த்துக் கொண்டிருந்த மனைவியைக் கவனித்தான். அவன் அசைவில் கண் விழித்து இருந்தாள்.

“தலை கலைந்து, விழிகளில் மை வழிய, நைட்டியில் இருந்தாலும், அவன் கண்களுக்குத் தேவதையாகவே தெரிந்தாள்.”

https://t.me/tamilpdfebooks

உறக்கம் கலைந்தும் கலையாமல் இருந்தவளின், ரோஜா நிற உதடுகள் அவனை வா என அழைக்க... எதைப் பற்றியும் யோசிக்காமல், அவள் இதழில் முத்தமிட்டு இருந்தான்.

முத்தமிட்ட பிறகே...என்ன செய்கிறோம் எனப் புரிந்தது. மெதுவாக நிமிர்ந்து அவள் முகம் பார்க்க, அவன் விலகியதால்... விழிகளைத் திறந்தவள், தன்னையே பார்த்துக் கொண்டிருந்த கணவனைத், தன் கைகொண்டு மெதுவாக அணைத்துக் கொள்ள...

அவளே அணைத்ததும், தடைகள் இல்லா மகிழ்ச்சியில், மதியழகன் முகத்தில் மெல்லிய புன்னகை தோன்ற, தன் மனைவியோடு கூடல் கொள்ளத் தொடங்கினான்.

மனதளவில் அறிந்து கொள்வதற்கு முன்பு, இருவரும் உடலளவில் ஒருவரையொருவர் தெரிந்து கொண்டனர். நமது இந்திய திருமணங்கள் நிறைய அப்படித்தான். இவர்களும் அதற்கு விதிவிலக்கல்ல....

# அத்தியாயம் 6

ஜன்னல் திரைசீலையையும் மீறி விழுந்த வெளிச்சத்தில் கண்கள் கூச, மதியழகன் மெல்ல கண் விழித்தான். பக்கத்தில் சங்கமித்ரா இல்லை. குளியல் அறையில் நீர் விழும் சத்தம் கேட்டது. அவன் செல்லை எடுத்து நேரத்தை பார்க்க, காலை ஒன்பது மணி.

https://t.me/tamilpdfebooks

முதல் தடவை இப்படி நேரத்தை பார்க்க எழுந்தது தான். அது எதில் போய் முடிந்தது என நினைத்ததும், கடந்து போன சுகமான அனுபவத்தை மனம் அசைபோட விரும்பியது.

அவன் இன்பான நினைவில் இருக்க, சங்கமித்ரா கதவை திறந்து கொண்டு வெளியே வந்தாள். ஈரமான கூந்தலில் துண்டை சுற்றி இருந்தாள். குளியல் அறை ஈரமாக இருந்ததால்... புடவையைக் கட்டாமல் சுற்றிக் கொண்டு வந்தாள்.

மதியழகன் விழித்திருப்பதைப் பார்த்தவள், கட்டிலுக்குப் பின்னே திரும்பி நின்று புடவையைச் சரியாகக் கட்ட... திடிரெண்டு மதியழகன் அவளைப் பின்னால் இருந்து அணைக்க, ஒரு நொடி பயந்து போனாள்.

அவளைத் தன் பக்கம் திருப்பி நெற்றியில் முத்தமிட்டவன், “தேங்க்ஸ் டி.” என்றான் மனதிலிருந்து.

எதுக்குத் தேங்க்ஸ் எனப் புரியாமல் சங்கமித்ரா பார்க்க, “நான் நினைக்கவே இல்லை மித்ரா, நமக்குள்ள அப்படி நடக்கும்ன்னு. நீ என்னைச் சொர்கத்துக்கே கூடிட்டு போயிட்டே.” என்றான்.

https://t.me/tamilpdfebooks

அவன் எதைச் சொல்கிறான் எனப் புரிந்ததும், மித்ராவின் முகம் சிவக்க, “போதும் போங்க போய்க் குளிங்க.” என்றாள்.

“உனக்குப் பிடிச்சுதா..” எனக் கேட்டபடி அவன் அணைப்பை இருக்க,

பிடிக்கலைன்னு சொன்னா என்ன செய்வீங்க என்று தான் கேட்க வந்தாள். அதை ஊகித்தது போல... “உனக்குப் பிடிச்சது. எனக்குத் தெரியும்.” என்றவன், அவளைப் பார்த்து கண்சிமிட்டி விட்டுத் துண்டை எடுத்துக் கொண்டு, குளியல் அறைக்குள் சென்றான்.

அவன் குளித்து விட்டு வந்த போது, சங்கமித்ரா மீண்டும் கட்டிலில் படுத்து இருந்தாள்.

“என்ன திரும்பப் படுத்திட்ட?”

“ஒரே களைப்பா இருக்கு, காலெல்லாம் வலிக்குது.” என்றாள்.

https://t.me/tamilpdfebooks

*“நான்தான் நேத்து நீ சாப்பிட்ட லட்ச்சனத்தை பார்த்தேனே… சின்னப் பிள்ளைங்க சாப்பிடுற மாதிரி சாப்பிட்டா, இப்படித்தான் இருக்கும்.”*

*“நீ முதல்ல எந்திரி. ஈர தலையோட படுத்தா தலைவலி வரும்ன்னு தெரியாதா?” என்றவன், அங்கிருந்த வாழைப் பழத்தை எடுத்து பாதி உரித்து அவளிடம் கொடுத்தான்.*

*அவள் கட்டிலில் உட்கார்ந்து சாப்பிட, மதியழகன் அவள் தலையில் இருந்த துண்டை உருவி விட்டு, அழுத்தமாக அவள் தலையைத் துவட்ட ஆரம்பித்தான்.*

*“போ போய் அந்த வெளி மெத்துல வெயில்ல அஞ்சு நிமிஷம் நின்னுட்டு வா…” என அவளை அனுப்பிவிட்டு, தன் ஆடைகளை எடுத்து அணிய ஆரம்பித்தான்.*

*சங்கமித்ரா திரும்ப வந்தபோது, மதியழகன் படுக்கையை உதறி, போர்வைகளை மடித்து வைத்துக் கொண்டிருந்தான்.*

*பதறிப் போய் அவனிடம் வந்தவள், “இதெல்லாம் நீங்க ஏன் பண்ணுறீங்க?” நான் பண்ண மாட்டேனா?” என்றாள்.*

*“நமக்குள்ள என்ன மித்ரா? யாரு பண்ணா என்ன?” என்றவன், செய்த வேலையை முடித்து விட்டே வந்தான்.*

https://t.me/tamilpdfebooks

என்ன டா இவன், நாம வில்லனைப் போல நினைச்சு வச்சிருந்தா ரொம்பப் பாசக்காரனா இருக்கானே என நினைத்துக் கொண்டாள்.

என்ன இது இவ்வளவு நேரமா இறங்கி வர காணோம், என மாடிப் படியையே பார்த்துக் கொண்டிருந்த வீட்டினருக்கு, இருவரும் பேசி சிரித்தபடி வருவதைப் பார்த்ததும்தான், வாயிற்றில் பால் வார்த்தது போல இருந்தது.

தங்கையின் முகம் பார்க்காமல், வெளியே செல்ல விரும்பாத ஜெய்யும் வீட்டில்தான் இருந்தான். ‘அவங்க வாரட்டும் சேர்ந்து சாப்பிட்டுகிறேன்.’ எனச் சாப்பிடாமல் வேறு இருந்தான். முத்துக்குமார் மட்டும் கடைக்கு சென்று இருந்தார்.

கூந்தலை தளர பின்னி, புதுப் புடவையில் புது மலராக இருந்தாலும், சங்கமித்ராவின் முகத்தில் இருந்த மலர்ச்சியே, எல்லோரின் கண்களுக்கும் குளிர்ச்சியாக இருந்தது.

“இவ என்ன இழுத்து வைக்கப் போறாளோ எனப் பயந்து போயிருந்த ஜெய் முகத்தில் மகிழ்ச்சி வெளிப்படையாகத் தெரிந்தது.

https://t.me/tamilpdfebooks

இவர்களைப் பார்த்ததும் சுபத்ரா சென்று பூரிக்கு மாவு தேய்க்க, அவள் அம்மா குழம்பை ஒரு பக்கம் சுட வைத்து விட்டு, பூரிக்கு எண்ணைக் காய வைத்தார்.

மதியழகன் பூஜை அறை எங்கே எனக் கேட்டு, அங்கே சென்று கண் மூடி நிற்க, அதைப் பார்த்த மித்ரா வேகமாகச் சென்று விளக்கேற்றி வைத்தாள்.

மதியழகன் கண் திறந்த போது, மனைவி விளக்கேற்றிய காட்சி, கண்கொள்ளாக் காட்சியாக இருக்க, மலர்ந்த முகத்துடன் திருநீறு வைத்துக் கொண்டான். மித்ராவும் குங்குமம் தேடி எடுத்து வகுட்டில் வைத்துக் கொண்டாள்.

இதையெல்லாம் குடும்பத்தினர் பார்க்காதது போலப் பார்த்துக் கொண்டு இருந்தனர்.

“வாங்க மாப்பிள்ளை சாப்பிடுவோம்.” ஜெய் அழைக்க, மதியழகன் சாப்பிட சென்றான். “நீயும் மாப்பிள்ளையோட சாப்பிடு.” எனச் சங்கமித்ராவையும் உட்கார வைத்தனர்.

பூரி, மட்டன் குழம்பு, மட்டன் கொத்துகறி எனக் காலை உணவு அமர்க்களப்பட... வழக்கம் போல் மூன்று பூரிகளுடன் எழுந்து கொண்ட மித்ராவின் கைபிடித்து உட்கார வைத்த மதியழகன், “நீ ஒழுங்கா இன்னும் ரெண்டு சாப்பிடுற.” என்றவன், அத்தை அவளுக்கு வைங்க என்றான். அவள் தட்டில் பூரி வைத்ததும், அவனே மனைவிக்குக் கறி எடுத்து வைத்தான்.

https://t.me/tamilpdfebooks

*'இவ்வளவா?' என மித்ரா அவனைப் பார்க்க, "அப்புறம் அங்க வலிக்குது இங்க வலிக்குதுன்னு சொல்லக் கூடாது, ஒழுங்கா சாப்பிடு." என அவளுக்கு மட்டும் கேட்கும்படியாகச் சொன்னான்.*

*மிக மெதுவாகச் சாப்பிட்டாலும், அவன் வைத்ததை மிச்சம் வைக்காமல் சாப்பிட்டு விட்டாள். அதுவரை மதியழகன் கைகழுவ கூட எழுந்து கொள்ளவில்லை. அவனுக்குத் தெரியும், அவன் எழுந்து சென்றால், அவள் சாப்பிடாமல் வைத்து விடுவாள் என்று.*

*மதியழகன் கை கழுவி ஹாலுக்கு வர, "மாப்பிள்ளை, கடை வரை போயிட்டு வருவோமா?" என ஜெய் கேட்க, சரி என்றவன், அவனோடு கடைக்குக் கிளம்பினான். மித்ராவிடம் சொல்லிவிட்டே சென்றான்.*

*அவர்கள் சென்றதும், நேத்துப் போட்டிருந்த துணிகளைக் கொண்டு வா, துவச்சு தரேன்." அவள் அம்மா சொல்ல, "இல்லை வேண்டாம், ஊற வச்சிருக்கேன், நானே துவைச்சுகிறேன்." என மாடிக்கு சென்றாள்.*

*அவள் இருவர் துணிகளையும் துவைத்து விட்டு வரவும் ,ஜெய்யும் மதிய சமையலுக்குச் சாமான்கள் வாங்கிக் கொண்டு வரவும் சரியாக இருந்தது.*

*சங்கமித்ராவின் விழிகள் தன் கணவனைத் தேடி அலைபாய... அதைக் கண்டுகொண்ட ஜெய், "ஒருத்தவங்க அவங்க வீட்டுக்காரரை தேடுறாங்க பா."*

https://t.me/tamilpdfebooks

*"அந்த வளர்ந்து கெட்டவனை எல்லாம் கல்யாணம் பண்ணிக்க முடியாதுன்னு சொன்ன, மானஸ்த்தியை எங்காவது பார்த்த..." என அவன் கிண்டலாகச் சுபத்ராவிடம் கேட்க,*

*ஜெய் சொன்னது புரிந்ததும், சுபத்ராவுக்கும், அவர்கள் அம்மாவுக்கும் ஒரே சிரிப்பு. சங்கமித்ரா மிடுக்காகச் சென்று அங்கிருந்த சோபாவில் அமர்ந்தாள்.*

*"இந்தக் கல்யாணம் முடியிறதுக்குள்ள இவ என்ன பாடு படுத்தினா தெரியுமா? மதியை வேண்டம்ன்னா... அங்க கொடுக்கிறதுக்குக் கிணத்துல தள்ளுன்னா?" அவள் அம்மா சலிக்க,*

*"என்கிட்டயும் கோபமா தான இருந்தாங்க மேடம்." என்ற சுபத்ரா,*

*"நீ என் தங்கச்சி, அப்படிச் சரி இல்லாத இடத்திலேயா உன்னைக் கொண்டு தள்ளிடுவேன். அப்படி நல்ல இடம் இல்லைனா, நான் உன்னை அங்க செய்ய விடுவேனா? மத்தவங்க அந்த வீட்ல எப்படியோ? ஆனா மதி எனக்கே அவ்வளவு பார்க்கும். அப்ப பொண்டாட்டி உன்னை எப்படி வச்சுக்கும்." என்றாள் சுபத்ரா பெருமையாக.*

*"இந்தாங்க, நம்ம கடையில இருந்து உங்க ரெண்டு பேருக்கும் ஒரே மாதிரி புடவைகள் கொண்டு வந்தேன்." என இரு டிஸைனர் புடவைகளை ஜெய்*

https://t.me/tamilpdfebooks

தங்கைகளிடம் கொடுக்க, இருவரும் ஆளுக்கொரு நிறத்தை எடுத்துக் கொண்டனர்.

“இப்ப எதுக்குடா இவளுங்களுக்குப் புடவை? ஏற்கனவே அவ்வளவு வச்சிருக்காளுங்க.” அவன் அம்மா சொல்ல,

“இருக்கட்டும் மா, நான் இன்னைக்குச் சந்தோஷமா இருக்கேன்.” என்றான் ஜெய். அவர்களது ஜவுளி கடை என்பதால்... எப்போதும் துணிகளுக்குப் பஞ்சம் இல்லை.

சரக்கு வந்ததும், மித்ரா தனக்குப் பிடித்ததை எடுத்துக் கொண்டதும் தான், மீதியை கடைக்கே அனுப்புவான் ஜெய். அதே போல, சுபத்ரா வந்தாலும், அவளுக்குப் பிடித்ததை எடுத்து செல்வாள்.

அண்ணனின் பாசம் புரியாமல் இல்லை. ஆனாலும் அவன் தன்னை நம்பவில்லை என்ற கோபம் இருந்தது. அதனால் மித்ரா அவனோடு பேசாமல் இருந்தாள். ஜெயிக்கும் அது புரிந்துதான் இருந்தது.

“மாப்பிள்ளை கடையில இருக்கார். இன்னும் கொஞ்ச நேரத்தில கொண்டு வந்து விடுறேன்.” எனச் சொல்லும்போது, தங்கையின் முகம் மலர்வதைக் கண்டுவிட்டே, ஜெய் கடைக்குச் சென்றான்.

https://t.me/tamilpdfebooks

*சொன்னது போலப் பன்னிரண்டு மணி போல் மதியழகனை கொண்டு வந்து விட்டவன், சாப்பிட வருவதாகச் சொல்லி, அப்படியே வாசலில் இருந்து சென்றுவிட்டான்.*

*இன்னும் ஜெய் கொடுத்த புடவைகள் சோபாவில் இருக்க, "யாருக்கு புடவை?" எனக் கேட்டபடி மதியழகன் சோபாவில் உட்கார்ந்தான்.*

*"எனக்கும் அக்காவுக்கும் ஒரே மாதிரி அண்ணா எடுத்திட்டு வந்தாங்க." என்றாள் மித்ரா.*

*புடவையைக் கையில் எடுத்து பார்த்தவன், அதன் விலையைப் பார்த்துவிட்டு, தனது பர்சில் இருந்து பணம் எடுத்து மித்ராவிடம் கொடுத்து, "நீங்க ரெண்டு பேரும் ஒரே மாதிரி கட்டிட்டு, ரேவதி அண்ணி கட்டலைனா நல்லா இருக்காது. அவங்களுக்கும் ஒன்னு இதே மாதிரி எடுத்திட்டு வர சொல்லு." என்றான்.*

*அக்கா தங்கைகள் ஒரே மாதிரி எடுப்பது இயல்புதான். இதுவரை தனித் தனி இடத்தில் இருந்தனர். ஆனால் புகுந்த வீட்டில் இன்னொரு மருமகளும் இருக்கிறாள், அவளை விட்டு இவர்கள் இருவரும் மட்டும் ஒரே மாதிரி கட்டுவது, அவளை வித்தாயசமாகக் காட்டும் அல்லவா. அவளை மட்டும் தனிமைப் படுத்துவது போலவும் தோன்றும்.*

https://t.me/tamilpdfebooks

*“ஜெய் சாப்பிட வரும்போது என்னை எழுப்பு. அதுவரை நான் கொஞ்ச நேரம் படுக்கிறேன்.” என மதியழகன் மாடிக்கு சென்றுவிட்டான்.*

*“மதி உன்னை நல்லாத்தான் பார்த்துக்கும், அதே நேரத்தில குடும்பத்தையும் விட்டுக் கொடுத்திடாது. மதி மட்டும் இல்லை அவங்க அண்ணன்களும் அப்படித்தான். இதையும் தெரிஞ்சிக்கோ.” என்ற சுபத்ரா,*

*“நான் அண்ணன்கிட்ட சாப்பிட வரும்போது புடவை எடுத்திட்டு வர சொல்றேன்.” எனப் பணத்தை வாங்கிக் கொண்டாள்.*

*“நீயும் போய் ரெஸ்ட் எடு. மாப்பிள்ளைக்கு இந்த இளநீரை கொண்டு போ...”என அவளது அம்மா, ஒரு சொம்பு நிறைய இளநீரை அவளிடம் கொடுத்து அனுப்பினார்.*

*மித்ரா சென்றபோது மதியழகன் அப்போதுதான் உடை மாற்றி விட்டுப் படுக்கத் தயாரானான்.*

*இவளைப் பார்த்ததும் புன்னகைத்தவன், “என்னோட ட்ரெஸ் எல்லாம் துவைச்சுப் போட்டிருக்கப் போலிருக்கு.” என்றான்.*

https://t.me/tamilpdfebooks

இவள் பதில் சொல்லாது இளநீரை அவனிடம் கொடுக்க, அதை வாங்கிக் கொண்டு கட்டிலில் அமர்ந்தவன், அவளையும் இழுத்து தன் பக்கத்தில் உட்கார வைத்து, தானும் குடித்து அவளையும் குடிக்க வைத்தான்.

பிறகு அவன் கட்டிலில் சாய்ந்து கொண்டு, அவளை இழுத்து தன் மீது போட்டுக் கொண்டான். சிறிது நேரம் அவளை முத்தமிட்டும் மகிழ்ந்தான்.

"நீ இங்க இருந்தா நான் தூங்க மாட்டேன். நீ கீழ போய் உங்க அம்மாவுக்கும், அண்ணிக்கும் ஹெல்ப் பண்ணு." என்றான்.

"அவங்கதான் மேல போகச் சொன்னாங்க." என்றவள், அவன் பக்கத்தில் படுத்து,

"நான் உங்களைத் தொந்தரவு பண்ணலை. ஆனா உங்க செல் கொடுங்க." என்றாள்.

அவன் செல்லைக் கொடுத்ததும், அதைப் பார்க்க ஆரம்பித்தாள். மதியழகன் அவளைப் பார்த்தபடி உறங்கியும் போனான். செல்லைப் பார்த்துக் கொண்டிருந்த மித்ராவும், சிறிது நேரத்தில் உறங்கி போனாள்.

https://t.me/tamilpdfebooks

மதியம் மித்ரா தான் முதலில் எழுந்து மதியழகனை எழுப்பினாள். “ரெண்டு மணி ஆகுது. அண்ணன் சாப்பிட வந்திடுவாங்க. கீழ போகலாமா.” என்றாள்.

“நீ போ...நான் வரேன்.” என அவளை முதலில் அனுப்பிவிட்டு, முகம் கழுவி உடைமாற்றி மதியழகன் கீழே சென்றான்.

ஜெய் அப்போதுதான் வந்திருந்தான். ஹாலில் தலைவாழை இலைப் போட்டு, சுபத்ராவும் அவள் அம்மாவும் பரிமாற... மற்றவர்கள் வரிசையாக உட்கார்ந்து பேசிக்கொண்டே சாப்பிட்டனர்.

மீன் குழம்பு, மீன் வறுவல், இறால் தொக்கு, நண்டு என ஒரு பெரிய விருந்தே இருந்தது.

மனைவியின் இலையைப் பார்த்த மதியழகன், “உனக்கு நண்டு பிடிக்காதா?” என்றான்.

“ம்ம்... பிடிக்கும், ஆனா அது உடைச்சு சாப்பிட தெரியாது.” என்றாள் மித்ரா.

https://t.me/tamilpdfebooks

*“உடைச்சு சாப்பிட சோம்பேறின்னு சொல்லு.” என்றார் அவளின் அம்மா.*

*மதியழகன் நண்டை எடுத்து, ஓடை உடைத்து, உள்ளிருந்த சதையை மட்டும் எடுத்து ஓரமாகச் சேர்த்துக் கொண்டே வந்தான். ஜெய்க்கு அப்போதே தெரியும், மனைவிக்குத்தான் கொடுக்கப் போகிறான் என்று.*

*அவன் எதிர்பார்த்தது போல, மித்ராவின் இலையில் வைத்தான். அவள் கணவனைப் பார்த்து புன்னகைத்துக் கொண்டே எடுத்து சாப்பிட்டாள்.*

*விட்டுட்டு போறேன்னு சொன்ன புருஷனையே, சுபத்ரா விட்டுக் கொடுக்க மாட்டாள். இதுல இப்படியெல்லாம் தாங்கினா, சின்னது நம்மை எல்லாம் சீக்கிரம் மறந்திடும் என ஜெய் நினைத்துக் கொண்டான்.*

*மாலை இருவரும் படத்துக்குச் சென்றனர். இடைவெளியில் மதியழகன் மித்ரா கேட்ட கோன் ஐஸ் வாங்கிக் கொடுக்க, அதைப் பாதிச் சாப்பிடும் வரை, அருகில் இருந்த கணவன் கூடத் தெரியவில்லை. பிறகுதான் நினைவு வந்து, “உங்களுக்கு வேணுமா?” என்றாள்.*

*“நீ கையில வச்சிருக்க ஐஸ்கிரீம் விட... அதைச் சாப்பிட்ட உன் உதடு தான் டேஸ்ட் அதிகம். எனக்கு அதுதான் வேண்டும்.” என்றான்.*

https://t.me/tamilpdfebooks

*முகம் சிவந்து, மித்ராவுக்குப் பதட்டம் ஆகிவிட்டது. பக்கத்தில் இருந்தவர்கள் கேட்டு விட்டார்களா எனச் சுற்றிலும் ஒருமுறை திரும்பி பார்த்துக் கொண்டாள். 'இனிமே ஐஸ்கிரீம் வேணுமான்னு கேட்ப?' என அவளுக்கு அவளே கேட்டுக் கொண்டு, தானே முழு ஐஸ்கிரீமும் சாப்பிட்டு முடித்தாள்.*

*படம் முடிந்து பைக்கை எடுக்கச் சென்றனர். மதியழகன் வண்டியை எடுக்க, மித்ரா யாரோ தன்னை நெருங்கி நெருங்கி வருவதை உணர்ந்தாள்.*

*யாரோ என நினைத்து பார்த்தவள், அங்கே நவீனைப் பார்த்ததும் அரண்டு விட்டாள்.*

*இத்தனைக்கும் கழுத்தில் தடிமனான தாலி இருக்கிறது, நெற்றி வகுட்டில் குங்குமம் இருக்கிறது. திருமணம் ஆனப் பெண் என அவளைப் பார்த்ததும் தெரியும்.*

*அப்போதும் நெருங்கி வருகிறானே ,இவனை என்ன செய்வது என்பது போலப் பார்த்தவள், "என்னங்க?" என்றாள் சத்தமாக.*

*இவர்கள் வண்டியை எடுக்கப் பக்கத்தில் இருந்த வண்டியை நகர்த்திக் கொண்டு இருந்தவன், மித்ராவின் குரல் கேட்டு, அவள் முகம் பார்த்தான்.*

https://t.me/tamilpdfebooks

*அவள் பயந்து போய்ப் பக்கத்தில் நின்றவனைப் பார்த்துக் கொண்டு இருந்தாள். வண்டியை அப்படியே விட்டு அவளிடம் சென்றான்.*

*“என்ன மித்ரா?”*

*“இந்த ஆளை என்னன்னு கேளுங்க?” என்றாள்.*

*“என்ன?” என்றான் நவீனைப் பார்த்து, அந்த ஒரு வார்த்தையிலேயே அனல் பறந்தது.*

*“இல்லை தெரிஞ்சவங்க மாதிரி இருந்துச்சு, அதுதான் பார்த்தேன்.” என்றான்.*

*“அதுக்காகப் பக்கத்தில வந்து பார்ப்பியா?” என்றவன், “தொலைச்சிடுவேன். இங்க இருந்து ஓடிடு.” என்றான்.*

https://t.me/tamilpdfebooks

நவீன் இவர்களைத் திரும்பித் திரும்பி பார்த்துக் கொண்டே செல்ல, மதியழகன் வண்டியை எடுக்க, அதில் மித்ரா ஏறி அமர்ந்தாள்.

தியேட்டர் விட்டு வெளியே வந்ததும், "எங்க போனாலும் பொண்ணுங்களை விட மாட்டானுங்க. கல்யாணம் ஆனப் பொண்ணுங்க, ஆகாத பொண்ணுங்க, எல்லோருமே ஒண்ணுதான் இவங்களுக்கு." அவன் கோபமாக முனங்க,

"இவன் என்னைக் கல்யாணத்துக்கு, முன்னாடியும் இப்படித்தான் பார்ப்பான்." என்றாள் சங்கமித்ரா.

வண்டியை சட்டென்று பிரேக் போட்டு மதியழகன் நிறுத்தி விட, மித்ரா ஒருநொடி கலங்கிப் போனாள்.

"உனக்கு முன்னாடியே அவனைத் தெரியுமா?"

"எங்க காலேஜ் ஸ்டாப்பில நின்னுட்டு இருப்பான். ஒருமுறை என்கிட்டே வந்து பேசினான். அதுக்குப் பிறகு அண்ணன்தான் காலேஜ் கொண்டு போய் விட்டு கூடிட்டு வந்தாங்க."

https://t.me/tamilpdfebooks

*"அப்புறம் இன்னைக்குதான் பார்கிறேன்." என உண்மையே சொன்னாள்.*

*யாரோ எவனோ என நினைத்து விட்டிருந்தான். இது எதோ சரி இல்லை என்று தோன்ற, வண்டியை திருப்பி இருந்தான். நல்லவனாக இருந்திருந்தால், கல்யாணம் ஆனது தெரிந்ததும், விலகி இருப்பனே என்று தோன்றியது.*

*அது அகலமான தார் சாலை... எதிரே நவீன் வரக் கூடும் என வலது பக்கமே ஓரமாகச் சென்றான். இரவு நேரம் என்பதால்... ஆள் நடமாட்டமும் இல்லை.*

*"அவன் பேரு என்ன?"*

*"அவன் பேரெல்லாம் எனக்குத் தெரியாது." என்றாள்.*

*அவன் எதிர்ப்பார்த்தது போல, நவீன் அவன் வண்டியில் வந்தான். அவன் எதிரில் கொண்டு போய் வண்டியை நிறுத்தியவன், இறங்கி சென்று நவீனின் சட்டையைப் பிடித்து, வண்டியில் இருந்து இறங்கு என்றான்.*

*"யாரு டா நீ? எங்க வீட்டு பொண்ணு பின்னாடி ஏன் வர்ற?"*

https://t.me/tamilpdfebooks

*“நான் லவ் பண்ண பொண்ணு சார்.” நவீன் சொல்லித்தான் முடித்து இருப்பான். மதியழகன் விட்ட அறையில், அவன் கண்ணில் பூச்சு பறக்க, காதில் கொய் எனச் சத்தம் கேட்டது.*

*அந்தப் பக்கம் சென்ற ஒருவர், “என்ன சார்?” என்றார்.*

*“என் பர்சை திருடிட்டான். நான் பார்த்துகிறேன். நீங்க போங்க.” என்றான்.*

*“நீ பொறுக்கித் தனமா பின்னாடி சுத்திட்டு, அதுக்குப் பேரு லவ்ன்னு சொல்வியா?”*

*“பொண்ணுங்க படிக்கத் தானே டா வெளியப் போகுதுங்க. அதுங்களை நிம்மதியா படிக்கக் கூட விட மாட்டீங்களா? லவ்வுங்கிற பேர்ல எவ்வளவு டார்ச்சர் பண்றீங்க.” என்றவன், இன்னும் நாலு அறை விட்டான்.*

*மித்ரா தடுக்கவெல்லாம் இல்லை. அவன் அடி வாங்குவதை கண்குளிர பார்த்து ரசித்தாள்.*

https://t.me/tamilpdfebooks

இவனால் அல்லவா அவள் படிப்புப் போனது. அதோடு உடனே திருமணமும் நடந்தது. மதியழகன் போல் இல்லாமல், அவசரத்தில் குணம் சரி இல்லாத வேறு யாரையாவது திருமணம் செய்து இருந்தால்.. காலம் முழுக்க அவள்தானே கஷ்ட்டபப்ட வேண்டும் என நினைத்துத் தடுக்காமல் பார்த்துக் கொண்டு இருந்தாள்.

மதியழகன் நவீனின் செல்லை எடுத்து அதை ஆராய்ந்தான். அவன் செல்லில் இருக்கும் புகைப் படங்கள், அவனது முகநூல் பக்கம், அதில் இருக்கும் புகைப்படங்கள் என எல்லாவற்றையும் ஆராய்ந்து, அதில் எதுவும் மித்ரா படங்கள் இல்லை எனத் தெரிந்தாலும், அதில் இருந்த மற்ற எல்லாவற்றையும் அழித்து விட்டே செல்லை திருப்பிக் கொடுத்தான்.

“இன்னொரு தடவை என் பொண்டாட்டி பின்னாடி நீ வர்றதை பார்த்தேன். அன்னைக்குதான் நீ இந்த உலகத்தில இருக்கிற கடைசி நாள். நல்லா நியாபகம் வச்சுக்கோ.” என்றான் மதியழகன் மிரட்டலாக.

இன்னைக்கு வாங்கிய அறைக்கே நான்கு நாள் வாயை திறக்க முடியாது போல... இனி இவன் கண்ணுல மட்டும் மாட்டிடவே கூடாது... என நவீன் அங்கிருந்து தப்பித்தால் போதும் என ஓடிவிட்டான்.

வீட்டிற்கு சென்றவர்களிடம், “ஏன் இவ்வளவு லேட்?” என்று கேட்ட ஜெய்யிடம், எதோ சொல்லி சமாளித்துச் சாப்பிட்டு, இருவரும் மாடிக்கு வந்துவிட்டனர்.

https://t.me/tamilpdfebooks

*புடவை கூட மாற்றாமல் மித்ரா கட்டிலில் உட்கார்ந்து இருந்தாள். மதியழகன், உடை மாற்றி முகம் கழுவி வந்தான்.*

*“ஏன் அவன் செல்லை எடுத்து பார்த்தீங்க? நீங்க என்னை நம்பலையா?”*

*“அடிச்சு பல்லைக் கழட்டிடுவேன். அவன் உனக்குத் தெரியாம போட்டோ எடுக்க முடியாதா? உன்னைப் பழிவாங்க எதிலாவது உன் போட்டோவை ஏத்திவிட்டா, அதுதான் பார்த்தேன்.” என்றான்.*

*“நிஜமா நீங்க என்னை நம்புறீங்க தான. அவன் பேர் கூட எனக்குத் தெரியாது.” என்றவளுக்குக் கண்ணீர் எட்டிப் பார்க்க,*

*அவள் அருகே சென்றவன், “ஒரு பொருக்கி சொல்றதை வச்சு, நான் உன்னைத் தப்பா நினைப்பேனா மித்ரா. நீதானே அவனைப் பத்தி என்கிட்டே சொன்ன. நீ நினைச்சா சொல்லாம இருந்திருக்கலாமே.”*

*“நீ இப்படிக் கேட்டா, நீதான் என்னை நம்பாத மாதிரி இருக்கு.” என்றான் மதியழகன்.*

https://t.me/tamilpdfebooks

தன் கணவன் தன்னை நம்புகிறான் என்றதும், அதுவரை என்ன சொல்வானோ? அல்லது என்ன கேட்பானோ? என பயந்து போய் இருந்தவள், உட்கார்ந்த வாக்கிலேயே அவனை இடையோடு சேர்த்து அனைத்துக் கொண்டாள். இப்போது அவளுக்கு அழுகை வந்தது.

“ஏய் பொண்டாட்டி, என்னைச் சோதிக்காத டி.. நேத்து ராத்திரிதான் வேஸ்ட் பண்ணோம். இன்னைக்கு நைட்டுக்காக, நான் காலையில் இருந்து வெயிட் பண்ணிட்டு இருக்கேன்.” என்றான் கிறக்கமாக.

மித்ராவுக்கு அழுகை நின்று விட்டது. அவள் அவன் முகம் பார்த்து சிரிக்க, அப்படியே அவளோடு கட்டில் சரிந்தான்.

அவர்களின் சரசதிற்கு ஏற்ப, மித்ராவின் கால் சலங்கை சிணுங்க... “முதல்ல இதைக் கழட்டனும். ரொம்ப டிஸ்டர்ப் செய்யுது.” என்றவன், அவள் கால் கொலுசை கழட்ட ஆரம்பித்தான்.

நிறையப் பேர் தாலியை கழட்டி வைக்கிறாங்க. பரவாயில்லை டா... நீ கொலுசை தான் கழட்டுற.

# அத்தியாயம் 7

https://t.me/tamilpdfebooks

அன்று சம்பந்தி விருந்து என்பதால்.... காலையிலேயே மித்ரா எழுந்து குளித்து, தனது பெட்டிகளில் மிச்சம் மீதி வைக்க வேண்டியது இருந்தவைகளையும் வைத்துக் கொண்டு இருந்தாள்.

சுபத்ராவும், அவள் அம்மாவும் அவளுக்கு உதவிக் கொண்டு இருந்தனர். வீட்டில் வைத்தால் இடம் பத்தாது என வீட்டிற்குப் பக்கத்தில் இருந்த சின்ன மண்டபத்தில் காலையும் மதியமும் உணவுப் பரிமாறுவதாக இருந்தது.

இவர்களின் பக்கம் சொந்தங்கள் எல்லாம் காலை உணவுக்கு வந்து விடுவார்கள். மாப்பிள்ளை வீட்டினர் மதியம்தான் வருவார்கள்.

"சங்கமித்ரா முகத்தை இப்படி வச்சுக்காத மாப்பிள்ளை பார்த்தா தப்பா நினைக்கப் போறார். சந்தோஷமா கிளம்புமா." அவள் அம்மா சொல்ல, மித்ரா அவரைப் பார்த்து முறைத்து வைத்தாள்.

ஜெய், காலை உணவு மண்டபத்தில் சமைப்பத்தை ஒரு எட்டு சென்று பார்ப்பான், பிறகு தங்கை இருக்கும் இடத்திற்கு வேலை இருப்பது போல வந்து நிற்பான்.

https://t.me/tamilpdfebooks

அவன் வருவதும் போவதுமாக இருப்பதைப் பார்த்த அவர்கள் அம்மா, "ஜெய் தான் பாவம், இவளை விட்டுட்டு எப்படி இருப்பானோ தெரியலை. மித்ரா வீட்ல இருந்தா... பத்து தடவை வீட்டுக்கு வருவான்." என்றார் சோகமாக.

"ஆமாம் மா எனக்கும் அண்ணனைப் பார்த்தா பாவமா இருக்கு. அண்ணனுக்குச் சீக்கிரம் கல்யாணம் பண்ணி வச்சிடுங்க மா... அப்ப அண்ணனுக்கு ஒன்னும் தெரியாது. உங்களுக்கும் வீட்டுக்கு மருமகள் வந்திட்டா நல்லா இருக்கும்." என்றாள் சுபத்ரா.

"அம்மா, அண்ணனுக்கு நம்ம வாணி அத்தை பொண்ணு நிஷாவை கேளுங்க மா. அண்ணனுக்கு அவளைப் பிடிக்கும்." என்றாள் மித்ரா.

"உனக்கு எப்படி டி தெரியும்? உங்க அண்ணன் சொன்னனா?"

"இல்லை. ஆனா எனக்குத் தெரியும். அண்ணனுக்கு அவளைப் பிடிக்கும்." என்றாள் மித்ரா உறுதியாக.

"நல்லப் பொண்ணுமா அவ..." என்றாள் சுபத்ராவும். ரத்த சொந்தம் இல்லையென்றாலும், நிஷாவின் அம்மா அவர்களுக்கு அத்தை முறை. நிஷாவும் மித்ராவும் தோழிகள்.

https://t.me/tamilpdfebooks

*“சரி ஒரு மூன்னு மாசம் போகட்டும். பேசலாம்.” என்றார்.*

*உறவினர்கள் வர தொடக்கி விட, அதன் பிறகு இவர்களுக்கும் பேச நேரம் இல்லை. மதியம் பெரிய பட்டுபுடவைக் கட்டி, மித்ரா நன்றாக அலங்காரம் செய்து மதியழனோடு மண்டபம் சென்றாள்.*

*பன்னிரெண்டு மணி போல்... மதியழகன் வீட்டினர் காரிலும், வேன்னிலும், தங்கள் சொந்தபந்தங்களை அழைத்துக் கொண்டு வந்துவிட்டனர். கூடவே மதியழகனின் நண்பர்கள்.*

*“டேய் மாப்பிள்ளை. என்ன டா நம்ம பையன் தேறுவானா?” நடராஜ் வெங்கடேஷிடம் கேட்க,*

*“இரு பார்ப்போம், மாப்பிள்ளை முகத்தைப் பார்த்ததும் தெரிஞ்சிடும்.” என்றான் வெங்கடேஷ்.*

*“இவர்கள் எல்லோரும் வருவது தெரிந்து மதியழகன், வெளியே வந்து நின்றிருந்தான். இவர்களைப் பார்த்ததும் அவன் சந்தோஷமாகக் கை அசைக்க,*

https://t.me/tamilpdfebooks

*“டேய் நம்ம பையன் வாழ்ந்துட்டான் டா... முகமே சொல்லுது பார்.” என்றான்.*

*“உனக்குக் கல்யாணமே ஆகலை உனக்கு எப்படி டா தெரியும்?”*

*“எல்லாம் பொது அறிவுதான்.” என்ற வெங்கடேஷ் மதியழகன் அருகில் சென்றான்.*

*மதியம் மட்டன் பிரியாணி, அது பிடிக்காதவர்களுக்குச் சிக்கென் பிரியாணி, அதுவும் வேண்டாம், நாங்கள் சைவம் என்பவர்களுக்கும், தனிச் சமையல் செய்யப்பட்டிருந்தது.*

*மதியம் உணவு நேரத்திற்குத் தான் நிஷா தன் பெற்றோரோடு வந்தாள். உயரமாக ஒடிசலாக, மாநிறத்தில் பாந்தமான அழகுடன் இருந்தாள். அவள் வந்ததும் மித்ராவும் நிஷாவும் ஒன்றாகச் சுற்றிக் கொண்டு இருந்தனர்.*

*ஜெய் நிஷாவை பார்த்தான். ஆனால் ஒன்றும் காட்டிக்கொள்ளவில்லை. ‘சரியான கல்லுணி மங்கன் டா நீ...’ என மித்ரா மனதிற்குள் அவனைத் திட்டுக் கொண்டாள். நிஷாவும் அப்படித்தான் இருந்தாள். அவளுக்கும் ஜெய்யை பிடிக்கும். ஆனால் மித்ராவிடமே இதுவரை வாய்த்திறந்தது இல்லை.*

https://t.me/tamilpdfebooks

காதலிப்பதாகச் சொல்லிக் கொண்டு, தினமும் பத்து மணி நேரம் போன்னில் கடலைப் போட்டு... அது போதாதென்று வெளியில் சேர்ந்து சுற்றி எனக் காதலிக்கும் காதலர்களை விட... தங்கள் காதலை சொல்லிக் கொள்ளாமல். தங்கள் மனதிற்குள் மட்டும் காதலிப்பவர்களின், காதல் இன்னும் வலிமையானது.

மதியழகனும் அப்படித்தான் தன் மீது காதல் கொண்டிருந்தான் எனச் சங்கமித்ராவுக்கு இன்னும் தெரியாது.

தங்கள் பக்கம் சொந்த பந்தம் சாப்பிட்டு முடித்ததும், புது மணமக்களை அழைத்து வரும் பொறுப்பைக் கதிரேசன் சுபத்ராவிடம் விட்டு, மற்றவர்களை அழைத்துக் கொண்டு துரை வேன்னில் கிளம்பி விட்டார். வெங்கடேஷ், நட்ராஜ் மட்டும் போகவில்லை.

மதியம் மூன்று மணி போல மண்டபத்தில் இருந்து வீடு வந்தனர். மித்ரா அறையில் பட்டுப்புடவையை மாற்ற, அவளிடம் வந்த மதியழகன், “மித்ரா, நீ உங்க அண்ணன்கிட்ட நல்லா பேசி நான் பார்க்கவே இல்லை. உங்க ரெண்டு பேர்க்கும் இடையில என்னன்னு எனக்குத் தெரிய வேண்டாம். ஆனா நீ அவர்கிட்ட பேசாம வந்தேன்னா... அங்க வந்து, நீயும் நிம்மதியா இருக்க மாட்ட. அவரும் இந்த நிம்மதியா இருக்க மாட்டார்.” என்றான்.

மித்ரா கீழே வந்தபோது, ஹாலில் ஜெய் மட்டுமே இருந்தான். அவளாகச் சென்று அவன் பக்கத்தில் உட்கார, “நான் உன்னை அன்னைக்குக் கோபத்தில்தான்

https://t.me/tamilpdfebooks

அப்படிப் பேசினேன். உன்னைப் போய் நான் தப்பா நினைப்பேனா மித்ரா. நானே அந்தப் பய என்ன ஓரண்டையை இழுக்கப் போறான்னு பயந்து போய் இருந்தேன். நீ வேற மாப்பிள்ளைகிட்ட முகத்தைத் திருப்பிட்டே இருந்த... அந்தக் கோபத்தில பேசிட்டேன்."

"அதுக்காக நீ அண்ணாகிட்ட பேசாம இருப்பியா?"

"சரி அதை விடு அண்ணா. ஆனா உனக்கு ஒன்னு தெரியுமா?" என்றவள், முன்தினம் படம் பார்த்துவிட்டு வந்தபோது நடந்த அனைத்தையும் சொல்லிவிட்டாள்.

"அவரு உன்னை ஒன்னும் சொல்லலையா?"

"இல்லையே... அவர் என்னை நம்புறார்." சொல்லும்போதே அவள் குரலில் அவ்வளவு பெருமிதம், அதைப் பார்த்து ஜெய்க்குச் சிரிப்பு வந்தது.

"ம்ம்... மதியழகன் உன்னை ரொம்ப மயக்கிட்டார் போலவே...எனக்கு ரொம்பச் சந்தோஷமா இருக்கு மித்ரா. அவர் உன்னைப் நல்லா பார்த்துப்பார், எனக்கு இனி கவலை இல்லை."

https://t.me/tamilpdfebooks

*"ஏன் நான் அவரை நல்லா பார்த்துக்க மாட்டேனா?"*

*மித்ரா துடுக்காகக் கேட்க, "அப்படி நடந்தாலும் சந்தோஷம்தான்." என்றவன், "நீ உன் வீட்டுக்கு போகும் போது சிரிச்சிட்டு போகணும் மித்ரா. அழுதுட்டு மட்டும் போகாத. உன் அழுத முகமே என் கண்ணுல நிக்கும்." என்றான் ஜெய்.*

*மாலை ஐந்து மணி போல... சங்கமித்ரா தன் புகுத்த வீடு கிளம்பினாள். அவளின் அண்ணனின் விருப்பத்திற்கு ஏற்ப, சிரித்த முகமாகவே எல்லோரிடம் சொல்லிக் கொண்டு சென்றாள்.*

*ஒரு அழுகாச்சி ஸீனை எதிர்பார்த்த மதியழகனுக்குக் கூட மித்ராவின் இந்தச் செய்கையை நம்ப முடியவில்லை.*

*ரொம்பச் சந்தோஷப்பட்டுக்காத, கார்ல ஒரு ஆக்க்ஷன் ஸீன் இருக்கு டா உனக்கு.*

*"நீங்க என் தங்கச்சியை நல்லா பார்த்துபீங்க. ஆனா கொஞ்சம் எங்க வீட்டுக்கும் அடக்கடி வந்து போய் இருங்க." என்றுதான் விடைபெறும் போது, ஜெய் மதியழகனிடம் கேட்டுக் கொண்டான்.*

https://t.me/tamilpdfebooks

*மதியழகன் காரை ஓட்ட, அருகே கதிரேசன் உட்கார்ந்து இருந்தான். நடு இருக்கையில் சங்கமித்ரா, சுபத்ரா மற்றும் அவளின் பிள்ளைகள். சுமோ என்பதால்.. பின்புற இருக்கையில் வெங்கடேஷும், நட்ராஜும் இருந்தனர்.*

*அதுவரை அண்ணனுக்காகப் பொறுத்துக் கொண்டிருந்தவள், கார் நகர்ந்ததுமே அடக்க முடியாமல் கண்ணீரை கொட்டி விட... ஆளாளுக்கு அவளுக்குச் சமாதானம் சொல்லினார்கள்.*

*“நான்தான் உன்னோட இருக்கேன் இல்லை.” எனச் சுபத்ராவும்,*

*“மதி உன்னை நல்லா பார்த்துப்பான் மா...” என நட்ராஜும்.*

*“விடு தங்கச்சி... அதெல்லாம் நாங்க எல்லாம் இருக்கோம் உனக்கு.” என வெங்கடேஷும் சொல்ல.... அவர்களைப் போலச் சமாதானம் சொல்ல எண்ணிய கதிரேசன், “நீ என்ன வெளிநாட்டுக்கா போற? நினைச்சா பார்த்துக்கலாம்.” என வாய் விட...*

*“அப்படி எத்தனை தடவை அத்தான், நீங்க எங்க அக்காவை எங்க வீட்டுக்கு கூடிட்டு வந்திருக்கீங்க? இல்லைனா அனுப்பி வச்சிருக்கீங்க?” சங்கமித்ரா நறுக்கென்று கேட்க,*

https://t.me/tamilpdfebooks

அவள் இப்படிப் பேசுவாள் என எதிர்பார்க்காத மதியழகன், "ஹே யாரைப் பார்த்துக் கேள்வி கேட்கிற?" என்றான் கோபமாக.

"அவர் உங்க அண்ணன் மட்டும் இல்லை. என்னோட அக்கா வீட்டுக்காரர், என்னோட அத்தான். எனக்கு அவரைக் கேட்க உரிமை இருக்கு." என்றாள் மித்ராவும் எடுத்தெறிந்து.

"அவ என்னோட கொழுந்தியா, அவளுக்கு என்னைப் பேச உரிமை இருக்கு. நீ ரோட்டை பார்த்து வண்டி ஓட்டு." என்றான் கதிரேசனும்.

"இந்த ஏழு வருஷத்துல, தலை தீபாவளிக்கு ரெண்டு நாள் வந்தீங்க, அப்புறம் பொங்கலுக்கு ஒரு நாள் வந்தீங்க. முதல் குழந்தைக்கு ஒன்பது மாசம் இருக்கும் போது அக்கா வந்தா... குழந்தை பிறந்து மூன்னு மாசம் வரை இருக்கட்டும்ன்னு, எங்க அம்மா கெஞ்ச கெஞ்ச முப்பது நாள்லையே கூடிட்டு போனீங்க. ரெண்டாவது குழந்தைக்கு அனுப்பவே இல்லை. இப்ப கடைசி நாலு வருஷமா வருஷத்துக்கு ஒருவாரம் அனுப்புறீங்க. இதுதான் நீங்க சொன்ன நினைச்சா பார்த்துக்கலாமா?"

மித்ரா இப்படிப் புள்ளி விவரத்தோட தாக்குவாள் என யார் எதிர்ப்பார்த்தார்? எல்லாம் வாய்யடைத்து போய் இருந்தனர்.

https://t.me/tamilpdfebooks

*"நீங்க நல்லா வச்சுகிட்டா பொண்ணுங்க அம்மா வீட்டை மறந்திடனுமா? உங்களுக்கு அண்ணன் தம்பி மாதிரிதானே எங்களுக்கும் இருக்கும்."*

*"நான் இப்பவே சொல்லிட்டேன். நான் எங்க அக்கா மாதிரி இருக்க மாட்டேன். நான் எங்க அப்பா அம்மா அண்ணனை பார்க்க வருவேன். அது யார் தடுத்தாலும் நிக்காது."*

*இன்று அவள் வீட்டினரை பிரிந்து வந்தது, இனி அவர்களை எப்போது பார்ப்போமோ என்ற கவலை... அதோடு கதிரேசன் பேசியது, எல்லாம் சேர்ந்து, மித்ரா மனதில் இருந்ததைக் கொட்டி விட்டாள்.*

*காரை ஓரமாக நிறுத்திய மதியழகன், "மித்ரா, இப்ப மட்டும் நீ வாயை மூடலைன்னு வச்சுக்கோ... அடிச்சு பல்லைக் கழட்டிடுவேன் சொல்லிட்டேன்."*

*"யாரு டி உன்னைப் போக வேண்டாம்ன்னு சொன்னா? இப்பவே வேணா இறங்கிப் போ." என்றான் கோபமாக.*

*"டேய் ! அந்தப் பிள்ளை அவங்க வீட்டை விட்டு வந்த டென்ஷன்ல பேசினா... நீயும் புரிஞ்சிக்காம பேசுற? நீ இறங்கு நான் ஓட்டுறேன்." என வெங்கடேஷ் சொல்ல, மதியழகன் இறங்கி சென்று மித்ராவின் அருகில் அமர்ந்தான்.*

https://t.me/tamilpdfebooks

கதிரேசனின் பிள்ளைகள் நட்ராஜிடம் சென்று உட்கார்ந்து கொண்டனர். மதியழகன் மித்ராவை முறைத்துக் கொண்டே வந்தான். மித்ராவும் கோபமாக இருந்தாள்.

கதிரேசன் சுபத்ராவை பார்த்தான். அவள் எப்போதும் போல அமைதியாக இருந்தாள். மித்ரா கோபமாகச் சொன்னாலும் உண்மையைத்தான் சொன்னாள். ஆனால் சுபத்ரா எப்போதாவது இப்படி மித்ரா மாதிரி சண்டை பிடித்து இருந்தால்... அவனுக்கும் புரிந்து இருக்குமோ என்னவோ.... ஆனால் இதுவரை சுபத்ரா அப்படி எதுவும் செய்தது இல்லை.

பாதித் தூரம் சென்றதும், வழியில் டீ குடிக்க நிறுத்தினர். எல்லோரும் சென்று விட, மதியழகன் மித்ரா மட்டும் காரில் இருந்தனர்.

அவள் பக்கம் திரும்பியவன், "இங்கப் பாரு மித்ரா, நான் இன்னைக்குச் சொர்லதுதான். எதுனாலும் நீ என்கிட்ட தான் சொல்லணும். யாரையும் நீ நேரடியா குற்றம் சொல்ற வேலையெல்லாம் வேண்டாம்."

"இன்னைக்கு நீ பெரிய அண்ணன்கிட்ட பேசின மாதிரி, சின்ன அண்ணன்கிட்ட பேசி இருந்தா, பிரச்சனை வேற மாதிரி போய் இருக்கும்."

https://t.me/tamilpdfebooks

*“இன்னொரு தடவை நீ இந்த மாதிரி யாரையும் எடுத்து எரிஞ்சு பேசினா.... நான் வாயில பேச மாட்டேன், கையில்தான் பேசுவேன். புரியுதா?”*

*“இது உங்க வீடு மாதிரி இல்லை. கூட்டுக் குடும்பம். ஒரு வார்த்தை பேசினாலும் யோசிச்சுதான் பேசணும்.” என்றான் அழுத்தமாக.*

*மித்ரா மௌனமாகவே இருக்க, அவளின் முகத்தைப் பற்றித் தன் பக்கம் திருப்பி, “இங்கப் பாரு டி என்னை.” என்றான்.*

*அவள் அவன் முகம் பார்க்க, “நான் உன்னோட நியாயமான விருப்பத்துக்கு எப்பவும் மறுப்பு சொல்ல மாட்டேன். ஆனா என்னைக் கேட்காம, நீயா இன்னொரு தடவை இப்படிப் பேசி வச்ச. தொலைச்சிடுவேன் சொல்லிட்டேன்.”*

*“நான் உன்னை நல்லா வச்சிக்கனும்ன்னு ஆசைப்படுறேன் மித்ரா. அதை நீயா கெடுத்துக்காத.” என்றவன், “சரியா, வாயைத் திறந்து சொல்லு டி.” என்றான்.*

*“சரி போங்க, இனிமே உங்ககிட்டயே சொல்றேன்.” மித்ரா சொல்ல, அதன்பிறகே மதியழகன் நிம்மதியானான்.*

https://t.me/tamilpdfebooks

வெங்கடேஷும் நட்ராஜும் இவர்கள் இருவருக்கும் டீ கொண்டு வந்து கொடுத்தனர். மதியழகன் தான் இரண்டையும் வாங்கினான். முதலில் அவன் குடித்து விட்டு, அந்தக் கிளாசில் மித்ராவின் டீயை ஆற்றி அவளிடம் கொடுத்தான்.

அவள் மீது கோபமாக இருந்தாலும், அந்த நேரத்திலும் அவன் காட்டும் அக்கறை மனதை நெகிழ செய்ய... அவன் முகம் பார்த்தபடி குடித்து முடித்தாள்.

மீண்டும் கார் பயணம் தொடர... நன்றாகவே இருட்டி விட்டதால்... மதியழகன் மித்ராவை தன் தோளில் சாய்த்துக் கொண்டான். அவளும் அவன் தோள் சாய்ந்து உறங்கிப் போனாள்.

இரவு ஒன்பது மணிக்குதான் வீடு வந்து சேர்ந்தனர். வாசலில் இருந்தே நண்பர்கள் இருவரும் விடைபெற...ரேவதியும் எழிலரசியும் இட்லி அவித்துச் சாம்பார், சட்னி செய்து வைத்திருக்க, முதலில் ஆண்கள் சாப்பிட்டு பிறகு பெண்கள் சாப்பிட்டனர்.

நடுவில் இருக்கும் பெரிய வீட்டில்தான் எல்லோரும் பகலில் இருப்பது. வலது பக்கம் கருணாவுக்கும், இடது பக்கம் மதியழகனுக்கும் தனி வீடுகள். மூன்று வீட்டிற்கும் இடைவெளி இருந்தாலும், ஒரே சுற்றுச் சுவர்தான்.

https://t.me/tamilpdfebooks

*இரவில் பின்கட்டில் இருந்த சிங்கில் நின்று பாத்திரங்களைச் சுபத்ரா கழுவிக் கொண்டு இருந்தாள். சாப்பிட்டுத் தட்டை போட வந்த சங்கமித்ரா, அக்கா நின்று பாத்திரம் கழுவதைப் பார்த்ததும், "அக்கா, நீ தேய்த்துக் கொடு, நான் கழுவுறேன்." என்றாள்.*

*இருவரும் சேர்ந்து பாத்திரம் தேய்த்தனர். அப்போது சுபத்ரா, "நீ கார்ல அத்தானை அப்படிப் பேசி இருக்கக் கூடாது. இந்தக் குடும்பத்தோட சூழ்நிலைப் பார்த்து, நான்தான் நம்ம வீட்டுக்கு போகணும்ன்னு கேட்டது இல்லை."*

*"முதல்ல நானும் அத்தையும் மட்டும் தான். அப்ப அவங்களை மட்டும் தனியா வேலைப்பாக்க போட்டுட்டு ரொம்ப வர முடியலை. ரெண்டு வருஷத்துல கருணாவுக்குக் கல்யாணம் ஆகி ரேவதி வந்தா... குடும்பம் பெரிசாச்சு. நான் அம்மா வீட்டுக்கு வந்து உட்கார்ந்தா... அவளும் அவங்க அம்மா வீட்டுக்கு போவா... இப்படி மாத்தி மாத்தி போயிட்டே இருக்க முடியுமா?"*

*"அதனால்தான் அத்தை என்னை ஒரு வாரம் அனுப்புவாங்க, அவளை ஒரு வாரம் அனுப்புவாங்க. இது கூட்டுக் குடும்பம். அதுவும் சொந்தமா பிசினஸ் பண்றோம். ஆம்பிளைங்க மூன்னு வேலையும் வீட்டுக்கு சாப்பிட வருவாங்க. எப்பவும் வேலை இருக்கும். இதுல நான் எப்படி வந்து நம்ம வீட்ல உட்கார்ந்துக்க முடியும்?"*

*சுபத்ரா சொல்லி முடித்துவிட்டு மித்ராவை பார்க்க, "உனக்குக் கல்யாணம் ஆகும் போது, நான் எட்டாவது படிச்சிட்டு இருந்தேன். அதுவரை நான் உன்னோட தான் சுத்திட்டு இருப்பேன்."*

https://t.me/tamilpdfebooks

*"உன்கிட்ட தான் நான் வயசுக்கு வந்தது கூடச் சொன்னேன். நீ கல்யாணம் பண்ணி வந்ததுக்கு அப்புறம் எனக்கு நம்ம வீட்ல மனசு விட்டு பேச ஆளே இல்லை. உன்கிட்ட பேசுற மாதிரி அண்ணன்கிட்ட பேச முடியாது இல்ல.."*

*"நீ எப்ப வருவன்னு எதிர்ப்பார்த்திடே இருப்பேன். நீ முதலையாவது கொஞ்சம் வந்த, அப்புறம் வரவே இல்லை. அப்புறம் இப்படித்தான்னு நானே மனசை தேத்திக்கிட்டேன்."*

*"நாங்க இங்க வந்தாலும், உன் வீட்ல தங்க முடியாது. நீங்க மொட்டை அடிக்க, காது குத்துன்னு கூப்பிடுவீங்க, நாங்க வந்திட்டு உடனே போய்டுவோம்."*

*"இப்பத்தான் தெரியுது, கல்யாணம் பண்ணா புகுந்த வீட்டை மட்டும் பார்த்திட்டு, பிறந்த வீட்டை விட்டுடனும்ன்னு. "*

*"நாங்கதான் உன்னை நினைச்சிட்டு இருந்திட்டோம் போலிருக்கு, நீ எங்களை விட்டுட்ட இல்லை கா…."*

https://t.me/tamilpdfebooks

"நானும் கொஞ்ச நாள்ல உன்னை மாதிரிதான் ஆகிடுவேன். அண்ணன் நம்மை என்னைக்கோ ஒருநாள் பார்த்து சந்தோஷப்பட்டுக்க வேண்டியதுதான்."

இவர்கள் இருவரும் பேசுவதை, கிணற்றடியில் நின்று, கதிரேசன் கேட்டுக் கொண்டே இருந்தான்.

அன்று சுபத்ரா வேலைகளை முடித்து விட்டு அறைக்குச் சென்றபோது, யோசனையில் இருந்த கணவனைப் பார்த்தாள்.

"என்னங்க ஒரு மாதிரி இருக்கீங்க? மித்ரா சொன்னதை யோசிச்சிட்டு இருக்கீங்களா?"

"நான் மதியை பத்தி மட்டும் யோசிச்சிட்டு, மித்ராவை நினைக்காம விட்டுடேனோ... அந்தப் பிள்ளைக்கு இந்த வீடு செட் ஆகாதோ. எனக்கு ரொம்பப் பயமா இருக்கு சுபி." என்றான்.

"அதெல்லாம் ஒன்னும் இல்லை மதி பார்த்துக்கும் விடுங்க." என்றாள் சுபத்ரா நம்பிக்கையாக.

"டேய் ! உன் பொண்டாட்டியை கூடிட்டுப் படுக்கப் போகாம, ஏன் டா என் பின்னாடி சுத்திட்டு இருக்க?" நீலவேணி மதியழகனைப் பார்த்து கேட்க,

https://t.me/tamilpdfebooks

*“அம்மா, ஒரு ரெண்டு நாள் மட்டும் மித்ராவோட கொடைக்காணல் போயிட்டு வரேன் மா…”*

*“உன் அண்ணனுங்க எல்லாம் போகலை, நீ மட்டும் போனா? அவங்க என்ன நினைப்பாங்க.”*

*“அம்மா அவங்க போகலைனா, நான் என்ன மா பண்றது? நான் ரெண்டு நாள் தானே கேட்கிறேன். இந்த ஞாயிறு மாத அடைப்பு. அதோடு திங்கள் ஒரு நாள் சேர்த்து போயிட்டு வரேன்.”*

*“எப்படியாவது அப்பாகிட்ட பெர்மிஷன் வாங்கிக் கொடுங்க மா…”*

*“நான் சொல்றேன், அவர் என்ன சொல்வாரோ தெரியாது.” என்றார் நீலவேணி.*

*மதியழகன் மித்ராவை அழைத்துக் கொண்டு தங்கள் பகுதிக்கு வந்தான். அவள் வீட்டில் சீர் கொடுத்த கட்டில், மெத்தை, பீரோ, வாஷிங் மெஷின் எல்லாம் அங்கங்கே இருந்தது.*

https://t.me/tamilpdfebooks

மத்ததும் கொடுத்து இருப்பார்கள், ஆனால் இவர்கள் ஒத்துக் கொள்ளவில்லை. இதற்கே கட்டில் பீரோ தான் கொடுப்பது முறை என்றனர். கட்டாயப் படுத்திதான் வாஷிங் மெஷின் வாங்கிக் கொடுத்து இருந்தனர்.

மதியழகன் ஏற்கனவே மாட்டியிருந்த கட்டிலில் மெத்தையைப் போட்டு போர்வை விரித்துக் கொண்டு இருந்தான்.

“ரொம்பக் கசகசன்னு இல்லை.. ஏசி இல்லையா?” என்றாள் மித்ரா.

“நீ குளிச்சிட்டு வா ஏசி ரெடியா இருக்கும்.” என்றான்.

“ஏசி இருக்க மாதிரியே தெரியலையே என யோசித்தபடி குளிக்கச் சென்றாள்.

அவள் திரும்ப வந்த போது, தரையை நன்றாகத் தண்ணீரால் மொழுகி, ஒரு துணியை நனைத்து ஜன்னலில் விரித்து விட்டு, அறையின் ஒரு பக்கம் பாத்திரத்தில் வேறு தண்ணீர் வைத்து இருந்தான்.

https://t.me/tamilpdfebooks

அவன் செட்டப் எல்லாம் பார்த்த மித்ரா, "ஏசி இல்லைனா இல்லைன்னு சொல்லிட்டு போக வேண்டுயது தான." என்றவள், கட்டிலில் ஏறி படுத்துக் கொண்டாள்.

"நம்ம வீட்ல இருக்கிற ஆளுங்களுக்கு எத்தனை ஏசி வாங்கிறது சொல்லு. அதோட கரண்ட் பில் எவ்வளவு வரும். இன்னொன்னு ஏசில தினமும் தூங்கிறது நல்லதே இல்லை."

"நீ வேணா பாரு. இன்னும் ஒரு மணி நேரத்தில் ரூம் எப்படி ஜில்லுன்னு இருக்குதுன்னு." என்றான்.

அவன் அப்பா தேவைக்கு அதிகமாக ஒரு ருபாய் கூடச் செலவழிக்க மாட்டார். இதுல ஏசி எங்கே வாங்குவது. எதையோ சொல்லி மித்ராவை சமாளித்தான்.

இருந்த களைப்பில் மித்ராவும் மேலே பேசாமல் உறங்கிவிட்டாள். மதியழகன் சொன்னது போல.... நேரம் ஆக ஆகக் குளிரத்தான் செய்தது. அவள் போர்வையைத் தேட... அவள் கணவனே அவளுக்குப் போர்வையாகிப் போனான்.

https://t.me/tamilpdfebooks

# அத்தியாயம் 8

*மதியழகன் செல்லில் காலை ஆறு மணிக்கு அலாரம் வைத்திருக்க, அடித்ததும் மித்ரா எழுந்து கொண்டாள். அவளுடனே அவனும் எழுந்துகொண்டான்.*

*"இப்ப நான் என்ன பண்ணும்?" மித்ரா கேட்க,*

*"என்ன வேணா பண்ணலாமே." என்றவன், அவளை அணைக்கச் செல்ல,*

*அவனைப் பிடித்துத் தள்ளி விட்டவள், "நான் இதைச் சொல்லலை...இந்த வீட்ல எனக்கு என்ன வேலைன்னு கேட்டேன்." என்றாள்.*

*"முதல்ல நீ குளிச்சு புடவை கட்டி அந்த வீட்டுக்கு போ. இன்னைக்கே உனக்கு வேலை கொடுக்க மாட்டங்க. மத்தவங்க என்ன பண்றாங்க கவனி. அப்படியே கொஞ்சம் அவங்களுக்குக் கூட மாட உதவி பண்ணு."*

*"டெய்லி புடவைதான் கட்டணுமா?"*

https://t.me/tamilpdfebooks

*“ஆமாம், நாம மட்டும் வெளிய போற அன்னைக்கு வேணா சுடிதார் போட்டுக்கோ.”*

*அவள் எதோ கடமைக்கு கேட்பது போலவே மதியழகனுக்குத் தோன்றியது. இது என் வீடு என்ற உணர்வு அவளுக்கு இன்னும் வரவில்லை. அவள் கொஞ்சம் இறுக்கமாகவும் இருந்தாள்.*

*மை ஊதா நிறத்தில் கிரேப் சில்க புடவை உடலை தழுவி இருக்க, முகத்திற்கு லேசான ஒப்பனை செய்து பொட்டு வைத்துக் கொண்டு வந்தாள்.*

*“சரி நான் அங்க போகட்டா?” எனக் கேட்டுக் கொண்டு வந்தவளிடம், “இரு உங்க அண்ணாகிட்ட பேசிட்டு போகலாம்.” என்றவன், வீடியோ கால் போட்டான்.*

*தன் அண்ணனின் முகத்தைத் திரையில் பார்த்ததும்தான் மித்ராவின் முகம் மலர்ந்தது.*

*“ஹே மித்ரா... எப்படி இருக்க...?”*

*“நல்லா இருக்கேன் அண்ணா... நீ நான் இல்லாம சந்தோஷமா இருக்கியா?”*

https://t.me/tamilpdfebooks

*“ஏன் அப்படிச் சொல்ற? இப்பதான் அம்மாகிட்ட காலையில் எப்பவும் மித்ராவோடுதான் காபி குடிப்போம்ன்னு சொல்லிட்டு இருந்தேன்.”*

*“அப்புறம் மாப்பிள்ளை எப்படி இருக்கார்?”*

*“ஜெய் கேட்டதும், மதியழகன் மித்ராவின் அருகே நெருங்கி உட்கார்ந்தான்.”*

*“நல்லா இருக்கேன் மச்சான்.”*

பிறகு மித்ரா பெற்றோரோடும் சிறிது நேரம் பேசினாள். நாளைக்கு கூப்பிடுறேன் எனச் சொல்லிவிட்டு வைத்தாள்.

வீட்டினரோடு பேசியதும் முகம் கொஞ்சம் தெளிவாக இருந்தது. இவள் கிளம்பும் போது எழிலரசி வந்துவிட்டாள்.

*“வாங்க அண்ணி?” மித்ரா மகிழ்ச்சியாக அழைக்க,*

https://t.me/tamilpdfebooks

*“நான் இன்னைக்கு எங்க வீட்டுக்கு கிளம்புறேன் மித்ரா. அதுதான் சொல்லிட்டு போக வந்தேன்.” என்றாள்.*

*“ஏன் அண்ணி அதுக்குள்ள போறீங்க? இன்னும் ரெண்டு நாள் இருந்திட்டு போகலாமே?”*

*“பசங்களுக்கு ஸ்கூல் இருக்குல... அதானால அவனுங்க அன்னைக்கே போய்ட்டானுங்க. மாமியார்தான் பார்த்துகிறாங்க. அவங்களுக்கு லீவ் விட்டதும் வரேன்.”*

*“இதுவே ரேவதி மட்டும் தனியா சமாளிக்க முடியாதுன்னு தான் இத்தனை நாள் இருந்தேன். இதே சுபத்ரா அண்ணி தனியா இருந்தா கூடச் சமாளிப்பாங்க.” என்றாள்.*

*தன் அக்காவை பற்றி நாத்தனார் உயர்த்திப் பேசுவது கேட்க மித்ராவுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.*

*“நான் உன்னை விட வரவா அக்கா?” மதியழகன் கேட்க,*

https://t.me/tamilpdfebooks

"இல்லை மதி, நீ இப்பதான் கல்யாணம் முடிச்சு இருக்க. முதல் தடவை ஜோடியாதான் வரனும். ஒரு நாள் விருந்து வைக்கிறேன். அப்ப ரெண்டு பேருமா வாங்க. இன்னைக்குக் கருணா கூடிட்டு போறான்." என்றாள்.

எழிலரசி விடைபெற்று கிளம்ப, அவளுடனே மித்ரா சென்றாள். அங்கே சென்றவுடன், எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு, அவளுக்காகக் காத்திருந்த கருணாவுடன் சென்றுவிட்டாள்.

சுபத்ரா குழந்தைகளைப் பள்ளிக்குக் கிளப்புவதில் மும்முரமாக இருக்க... "நான் என்னக்கா பண்ண?" என வந்து நின்றாள் மித்ரா.

"என்னைக் கேட்காத அத்தைகிட்ட போய்க் கேளு. நான் இந்த வீட்ல இல்லைனா என்ன பண்ணி இருப்ப. அப்படி நினைச்சுக்கோ." என்றாள் சுபத்ரா. அவள் சொன்னபடி நீலவேணியிடம் சென்று மித்ரா நின்றாள்.

"முதல்ல உன் புருஷனுக்குக் காபி கலந்து கொடுத்தியா, அவனுக்குக் கொடுத்திட்டு, நீயும் குடி." என்றார் அவர்.

https://t.me/tamilpdfebooks

*“நீங்க குடிச்சிடீங்களா அத்தை. வேற யாருக்கும் கலக்க வேண்டாமா?” எனக் கேட்டுக்கொண்டே சென்றாள்.*

*சமையல் அறைக்குச் சென்றால்... அங்கே ஒரு மிகப் பெரிய டேசா நிறையப் பால் இருந்தது.*

*“இதை எப்படித் தூக்குவது? என மலைத்து போய் நின்றாள். அவள் அப்படித்தான் நிற்பாள் என எதிர்ப்பார்த்து வந்த சுபத்ரா, “அங்க பக்கத்தில கரண்டி இருக்குப் பாரு. அதுல ரெண்டு டம்ளர் எடு. ஆரி போயிருந்தா, ஒரு சின்னக் கிண்ணத்துல ஊத்தி சூடு பண்ணிட்டு காபி கலக்கு.” என அவளுக்கு இருந்த வேலையிலும் வந்து சொல்லிவிட்டு சென்றாள்.*

*அவள் காப்பியோடு வெளியே வர.. மதியழகன் குளித்து முடிந்து வந்து, சாமி கும்பிட்டுக் கொண்டு இருந்தான்.*

*சிரித்த முகமாகக் காபி கொடுத்த மனைவியைப் பார்த்து அவனுக்கும் புன்னகை தொற்றியது. அவளுக்குக் கண்ணைக் காட்டிவிட்டு, சமையல் அறை தாண்டி பின்புறம் சென்றான். மித்ராவும் சற்று இடைவெளி விட்டு அவனைத் தொடர்ந்தாள்.*

*“நான் போய்க் கடை திறந்து வச்சிட்டு ஒரு பத்து மணிக்கு சாப்பிட வரேன்.” என்றான்.*

https://t.me/tamilpdfebooks

*"என்னது பத்து மணிக்கா.. அதுவரை நானும் சாப்பிட முடியாது இல்ல..." என அவள் கவலையைப் பார்த்து, அவனுக்குச் சிரிப்பு வந்தது.*

*"ஒரு ஒன்பது ஒன்பதரைக்கு வந்தா பரவாயில்லையா?" என்றான்.*

*"ம்ம்.." என்றாள்.*

*"சரி நான் போயிட்டு வரேன். உனக்கு எதாவது பிடிக்காதது நடந்தா. நான் வந்ததும் என்கிட்டே சொல்லு. நீயா எதுவும் துடுக்குத்தனமா பேசி வைக்காத." எனச் சொல்லிவிட்டே சென்றான்.*

*தன் பிள்ளைகளோடு கருணாவின் பையனையும் அழைத்துக் கொண்டு கதிரேசன், அவர்களைப் பள்ளியில் விடச் சென்றான்.*

*"இதுல தோசை மாவு இருக்கு, அங்க டேபிள்ள சட்னி இருக்கு. மதி வந்தா தோசை ஊத்திக் கொடுத்திட்டு, நீயும் சாப்பிடு. நான் போய்க் குளிச்சிட்டு வரேன்." எனச் சுபத்ரா ஓடினாள்.*

https://t.me/tamilpdfebooks

*வெறும் தேங்காய் சட்னி, மட்டும் தான் இருந்தது. இதை மட்டும் வச்சு எப்படிச் சாப்பிடுறது? என நினைத்தவள், இட்லி மிளகாய் பொடி இருக்கிறதா எனத் துழாவினாள்.*

*சமையல் அறைப் பக்கம் வந்த நீலவேணி, "என்ன தேடுற?" என்றார். "இல்லை சட்னி மட்டும்தான் இருந்துச்சு, அதுதான் மிளாகாய் பொடி இருக்கான்னு பார்க்கிறேன்." என்றாள்.*

*"முதல்ல சாப்பிடுறவங்க ஊத்தி சாப்பிடுங்க. பிறகு பத்தலைனா உன் அக்காளுங்க திரும்ப அரைப்பாங்க."*

*"நான் சும்மாதான் இருக்கேன். நான் வேணா இன்னொரு சட்னி வைக்கவா அத்தை ?"*

*"சரி வையேன்." என்றார்.*

*திரும்பத் தேங்காய் சட்னி வைப்பதற்கு, தக்காளி சட்னி செய்வோம் எனக் கொஞ்சம் தக்காளி, பூண்டு, காஞ்ச மிளகாய் சேர்த்து வதக்கி உப்பு வைத்து அரைத்து வைத்தாள்.*

https://t.me/tamilpdfebooks

*“மாமா சாப்பிட வந்திட்டார். அவருக்குத் தோசை ஊத்தணும்.” என நீலவேணி வர... நான் ஊத்துறேன் என மித்ரா பொறுபேற்றுக் கொண்டாள்.*

*அவள் தோசை ஊற்றிக் கொடுக்க, ஹாலில் சாப்பிட்ட கணவருக்கு நீலவேணி பரிமாறினார். எப்போதும் இரண்டு தோசையோடு போதும் என்பவர், இன்று மூன்று தோசை சாப்பிட்டார்.*

*“கார சட்னி நல்லா இருந்துச்சு. எப்பவும் ஒரு சட்னி தானே வைப்பீங்க.” என்றார்.*

*“மூத்தவளுங்களுக்குக் காலையில எங்க நேரம் இருக்கு. சின்னவன் பொண்டாட்டி வச்சா.” என்றார். துரை கடைக்குக் கிளம்பி சென்றார்.*

*“நீங்களும் அப்படியே சாப்டிடுறீங்களா அத்தை.” என மித்ரா தோசையோடு வர, சரி என அவர் சாப்பிடும் போதே, மதியழகனும் வர... அவனுக்கும் ஊற்றினாள்.*

*அவன் தட்டில் சட்னிகளை எடுத்துக் கொண்டு அடுப்படிக்கே வந்து விட்டான்.*

*அவன் ஒரு வாய் சாப்பிடுவது, மனைவிக்கு ஒரு வாய் ஊட்டுவது என அவன் அலும்பு பண்ண, பின்பக்கமாக வந்த சுபத்ரா, அவர்களைப் பார்த்து விட்டு, வந்த சுவடு தெரியாமல் திரும்பி சென்றாள்.*

https://t.me/tamilpdfebooks

வீட்டை சுற்றிக் கொண்டு முன்பக்கமாக வந்தவள், ஹாலில் மாமியாரின் அருகில் உட்கார்ந்து கொண்டாள். அப்போது கதிரேசன் சாப்பிட வந்தவன், அவனும் அவர்களுடன் உட்கார்ந்து பேசிக் கொண்டு இருந்தான். எப்போதும் லேட்டாக வரும் கருணாவும் அன்று சீக்கிரமே வந்துவிட...

"சாப்பிட்டியா?" என்றான் அண்ணனிடம்.

மேலும் ஐந்து நிமிடங்கள் ஆகியும், அவர்கள் இருவரும் சமையல் அறையில் இருந்து வரும் வழியைக் காணோம்.

"மதி, இன்னுமா சாப்பிடுற? மாவு இருக்கா... இல்லைனா நாங்க வெளிய சாப்பிடுக்கவா?" கருணா குரல் கொடுக்க,

மதியழகன் தட்டில் தோசைகளோடு சிரித்தபடி வந்தான். சுபத்ரா எழுந்து சமையல் அறைக்குச் சென்றாள். அங்கே மித்ரா வெட்கப்பட்டுக் கொண்டு நின்றாள்.

தங்கையைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே தட்டுகளை எடுத்துக் கொண்டு சென்றாள்.

https://t.me/tamilpdfebooks

கதிரேசனும், கருணாவும் சாப்பிட, மதி அவர்களோடு உட்கார்ந்து பேசிக் கொண்டு இருந்தான். மித்ரா தோசை சுட சுபத்ரா இருவருக்கும் பரிமாறினாள்.

சாதாரணமாக அவரவர் கணவர் சாப்பிடும் போது, அவரவர் தான் தோசை ஊற்றுவது. அதுவும் தனித் தனியாகத்தான் சாப்பிட வருவார்கள். இன்று எல்லோரும் சேர்ந்து இருந்ததால்... சேர்ந்து சாப்பிட்டனர்.

அவர்கள் மூவரும் கடைக்குச் சென்றதும், சுபத்ரா சாப்பிட அப்போதான் ரேவதி வந்தாள்.

"என்ன ஆச்சு?" என்ற சுபத்ராவிடம் "ரொம்பப் படுத்துறா அக்கா..." என்றாள் ஒரு வயது மகளைக் காட்டி.

"அவளுக்கு உடம்பு சரி இல்லை பாவம் என்ன பண்ணுவா? சரி வா, வந்து சாப்பிடு." என்றாள். அப்போது தோசையோடு வந்த மித்ராவும் சாப்பிடுங்க ரேவதி அக்கா என்றாள்.

"இன்னைக்கு மித்ராதான் எல்லோருக்கும் தோசை சுட்டிருக்கா."

https://t.me/tamilpdfebooks

"அப்படியா நான் உனக்குச் சுடவா." ரேவதி கேட்க, "நான் சாப்பிட்டேன் அக்கா." என்றாள்.

"நீயே ஊத்திக்கிட்டா ஆறிப் போயிடாது." ரேவதி சொல்ல,

"அதெல்லாம் அவங்க வீட்டுக்காரர் சுட சுட ஊட்டி விட்டுத்தான் போனார்." என்றாள் சுபத்ரா சாப்பிட்டபடி.

மாமியார் வெளி திர்ணையில் இருந்தார். இவர்கள் மூவர் மட்டுமே இருந்தனர். "ஏன் அக்கா இப்படி மானத்தை வாங்கிற?" என்றாள் மித்ரா.

"இன்னைக்கு மட்டும் மதி எத்தனை தடவை வீட்டுக்கு வருதுன்னு நாம குறிச்சு வைக்கிறோம்." என்றாள் ரேவதி. சுபத்ராவும் ஆமோதித்தாள்.

அதன் பிறகு ஒருவர் வீட்டை பெருக்க, மற்ற இருவர் பாத்திரம் தேய்த்தனர். நிறையப் பாத்திரங்கள் இருக்கும், ஒருவரே தேய்த்தால் கஷ்டமாக இருக்கும், அதற்குத் தான் இருவர் செய்வது.

https://t.me/tamilpdfebooks

*பதினோரு மணி போல் கடைப் பையன் காய்கறி, மளிகை சாமான்கள் எல்லாம் கொண்டு வந்தான். சமையல் அறையை ஒட்டி உணவு அறை இருக்கும். அங்கே உட்கார்ந்து பேசியபடி காய்கறி கூடையைச் சுபத்ரா கொட்ட, உள்ளே இருந்த பேப்பரை எடுத்த மித்ரா, "இது என்ன லட்டர்?" என்றாள் அதைக் கையில் எடுத்தபடி.*

*"நீயே படி." என்றாள் ரேவதி.*

*அதில் இன்று புளிக்குழம்பு வைத்து முட்டைகோஸ் கூட்டு செய்யவும் என எழுதி இருந்தது.*

*"இது யார் எழுதினது?" மித்ரா கேட்க, சுபத்ரா ஹாலை எட்டிப் பார்த்து விட்டு, மெதுவாக, "மாமா." என்றவள், "அவர்தான் தினமும் மதியம் என்ன சமையல்ன்னு சொல்வார்." என்றாள்.*

*"நான் வேற எதோ பேப்பர்ன்னு நினைச்சேன்." மித்ரா சொல்ல,*

*"என்ன மாமா அத்தைக்கு எழுதின லவ் லெட்டர்ன்னு நினைச்சியா?" ரேவதி சொல்ல, அதைக் கேட்டு அக்கா தங்கை இருவரும் சத்தம் வராமல் சிரித்தனர்.*

https://t.me/tamilpdfebooks

காய்கறிகளைக் கழுவி எடுத்துக் கொண்டு போய், ஹாலில் டிவி பார்த்துக் கொண்டிருந்த மாமியார் முன்பு ரேவதி வைக்க, அவர் காய்கறிகளை நறுக்கிக் கொடுத்தார்.

அப்போது மதியழகன் பின் வாசல் வழியாக வந்தான். அவனைப் பார்த்ததும் அண்ணிமார் இருவரும் நமட்டு சிரிப்புடன் எழுந்து ஹாலுக்குச் சென்று விட…. அவன் மித்ராவை அழைத்துக் கொண்டு சென்று, பின் வாசல் படியில் அமர்ந்தான். உட்காருவதற்கு முன் கதவை மூடிவிட்டே உட்கார்ந்தான்.

"இந்தா உனக்கு ஹல்வா வாங்கிட்டு வந்தேன். இப்பதான் சூடா கிண்டினாங்க." என வாழை இலையில் மடித்து இருந்த ஹல்வாவை, அவனே எடுத்து மித்ராவுக்கு ஊட்டிவிட்டான். மித்ராவும் அவனுக்குகொடுத்தாள்.

அதைச் சாப்பிட்ட பிறகு இளநீர் உடைத்துக் கொடுத்தான். அவள் குடித்து முடித்ததும், "இந்தப் பையில இருக்கிறது அண்ணிங்க கிட்ட கொடு, மதியம் சீக்கிரம் வந்திடுறேன்." எனச் சொல்லிவிட்டுச் சென்றான்.

அவன் சென்றதும் சுபத்ராவும் ரேவதியும் சமையல் அறைக்கு வந்தனர். மித்ரா கொடுத்த பையில் இருந்த ஹல்வாவை எடுத்த ரேவதி, "உங்க வீட்டுக்காரர் ஹல்வாவை ஊட்டி விட்டுட்டு போனாராக்கும்." என்றபடி எடுத்து சாப்பிட, மித்ரா புன்னகைத்தாள்.

https://t.me/tamilpdfebooks

“அதெல்லாம் கல்யாணம் ஆன புதுசுல எல்லோரும் அப்படித்தான் இருப்பாங்க. அப்புறம் நம்மைத் திரும்பி கூடப் பார்க்க மாட்டாங்க.” என்றாள் கிண்டலாக.

அதைக் கேட்டு மித்ராவின் முகம் மாற, அதைக் கவனித்த சுபத்ரா, “அப்படியெல்லாம் சொல்ல முடியாது ரேவதி. என் வீட்டுக்காரர் இப்படி ஒருநாளும் என்னைக் கவனிச்சதே இல்லை. அவர் அன்னையில இருந்து இன்னைக்கு வர அப்படியே தான் இருக்கார். ஒருவேளை மதியும் இப்படியே எப்பவும் இருக்கலாம். அதெல்லாம் சொல்ல முடியாது, ஒவ்வொருத்தரோட குணம்.” என்றாள்.

அதைக் கேட்டு திரும்ப மித்ராவின் முகம் மலர... ரேவதியின் முகம் வாடியது. அக்கா தங்கையை விட்டுக் கொடுப்பாங்களா என நினைத்தாள்.

மூவரும் சேர்ந்து செய்ததால்... பன்னிரெண்டு மணிக்குள் சமையல் செய்து முடித்து விட்டனர். மதிய உணவுக்காக மதியழகன் பள்ளியில் இருந்து பிள்ளைகளை அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தான்.

சுபத்ராவும் ரேவதியும் அவர்களுக்கு உணவு கொடுக்க, மதியழகனும் மித்ராவும் பின்கட்டில் உட்கார்ந்து பேசிக் கொண்டு இருந்தனர்.

“நீங்க அடிக்கடி வீட்டுக்கு வர்றதை பார்த்து உங்க அண்ணிங்க ரெண்டு பேரும் கிண்டல் பண்றாங்க.”

https://t.me/tamilpdfebooks

*“காலையில பசங்களைப் பெரிய அண்ணன் கொண்டு போய் விடுவார், சாயந்திரம் சின்ன அண்ணன் வீட்டுக்கு கூடிட்டு வருவார். மதியம் எப்பவும் நான்தான் கூடிட்டு வருவேன்.”*

*“இது இல்லை. நீங்க அப்ப வந்தீங்க இல்லை, அதுக்கு. கல்யாணம் ஆன புதுசுல இப்படித்தான் கவனிப்பீங்கலாம் அப்புறம் கண்டுக்கவே மாட்டீங்கலாம். அப்படியா?”*

*“இப்படி வேற போட்டுக் கொடுக்கிறாங்களா?” என மதியழகன் சிரித்தான். ஆனால் மித்ரா முகத்தில் ஒரு கலக்கம், அதைக் கவனித்தவன், “தினமும் ஹல்வா வாங்கிட்டு வரமாட்டேன் தான். ஆனா அந்த டைம்முக்கு கண்டிப்பா உன்னைப் பார்க்க வரேன். போதுமா.” என்றான்.*

*மித்ரா சந்தோஷமாகப் புன்னகைத்தாள். பிறகுதான் நினைவு வந்து, “உங்ககிட்ட நான் ஒன்னு கேட்கணும்ன்னு நினைச்சிட்டு இருந்தேன். நீங்க என்னைப் பார்க்கும் போது எல்லாம் அட்வைஸ் தான பண்ணுவீங்க. அதனால உங்களுக்கு என்னைப் பிடிக்காதுன்னு நினைச்சேன்.” என்றாள்.*

*அவள் கேட்டதும் மதியழகனுக்கு இன்பமான சில நினைவுகள். “அது அப்படி இல்லை மித்ரா. எனக்கு உன்னைப் பத்தி தப்பா யாரும் சொல்லிட கூடாதுன்னு ஒரு பதட்டம்ன்னு வச்சுக்கோயேன். அதனால தான் அட்வைஸ் பண்ணுவேன். மத்தபடி உன்னைப் பிடிக்காம இல்லை.”*

https://t.me/tamilpdfebooks

*"நாம நைட் அதைப் பத்தி பேசுவோம்." என்றவன், பிள்ளைகளைத் திரும்பப் பள்ளியில் விடச் சென்றான்.*

*மதியம் கிட்டத்தட்ட ஆண்கள் எல்லோருமே ஒரே நேரத்திலேயே வர.. எல்லோருக்கும் ஹாலில் வைத்து உணவு பரிமாறினர். கதிரேசன் அப்பளம் கேட்க, சுபத்ரா வறுத்துக் கொண்டு வந்தாள். கருணா தயிர் போட்டு பக்கோடா வைத்துக் கொண்டு சாப்பிட்டான், துரையும், மதியும் மட்டுமே ஒழுங்காகப் பொரியல் வைத்துக் கொண்டு சாப்பிட்டனர். நிறையப் பொரியல் வீண்ணாகியது. மித்ரா எல்லாம் கவனித்துக் கொண்டு இருந்தாள்.*

*ஆண்கள் ஹாலில் டீவி பார்க்க, அக்கா தங்கைகள் மூவரும் அங்கிருந்த அறைகளிலேயே கொஞ்ச நேரம் படுத்து எழுந்தனர். மாலை நான்கு மணிக்கு டீ குடித்து விட்டு, மீண்டும் ஆண்கள் கடைக்குச் சென்றுவிட்டனர்.*

*மாலை பிள்ளைகள் வர... நேரம் அவர்களோடு சென்றது. மித்ரா அவர்களது பகுதிக்கு வந்து தலை வாரி, முகம் கழுவி, சமையல் அறை அலமாரியில் இருந்த சாமி படம் முன்பு விளகேற்றிவிட்டு, வீட்டிலும் லைட் போட்டுவிட்டு, திரும்பப் பெரிய வீட்டிற்கு வந்தாள்.*

https://t.me/tamilpdfebooks

*பெரிய வீட்டிற்கும் இவர்கள் பகுதிக்கும் நடுவில் நிறைய இடம் இருக்கும். அதில் சிமெண்ட் போட்டு பூசி இருப்பார்கள். பிள்ளைகள் விளையாடுவது, பாடம் படிப்பது எல்லாம் அங்கேதான். அங்கே காற்றும் நன்றாக வரும்.*

*ஏழு மணி ஆனதும் திரும்பச் சாதம் வைத்து, குழந்தைகளுக்குப் பால் ஊற்றி பிசைந்து சுபத்ரா ஊட்டி விட்டாள். மற்றவர்களுக்கு ரேவதி ரசமும் துவையலும் செய்தாள்.*

*கதிரேசனுக்கும் மதியழகனுக்கும் இரவில் டிபன் தான் வேண்டும். அவர்களுக்கு மித்ரா இட்லி ஊற்றி சட்னி செய்தவள், சுபத்ராவிடம் சொல்லிவிட்டு தனக்கும் இட்லியே ஊற்றிக் கொண்டாள்.*

*இரவு உணவு முடிந்ததும், இன்று ரேவதியும், மித்ராவும் சேர்ந்து பாத்திரம் தேய்க்க... மதியழகன் அவர்களோடு நின்று பேசிக் கொண்டு இருந்தான்.*

*"மித்ரா, சின்ன அண்ணியைப் பொண்ணு பார்க்க, அப்பா, அம்மா எழில், சுபத்ரா அண்ணி அப்புறம் நான் மட்டும்தான் போனோம்."*

*"அப்ப என்ன நடந்துச்சு தெரியுமா?" மதியழகன் சற்று இடைவெளி விட...*

https://t.me/tamilpdfebooks

*“என்ன ஆச்சு?” மித்ரா ஆர்வமாக…*

*“மதி கொன்னுடுவேன். ஒழுங்கா போயிடு….” என்றாள் ரேவதி.*

*மதியழகன் சிரிப்பை அடக்கியபடி, “பெண்ணைக் கூடிட்டு வாங்கன்னு சொன்னதும், அண்ணி வந்தாங்களா.. முகத்தில அப்படி ஒரு வெட்கம்.”*

*“கொஞ்ச நேரத்தில் சரிமா உள்ள போன்னு சொன்னதும், தலையை நிமிர்ந்து அண்ணாவை தேடுறாங்க. அப்பத்தான் அண்ணன் வரலைன்னு தெரியும். அப்ப அவங்க முகத்தைப் பார்க்கணுமே…”*

*“எனக்கு என்ன தெரியும், உங்க அண்ணன் வரலைன்னு. நான் அவர் வந்திருப்பாருன்னு நினைச்சேன்.” ரேவதி இழுக்க…*

*“அண்ணன் உங்க போட்டோ பார்த்தே பிளாட் ஆகிட்டார் அண்ணி.” மதியழகன் சொல்ல,*

*“அப்படியா? ஆனா என்கிட்ட அப்படி ஒன்னும் சொல்லலையே?”*

*அவர்கள் பேசும்போதே கருணா வந்துவிட, “என்னங்க நீங்க கல்யாணத்துக்கு முன்னாடி என்னோட போட்டோ பார்த்தீங்க.” ரேவதி கேட்க,*

https://t.me/tamilpdfebooks

"போட்டோவா, எனக்குக் கல்யாணம்னே, எங்க அப்பா பரிசம் போடுற அன்னைக்குதான் சொன்னார். இதுல எப்படிப் போட்டோ காட்டுவார். எனக்கு எல்லாம் சாய்ஸ்சே கொடுக்கலை."

"ஆனா அவருக்கும் ஒருத்தன் தண்ணி காட்டி இருக்கான் தெரியுமா...." என்றான்.

உடனே பதறிய மதியழகன் "அண்ணா, நீ உள்ள வா..." என அவனைத் தள்ளிக் கொண்டு உள்ளே சென்றான்.

ரேவதிக்கு புரியவில்லை. மதியம் மதி பேசியதையும், இப்போது கருணா சொன்னதையும் வைத்து, மித்ராவுக்குக் கொஞ்சம் புரிய... முகம் மலர்ந்தாள். இன்னைக்குக் கண்டிப்பாகத் தன் கணவனிடம் பேச வேண்டும் என நினைத்துக் கொண்டாள்.

# அத்தியாயம் 9

https://t.me/tamilpdfebooks

*மித்ரா அவர்கள் பகுதிக்கு வந்தபோது… ஹாலில் பாய் விரித்து, ஜன்னகள் எல்லாம் காற்றுக்குத் திறந்து விட்டு, ஏற்கனவே ஈரத்துணி எல்லாம் போட்டு வைத்து, இப்படி எல்லாச் செட்டப்பும் செய்து வைத்திருந்தான் மதியழகன்.*

*அவனைப் பார்த்து சிரித்தபடி உள்ளே வந்த மித்ரா, கதவை சாற்றிவிட்டு நைட்டி எடுத்துக் கொண்டு குளிக்கச் சென்றாள். அவள் வந்தபோது, பாயில் படுத்து இருந்த மதியழகன், அவளை நோக்கி வா என்னும் விதமாகக் கையை நீட்ட, அதைப் பற்றியபடி அவன் அருகே நெருங்கி உட்கார்ந்தாள்.*

*"என்ன இன்னைக்கு ஹாலுக்கு வந்துடீங்க?"*

*"அது எங்க இருந்தா பேச மூடு வர மாட்டேங்குது. அதுக்குதான்."*

*என்றான். அவன் சொன்னதைக் கேட்டு, அவள் புன்னகை மேலும் விரிந்தது.*

*"நீங்க என்னை லவ் பண்ணீங்களா?" என மித்ராவே ஆரம்பித்தாள்.*

*"அது பேரு லவ்வான்னு எல்லாம் எனக்குத் தெரியலை மித்ரா. ஆனா உன்னைப் பார்க்கும் போது ஒரு எண்ணம். எனக்கு நீ உரிமையானவள் போல… எனக்கு எப்படிச் சொல்றதுன்னு தெரியலை."*

https://t.me/tamilpdfebooks

*“அண்ணன் கல்யாணத்துல தான் உன்னை முதல் முறை பார்த்தேன். அப்ப நீ கொஞ்சம் கொழுக் மொழுக்குன்னு இருப்ப... சத்தியமா உன்னைப் பத்தி எனக்கு அப்ப எந்த எண்ணமும் இல்லை. அண்ணியோட தங்கச்சின்னு தான் பார்த்தேன். அதுவும் நீ உங்க அக்கா எங்க வீட்டுக்கு வரும்போது ரொம்ப அழுத. உன்னைப் பார்க்க பாவமா இருந்துச்சு.”*

*“அதுக்கு அப்புறம் உன்னை ரெண்டு வருஷம் நான் பார்க்கவே இல்லை. கதிரேசன் அண்ணன் பையனுக்கு முதல் மொட்டை போடும்போது, நீயும் வந்திருந்த. அங்கதான் உன்னைத் திரும்பப் பார்த்தேன்.”*

*“பம்ப் செட் மேல உட்கார்ந்திட்டு, தண்ணிக்குள்ள காலை விட்டு ஆட்டிட்டு, உங்க அக்காவோட சிரிச்சு பேசிட்டு இருந்த.”*

*“இதுக்கு முன்னாடி பார்த்த சின்னப் பொண்ணு தோற்றத்தில இருந்து மாறி, குமரிப்பெண்ணா இருந்த. குல்பி ஐஸ் மாதிரி இருந்தவக் குச்சி ஐஸ் ஆகிட்டாளேன்னு நினைச்சேன்.”*

*“அப்பவும் உன்னை லவ் பண்ணனும், கல்யாணம் பண்ணனும்ன்னு எல்லாம் நினைக்கலை. ஆனா உன்னை அந்தத் தடவை அடிக்கடி பார்த்தேன். நீ வாய் மூடாம பேசிட்டே இருந்த. சரியான வாயாடின்னு நினைச்சிகிட்டேன்.”*

https://t.me/tamilpdfebooks

*இதைச் சொன்னதும் மித்ரா அவனை முறைக்க… "அது அப்போ." என்றான் சமாளிக்கும் விதமாக. "சரி மேல சொல்லுங்க. அப்புறமாவது லவ் வந்துச்சா இல்லையா?" மித்ரா கேலியாகக் கேட்க,*

*"அடுத்தத் தடவை பார்க்கும்போது, லவ் வரலை கோபம்தான் வந்துச்சு."*

*"நீ கருணா அண்ணா கல்யாணத்துக்கு வந்திருந்த. அப்பத்தான் உன்னைத் திரும்பவும் பார்த்தேன்."*

*"பட்டுப் பாவாடை தாவணியில இருந்த, நைட் நேரம் தனியா மண்டபத்துக்கு வெளிய நின்னுட்டு இருந்த."*

*"ஆமாம், எனக்கு அங்க பேச யாரும் இல்லை. அக்கா மேடையில ரேவதி அக்காவோட இருந்தா, ஜெய் அண்ணாவும் வரலை. ரொம்பப் போர் அடிச்சுது. அதனால சும்மா நடந்திட்டு அப்படியே வெளியே வந்துட்டேன் போல…"*

*"நான் எதோ வேலையா வெளிய போயிட்டு வந்தேன். நீ நின்னுட்டு இருந்ததைப் பார்த்ததும், ஒரு நொடி திகைச்சுதான் போயிட்டேன். அப்புறம்தான் உனக்குப் பின்னாடி நின்னுட்டு இருந்த பசங்களைப் பார்த்தேன். நீ தனியா போறதை பார்த்து வந்திருக்கணும்."*

https://t.me/tamilpdfebooks

*“அது எங்க ஊர் இல்லை. கல்யாணம் அண்ணி ஊர்ல நடந்துச்சு. உன் பின்னாடி ரெண்டு பசங்க நிற்கிறாங்க. எங்க ஊருன்னா அவனுங்களைதான் விரட்டி இருப்பேன். அவனுங்க யாரு என்னன்னு தெரியாது. நான் எதாவது பேசி பிரச்சனை ஆகிட்டா, நீ வேற என்னோட இருக்க. அதுதான் உன்னை அதட்டினேன்.”*

*“எனக்கு அது தெரியாது. நமக்குத் தெரிஞ்சவங்க ஒருத்தராவது இருக்காரேன்னு, நான் உங்க கிட்ட ஆர்வமா பேச வந்தேன். ஆனா நீங்க என்னை இங்க என்ன பண்றன்னு திட்டினீங்க.”*

*“அதோடவா விட்டீங்க. பொம்பளை பிள்ளைக்கு அடக்கமா இருக்க தெரியாதா.. முதல்ல உள்ள போன்னு கத்தினீங்க. நான் பயந்தே போயிட்டேன். எப்படி அழுதேன் தெரியுமா?”*

*“தெரியும், உன்னைப் பேசிட்டு, அன்னைக்கு நான் எவ்வளவு கஷ்டப்பட்டேன்னு எனக்குதான் தெரியும். நீ உன் கண்ணை யாருக்கும் தெரியாம துடைக்கிறதை, நான் பார்த்திட்டே இருந்தேன். அன்னைக்கு எனக்கே என் மேல அவ்வளவு கோபம் வந்துச்சு.”*

https://t.me/tamilpdfebooks

*“நான் உன்கிட்ட வந்து சாரி கேட்கணும்ன்னு தான் நினைச்சேன். ஆனா நாம ரெண்டு பேரும் பேசுறதை பார்த்தா... ஏதாவது கதை கட்டி விட்டுடுவாங்க. உன் பேர் கெட்டு போயிடுமேன்னு பயந்துதான் உன்கிட்ட பேசலை.”*

*“எங்க அப்பா அம்மா என்னை வரவேண்டாம்ன்னு தான் சொல்வாங்க. எங்க அக்காவை பார்க்கிறதுக்காகத் தான் நான் வருவேன். அதுக்கப்புறம் நான் உங்க ஊர் பக்கமே வரலை.”*

*“ஆமாம் நான் உனக்காக எதிர்பார்த்து ஏமாந்து போனேன்.”*

*“அதுக்கு அப்புறம் ரெண்டு வருஷம் கழிச்சு. கதிரேசன் அண்ணனோட பொண்ணுக்கு காது குத்தும் போது வந்த... பட்டு புடவையில, தலை நிறையப் பூவோட கார்ல இருந்து இறங்கின...”*

*“உங்க மேல ரொம்பக் கோபத்தில்தான் வந்தேன்.”*

*“கார்ல இருந்து இறங்கும் போதே... நீ யாரையோ தேடினது பார்த்தேன். ஆனா என்னைப் பார்த்ததும், நீ தேடுறதை நிறுத்திட்டு, என்னை முறைக்க ஆரம்பிச்சிட்ட...”*

https://t.me/tamilpdfebooks

*“அப்பத்தான் எனக்குத் தெரிஞ்சிது, நீ என்னைத்தான் தேடினேன்னு. ஆனா நீ என்னை ஆர்வமா எல்லாம் பார்க்கலை... முறைச்சிட்டே இருந்த. அந்தத் தடவைதான் முடிவு பண்ணேன். உன்னைத்தான் கல்யாணம் பண்ணனும்ன்னு.”*

*“அப்படியா? ஆனா நீங்க ஒன்னும் அப்படி ஆசையா எல்லாம் பேசலையே... அப்பவும் அட்வைஸ் தான் பண்ணீங்க.”*

*“ஹே லூசு, முறைக்கிறதா நினைச்சிட்டு நீ என்னையே பார்த்திட்டு இருந்த டி... வேற யாராவது பார்த்தா என்ன நினைப்பாங்க. இந்தப் பையன் இந்தப் பொண்ணா என்ன பண்ணான்னோன்னு நினைக்க மாட்டாங்க.”*

*“அதுதான் என்னைப் பார்கிறதை விட்டு, வேற வேலை இருந்தா போய்ப் பாருன்னு சொன்னேன். நீ அதுக்கும் கோவிச்சிகிட்ட.”*

*“பேச தெரியாம பேசிட்டு என்னைக் குறை சொல்றியா நீ...” என மித்ரா அவனை அடிக்க, படுத்திருந்தவன், அவள் கை இரண்டையும் பிடித்துக் கொண்டான்.*

*“சரி உங்க வீட்ல என்னை வேண்டாம்ன்னு சொல்லி இருந்தா?”*

https://t.me/tamilpdfebooks

*“அப்பாகிட்ட கண்டிப்பா எனக்கு உன்னைப் பிடிக்கும்ன்னு சொல்லி இருப்பேன்.”*

*“அப்பவும் உங்க அப்பா ஒத்துக்காம வேற பெண்ணைப் பார்த்து இருந்தா?”*

*“என்ன பண்றது? கல்யாணம் பண்ணி இருப்பேன்தான்.”*

*“என்னது கல்யாணம் பண்ணி இருப்பியா?” என அவன் பனியனை கொத்தாகப் பிடித்து அவனை இழுத்தவள், “உனக்கு இந்த ஜன்மத்தில மட்டும் இல்லை... எல்லா ஜன்மத்திலேயும் நான்தான் பொண்டாட்டி. சரியா?” என்றாள்.*

*அவளைத் தன் இரு கையால் கட்டி அணைத்தவன், “எப்ப டி என்னைப் பிடிச்சது? கல்யாணத்து அன்னைக்குக் கூட என்னை முறைச்சிட்டு இருந்த.”*

*“அது எங்க வீட்ல என்னை மேல படிக்க விடாம கல்யாணம் பண்ணி கொடுத்திடாங்கன்னு கோபம். அதுவும் உங்க வீட்ல எங்க அக்காவை எங்க வீட்டுக்கு விட மாட்டீங்களா...இங்க வந்தா எனக்கும் அந்த நிலைமை தான. அதோட நம்ம ரெண்டு பேரோட கெமிஸ்ட்ரி வேற சூப்பரா இருந்ததா... அதனால நான் கொஞ்சம் டென்ஷனா இருந்தேன்.”*

https://t.me/tamilpdfebooks

*“சரி எப்பதான் பிடிச்சது அதைச் சொல்லு.”*

*“தெரியலையே... நீங்க வேற யாரையோ கல்யாணம் பண்ணி இருப்பேன்னு சொன்னதும், அதை மட்டும் என்னால நினைச்சு பார்க்க முடியலை.”*

*“நீங்க எனக்கு மட்டும்தான்.” என்றவள், அப்படியே அவன் நெஞ்சில் படுத்துக் கொண்டாள்.*

*அவள் முறைக்கும் போதே, மதியழகன் அவளை அந்தத் தாங்கு தாங்குவான்... இப்போது மனைவியின் காதலை அறிந்தபின் சும்மா இருப்பானா என்ன? அந்த இரவு அவர்களுக்கு உடலளவில் மட்டும் அல்ல... மனதளவிலும் மறக்க முடியாத இரவாக இருந்தது.*

*முதல் நாள் போல இல்லாமல். மறுநாள் மித்ரா காலையில் எழும் போதே... மகிழ்ச்சியாக உணர்ந்தாள். இரவு தாமதமாக உறங்கிய போதும், காலையில் சீக்கிரமே எழுந்து, குளித்து, மயில் வண்ண நிறத்தில் காட்டன் புடவை அணிந்து, பெரிய வீட்டிற்குச் சென்றுவிட்டாள்.*

*அவள் மாமியார் தான் எப்போதும் வாசல் தெளித்துக் கோலம் போடுவார். அவர் வாசல் தொளிக்க, “இன்னைக்கு நான் கோலம் போடுறேன் அத்தை.” என அழகாகக் கோலம் இட்டாள்.*

https://t.me/tamilpdfebooks

நீலவேணி அவள் கோலம் போடும் வரை உடன் இருந்துவிட்டு, பால் காய்ச்ச சென்றார். காலையில் இந்த இரண்டு வேலையும் அவர்தான் செய்வார்.

இவர்கள் ஊரில் பெரிய தனக்காரர்கள் என்றாலும், வெளியே எல்லோரோடும் சட்டென்று பழகிவிட மாட்டார்கள். துரை யார் விஷயத்திலும் தலையிட மாட்டார். அவருண்டு அவர் வேலை உண்டு என்று இருப்பார். ஆனால் மகன்களுக்கு வெளியே நிறையச் சிநேகிதர்கள் உண்டு.

நீலவேணி யாரோடும் வம்பு தும்பு வைத்துக் கொள்ள மாட்டார். அதனால் இவர்களிடமும் யாரும் வைத்துக் கொள்ள முடியாது. எதாவது விஷேச வீட்டிற்கு மருமகள்களை அழைத்துக் கொண்டு சென்றாலும், சொன்ன நேரத்திற்கு சென்று விட்டு வந்துவிடுவார். அங்கு அதிக என்றம் தங்குவது வெட்டிக் கதை பேசுவது எல்லாம் கிடையாது.

மித்ராவுக்கு நன்றாகச் சமைக்க வரும். அவள் அம்மா அவளுக்கு சமையல் பழக்கி இருந்தார். அதோடு ருசியாக இருந்தால்தான், முதலில் அவள் தொண்டையில் இறங்கும். கொஞ்சமாகச் சாப்பிட்டாலும் நன்றாகச் சாப்பிட வேண்டும் என நினைப்பாள்.

“நான் காலையிலேக்கு சமைக்கட்டுமா அத்தை.” என அவள் நீலவேணியிடம் கேட்க,

https://t.me/tamilpdfebooks

*"இத்தனை பேருக்கு பண்ணிடுவியா?" என்றார்.*

*அவள் யோசிக்கும் போதே... சுபத்ரா வந்துவிட்டாள்.*

*"இதோ உன் அக்காவை கேட்டு செய்." எனச் சொல்லிவிட்டு அவர் சென்றுவிட்டார்.*

*"அக்கா, இன்னைக்குப் பூரி பண்ணலாமா?" என்றாள்.*

*"சரி." என்ற சுபத்ரா பூரிக்கு மாவு பிசைய... அவள் மொத்தமாக் அவ்வளவு மாவு, ஒரே நேரத்தில் பிசைவதை பார்த்து ஆச்சர்யபட்டு போனாள் மித்ரா.*

*"நானா இருந்தா ரெண்டு தடவையா மாவு பிசைஞ்சிருப்பேன். நீ ஒரே தடவையிலேயே பண்ணிட்ட அக்கா." என்றாள் பாராட்டுதலாக.*

*"எனக்கும் முதல்ல வராது. இப்ப பழகிடுச்சு."*

https://t.me/tamilpdfebooks

*“நான் தொட்டுக்க உருளைக்கிழங்கு பண்றேன்.” என்றவள், எவ்வளவு கிழங்கு போட வேண்டும் எனச் சுபத்ராவை கேட்டுக் கொண்டு, “நீ போய்ப் பசங்களைப் பாரு. நான் பார்த்துகிறேன்.” எனச் சுபத்ராவை அனுப்பி வைத்தாள்.*

*கொஞ்ச நேரத்தில் ரேவதி வந்தாள். மித்ரா உருளைக்கிழங்கு வேக வைத்து விட்டு, வெங்காயம் நறுக்கிக் கொண்டு இருந்தாள். இவளாக “அக்கா, இன்னைக்குப் பூரி டிபன்.” என்றாள்.*

*“அது எண்ணெயால இருக்கும். என்னைப் பொறுத்தவரை பசிக்கு சாப்பிடனும். ருசிக்கு சாப்பிடக்கூடாது.” எனத் தத்துவம் சொல்லிவிட்டு சென்றாள்.*

*மித்ராவுக்கு அவள் சொல்ல வருவது புரியவில்லை. அவள் உருளைக்கிழங்கு மசால் செய்ய ஆரம்பித்தாள். எல்லாம் கூட்டி, கொதிக்க விடும் நேரத்தில் மதியழகன் வந்தான்.*

*யாரும் இல்லை என்பதை உறுதி செய்து கொண்டு, ஒருமுறை அவளை இறுக அணைத்துப் பின் விலகியவன், “ஏன் டி என்னைக் காலையில எழுப்பாம வந்த?” என்றான்.*

*“நீங்க நல்லா தூங்கிட்டு இருந்தீங்க, அதனால அப்புறமா எழுப்பலாம்ன்னு இருந்தேன்.”*

https://t.me/tamilpdfebooks

*“உன்னோட பாசமலர் கிட்ட இருந்து போன் வந்தது.” என்றதும்,*

*“அண்ணனா ! நான் இப்பவே பேசணும்.” என அவள் துடிக்க, அவளுக்குப் போன் செய்து கொடுத்தான். மித்ரா பின் கட்டில் நின்று, அண்ணனுடன் பேசிவிட்டு கொடுக்க, மதியழகன் கடை திறக்க சென்றான்.*

*துரைக்கு மித்ராவின் சமையல் பிடித்து இருக்கிறது என அவர் சாப்பிடுவதிலேயே நீலவேணி புரிந்து கொண்டார். முன்தினம் போல... ஆண்கள் ஒவ்வொருவராக வந்து சாப்பிட....*

*சுபத்ரா பூரி சுட, மித்ரா கொண்டு போய்க் கொடுக்க, நீலவேணி பரிமாறினார். கருணாகரன் கடைசியாகச் சாப்பிட வர, ரேவதி அவனுக்குத் தட்டில் பழையது போட்டு, தயிர் ஊற்றி, கருவாடு வறுத்துக் கொண்டு போய்க் கொடுத்தாள்.*

*“ஏன் ரேவதி அக்கா?” என மித்ரா கேட்க, அவருக்குப் பழையது தான் பிடிக்கும் என்றாள். அதைக் கேட்டு மதியழகன் முகம் மாறினான்.*

*“உங்களுக்குப் பூரி பிடிக்காதா சின்ன அத்தான்.” மித்ரா கேட்க,*

https://t.me/tamilpdfebooks

“எதோ ஒன்ன சாப்பிட வேண்டியது தான.” என்றான் சிரிப்புடன்.

ஏன் கணவனும் மனைவியும் புரியாத மாதிரியே பேசுகிறார்கள் என மித்ரா நினைத்தாள்.

கருணா சாப்பிட்டு எழுந்து சென்றதும், “நான் நிறையத் தடவை சொல்லிட்டேன் அண்ணி. நீங்க அண்ணனுக்குப் பழையது போடுறீங்க. ஆனா அவர் வெளியே வடை, பஜ்ஜி, பரோட்டான்னு வாங்கி சாப்பிடுறாரு. நல்லது இல்லை பார்த்துக்கோங்க.” எனச் சொல்லிவிட்டு மதியழகன் சென்றான்.

ரேவதி அமைதியாக இருந்தாள். “நீங்க சாப்பிடுங்க அக்கா.” மித்ரா சொல்ல,

“எனக்குப் பசி இல்லை. அப்புறம் சாப்பிடுறேன்.” என்றாள்.

வெகு நேரம் சாப்பிடாமலே இருந்தவள், அவளும் பழையதுதான் சாப்பிட்டாள்.

சுபத்ராவை பார்க்க மித்ராவுக்கு ஆச்சர்யமாக இருந்தது. அவள் பாட்டுக்கு எதையும் கண்டுகொள்ளாமல் வேலை செய்து கொண்டு இருந்தாள். இந்த அக்கா ஏன் இப்படி இருக்கு என மித்ரா நினைத்தாள்.

https://t.me/tamilpdfebooks

சுபத்ராவுக்கு இருக்கும் அனுபவம் மித்ராவுக்கு இல்லை. இத்தனை வருடங்களாக அந்த வீட்டில் குப்பை கொட்டுகிறாள், அவளுக்குத் தெரியாதா யார் எப்படி என்று.

சுபத்ரா மித்ராவிடமும் யாரைப் பற்றியும் சொல்லவில்லை. அது வீண் பிரச்சனையை உருவாக்கும். அவளே பார்த்து தெரிந்து கொள்ளட்டும் என அமைதியாக இருந்தாள். ஆனால் சுபத்ராவை போலப் பொறுமைசாலிகளுக்கு, எல்லாம் உண்மையிலேயே கோவில் கட்ட வேண்டும்.

வாஷிங் மெஷின் வாங்கிக் கொடுத்து என்ன பயன்? அதைப் போட தண்ணீர் இருக்க வேண்டாமா? அந்த ஊரில் தண்ணீருக்குக் கொஞ்சம் கஷ்ட்டம்தான். அதனால் வாரத்தில் ஒரு நாள் போர்வை தலையனை உரைகளை மட்டும் மெஷினில் போட்டுவிட்டு, மற்ற உருப்படிகளைக் கையில்தான் துவைப்பது.

நேற்றும் இன்றும் சேர்த்து வைத்து, மித்ரா துணி ஊறவைத்து இருந்தாள். காலை வேலை முடிந்ததும், அதைத் துவைத்து விட்டு வர, அவர்கள் பகுதிக்கு சென்று இருந்தாள்.

அந்த இடைவெளியில் மதியழகன் அவளைப் பார்க்க வர,

மித்ராதான் அங்கு இல்லையே.. அது தெரியாமல் ஒவ்வொரு இடமாக... மனைவி எங்காவது தென்படுகிறாளா எனப் பார்த்துக் கொண்டு இருந்தான்.

https://t.me/tamilpdfebooks

அவன் தேடுவதைப் பார்த்து அண்ணிகள் இருவருக்கும் சிரிப்பு. “மித்ரா துணி துவைக்கப் போயிருக்கா.” எனச் சுபத்ரா சொல்ல...

“என்ன இன்னைக்கு ஒன்னும் பார்சல் இல்லை. பாசம் அவ்வளவு தானா..” என ரேவதி கேலி செய்ய,

“உங்களுக்குத் தெரியுமா இல்லைன்னு.” மதியழகன் நக்கலாக சொல்லும் போதே...

“அண்ணே...” எனச் சத்தம் வர, மதியழகன் எழுந்து வாசலுக்கு சென்றான். திரும்ப உள்ளே வந்தவன் கையில், ஒரு பை நிறைய நொங்குகள் இருந்தது.

“வரும் போது சொல்லிட்டுதானே வந்தேன்.” என்றான் ரேவதியை பார்த்து.

“அண்ணி, ஒரு தட்டுக் கொடுங்க.” எனச் சுபத்ராவிடம் கேட்டவன், அவள் கொண்டு வந்த தட்டில் கொஞ்சம் எடுத்துக் கொண்டு, மனைவியைத் தேடி சென்றான்.

இவன் சென்றபோது அப்போது தான் அவள் துவைத்து முடித்து இருந்தாள். துணிகள் இருந்த வாலியை தூக்கி வெளியே வைத்தவள், குளியல் அறையை அலசி விட்டு கொண்டிருந்தாள்.

https://t.me/tamilpdfebooks

அவள் திரும்ப வெளியே வந்து பார்த்த போது, வாலி அங்கு இல்லை. இங்க தான வச்சோம், எங்க போச்சு என வாய்விட்டு பேசினாள். மதியழகன் எடுத்து வேறு இடத்தில் வைத்துவிட்டு மறைந்து நின்றான்.

அவளுக்குப் புரிந்து விட்டது இது மதியழகனின் வேலை என்று. முகம் மலர கணவனைத் தேடினாள். அவளுக்குத் தெரிந்துவிட்டது என்றதும், மதியழகனும் சிரித்தபடி வெளியே வந்தவன், மனைவியை அனைத்துக் கொண்டான். சிறிது நேரம் அவளைக் கொஞ்சி மகிழ்ந்த பின்னே விலகினான்.

“இந்தா நொங்கு வாங்கிட்டு வந்திருக்கேன். சாப்பிடு.” எனத் தோளை உரித்துக் கொடுத்தவன், சாப்பிட்டு முடித்ததும், அவளைப் பெரிய வீட்டில் விட்டு, அவன் கடைக்குச் சென்றான்.

நேற்று போல் இன்றும் காய்கறிகளோடு மெனுவும் வர… பேசிக்கொண்டே மூவரும் சமையலை முடித்தனர். இப்போது ரேவதி மீண்டும் நன்றாகப் பேசினாள்.

மாலை நீலவேணி மித்ராவிடம், “நாளைக்கு வெள்ளிக்கிழமை, காலையில தலைக்கு ஊத்திட்டு, நீயும் மதியும் நம்ம ஊர்ல இருக்கிற கோவிலுக்கு எல்லாம் போய்ட்டு வந்திடுங்க.” என்றார்.

https://t.me/tamilpdfebooks

*இரவு உணவு முடிந்து துரை உள்ளே சென்றதும், "அம்மா அப்பாகிட்ட கேட்க சொன்னேனே கேட்டீங்களா?" மதியழகன் கேட்க,*

*"கேட்டேன் டா... அண்ணனுங்க போகலை, அதனால நீ மட்டும் போனா நல்ல இருக்காது. வேணா எல்லாரையும் சேர்ந்து போகச் சொல்லுன்னு சொன்னார்." என்றதும், சரி இதாவது விட்டாரே என நினைத்து, சரி என்றான்.*

*அவன் அண்ணன்களிடம் விஷயத்தைச் சொல்ல, கதிரேசன் "பசங்களா, நாம இந்த வாரம் கொடைக்காணல் போறோம்." என்றவன், மனைவியின் முகத்தைப் பார்க்க... சுபத்ரா முகத்தில் சந்தோஷம் தெரிந்தது. குழந்தைகளும் குஷியாக குதித்தனர்.*

*கருணாகரன் ரேவதியிடம் சொல்ல, "நீங்க எல்லாம் போயிட்டு வாங்க. சின்னத்துக்கு உடம்பு சரி இல்லை. நான் வரலை." என்றாள்.*

*மித்ராவை தவிர அனைவரும் ஆரம்பித்து விட்டாயா என்பது போலப் பார்க்க,*

*"அவ வருவா." எனச் சொல்லிவிட்டுக் கருணா சென்று விட்டான்.*

https://t.me/tamilpdfebooks

ரேவதியும் சென்றதும், “இன்னைக்கு விடிய விடிய சண்டை போட ரெண்டு பேருக்கும் காரணம் கிடைச்சிடுச்சு.” என்றான் கதிரேசன்.

“நாம போகனுமா? பேசாம இருந்திடலாமே.” என்றாள் சுபத்ரா.

“அப்பாவே மனசு வந்து சரின்னு சொல்லி இருக்கார். போயிட்டு வருவோம் அண்ணி.” என்றான் மதியழகன்.

இவர்கள் பேசும் போது மித்ரா அங்கு இல்லை. முன்பே அவர்கள் பகுதிக்கு சென்றுவிட்டாள். மதியழகன் சென்றபோது, கொடைக்காணல் செல்ல தேவையான துணிகளை எடுத்துப் பையில் அடுக்கிக் கொண்டு இருந்தாள்.

“பார்த்தியா நம்ம ஆளு அதுக்குள்ள ரெடி ஆகிடுச்சு.” என நினைத்தவனுக்குச் சிரிப்புப் பொங்கியது.

# அத்தியாயம் 10

மறுநாள் காலை மதி பட்டு வேட்டி சட்டையிலும், மித்ரா அடர் ரோஸ் நிற பட்டு புடவையிலும் கிளம்பி வந்தனர். இருவரும் காபி குடித்து முடித்ததும்,

https://t.me/tamilpdfebooks

அங்கிருந்த நீலவேணியிடம் சொல்லிவிட்டு, கோவிலுக்குக் கிளம்பி சென்றனர்.

மித்ரா மதியழகனோடு பைக்கில் பாந்தமாக உட்கார்ந்து சென்றாள். முதலில் அந்த ஊரில் இருந்த பிள்ளையார் கோவிலுக்குச் சென்றுவிட்டு, பிறகு பெரிய சிவன் கோவிலுக்கு அழைத்துச் சென்றான். பின்னர் அங்கிருந்து அம்மன் கோவில் என வரிசையாக ஒவ்வொரு கோவிலுக்கும் சென்றனர்.

மதியழகனின் உயரத்திற்கும் கோதுமை நிறத்திற்கும் பட்டு வேட்டி சட்டை, அவனுக்கு அவ்வளவு அம்சமாக இருக்க... அவன் தோள் உரச நடந்து வந்த மித்ராவும் புடவையில் லட்ச்சனமாக இருந்தாள்.

இருவரும் வீட்டுக்கு வந்ததும், நீலவேணி, இருவரையும் கிழக்குப் பக்கமாக உட்கார வைத்து, உப்பு மிளகாய்க் கொண்டு வந்து சுற்றிப் போட்டார்.

அன்று மதியழகன் பதினோரு மணி போல வந்து மித்ராவை டீ போட சொல்லி, அவளோடு உட்கார்ந்து குடித்து விட்டுச் சென்றான்.

ரேவதி அன்று யாரோடும் பேசவே இல்லை. உர்ரென்று முகத்தை வைத்துக் கொண்டு சுற்றிக் கொண்டு இருந்தாள். அவள் முகத்தைப் பார்த்து விட்டு பேச தயங்கி மித்ராவும் அமைதியாக இருந்தாள்.

https://t.me/tamilpdfebooks

அவள் கவனித்தவரை, ரேவதிக்கு வீட்டு வேலைகள் செய்வதில் அவ்வளவு உடன்பாடு இல்லை. அதற்காக வேலை செய்யாமலும் இல்லை. ஒரு அளவோடு நிறுத்திக் கொள்கிறாள். ஒரு வயது மகளும் இருப்பதால்...

அவளைப் பார்ப்பது போல நேரத்தை கடத்தியும் விடுகிறாள். ஆனால் சுபத்ரா அதற்கு மாறாக எல்லா வேலைகளையும் இழுத்து போட்டுக் கொண்டு செய்கிறாள்.

மறுநாள் அதிகாலை கொடைக்காணல் செல்வதால்... அன்று இரவு எல்லோரும் சீக்கிரமே சாப்பிட்டுவிட்டுப் படுக்கச் சென்றனர். எல்லோரையும் விட மித்ராதான் ஆவலாக இருந்தாள்.

அதிகாலையில் எழுந்து குளித்து, ஆரஞ்சு நிறத்தில் அனார்கலி மாடலில் புதுச் சுடிதார் அணிந்து, முன் தினம் ஷாம்பூ போட்டு அலசிய கூந்தலை தூக்கி வாரி, போனிடைல் போட்டிருந்தாள்.

காதில் பெரிய வளையம். முகத்தில் ஒப்பனை செய்து சின்னப் பொட்டும் வைத்துக் கொண்டாள். பார்க்க கல்லூரிக்குச் செல்லும் பெண் போல இருந்தாள்.

https://t.me/tamilpdfebooks

*“கலக்குற டி பொண்டாட்டி.” என்ற மதியழகன் ஜீன்ஸ் டி ஷர்ட்டில், அவனும் கலக்கலாகத் தான் இருந்தான்.*

*காலில் புது ஹில் செருப்பு எடுத்து போட்டவள், முன்பக்க வாசலில் அதை விட்டுவிட்டு வருவதற்காகச் சென்றவள், அப்படியே அந்தப் பக்கமாகவே உள்ளே வர... ஹாலில் நின்றிருந்த துரை, “இதோ பாரு யாரோ வந்திருக்காங்க.” என்றார் நீலவேணியிடம்.*

*யாரோ எனப் பார்த்த அனைருக்கும் மித்ரா நிற்பதை பார்த்ததும் ஒரே சிரிப்பு.*

*“அப்பா, என் பொண்டாட்டி பா...” என்றான் மதியழகன்.*

*“உங்களுக்குச் சின்னவன் பொண்டாட்டியை கூட அடையாலம் தெரியலையா?”நீலவேணி கேட்க,*

*“வேற உடுப்பு போட்டிருக்கா அதுதான் தெரியலை.” என்றார் துரை சிரித்தபடி.*

*மித்ராவுக்கு ஒரே வெட்கமாகப் போய் விட்டது. அவளைப் பார்த்து மதியழகனுக்குச் சிரிப்புப் பொங்கியது.*

*துரை மற்றும் நீலவேணியிடம் சொல்லிவிட்டுக் காரில் சென்று ஏறினர். இன்னும் கருணாவின் குடும்பம் மட்டும் வரவில்லை.*

https://t.me/tamilpdfebooks

ஓட்டுனர் இருக்கையில் இருந்த கதிரேசன், "இன்னைக்குக் கண்டிப்பா ரெண்டு பேரும் சண்டை போடுவாங்க. நீ வாயை திறக்காத மதி, நான் இப்பவே சொல்றேன்." என்றான்.

"நான் என் பொண்டாட்டியோட பின்னாடி போய் உட்கார்ந்துகிறேன். என்னவோ பண்ணி தொலையட்டும்." என்றவன், மித்ராவோடு சென்று கடைசி இருக்கையில் உட்கார்ந்து கொண்டான். அதில் விளையாடி கொண்டிருந்த பிள்ளைகளைத் தூக்கி முன்னால் போட்டான்.

"சித்தப்பாக்கு ரொம்பத் தலைவலிக்குது. அதனால முன்னாடி உட்கார்ந்து விளையாடிட்டு வாங்க." என்றான்.

அதிக நேரம் காக்க வைக்காமல், ஒரு வழியாகக் கருணாவின் குடும்பம் வந்தது. ரேவதியும் சுடிதரில்தான் இருந்தாள். அவளைப் பார்த்து சுபத்ராவும், மித்ராவும் வரவேற்பாகப் புன்னகைக்க, அவளும் மெலிதாகப் புன்னகைத்தாள்.

பையை வைக்க டிக்கியை திறந்த கருணா, "என்னடா நீ இங்க இருக்க." என்றான் மதியழகனிடம். பிறகு மித்ராவை பார்த்தவன், "நீ நடத்து." எனச் சிரித்துக் கொண்டே சென்றான்.

https://t.me/tamilpdfebooks

வண்டி கிளம்புவதற்கு முன் வந்த துரை, “பிள்ளைங்களை எல்லாம் கூடிட்டு போறீங்க. வண்டியை மெதுவா ஓடிட்டு போங்க.” என்றார்.

சரி என அவரிடம் சொல்லிவிட்டு கிளம்பினர்.

நடு இருக்கையில் சுபத்ராவும், ரேவதியும் தங்கள் மகள்களை வைத்துக் கொண்டு இருந்தனர். பையன்கள் இருவரும் முன் இருக்கையில் கருணாவுடன் இருந்தனர். பின் இருக்கையில் மித்ரா ஒரு பக்கம் படுத்துக்கொள்ள, மறுபக்கம் மதியழகன் படுத்துக்கொள்ள, இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு வந்தனர்.

சிறிது நேரத்தில் இருவரும் உறங்கியும் போனார்கள். கதிரேசன் காலை உணவிற்காக ஒரு ஹோட்டலில் நிறுத்த, அப்போதுதான் இருவருமே விழித்தனர்.

ரேவதி ஆடி அசைந்து இறங்க… அதற்குள் மற்றவர்கள் இறங்கி ஹோட்டலுக்குச் சென்றுவிட்டனர். கருணா இருந்து அவளை அழைத்து வந்தான்.

“பசங்களா என்ன வேணுமோ சாப்பிடுங்க.” என்ற கதிரேசன், சுபத்ராவிடம் அவளுக்கு என்ன வேண்டும் எனக் கேட்க, “நீங்களே சொல்லுங்க.” என்றாள்.

https://t.me/tamilpdfebooks

"இந்தக் கதை எல்லாம் வேண்டாம். நீதான் சொல்லணும்." என்றான். அவள் உணவு பட்டியலைப் பார்த்து விட்டு, ஆப்பம் என்றாள். கதிரேசன் தனக்கும் அதே சொன்னான். பிள்ளைகள் மசால் தோசை கேட்டனர்.

மதியழகன் மித்ராவிடம் கறி தோசை சாப்பிட்டு இருக்கியா நீ?" எனக் கேட்டதற்கு அவள் இல்லை என்று சொல்ல,

ஒரு கறி தோசை கொண்டு வர சொன்னான். "உங்களுக்கு." மித்ரா கேட்க,

"நாம ஷேர் பண்ணி சாப்பிடுவோம். அது சாப்பிட்டு அடுத்து வாங்குவோம். இல்லைனா ஆறிடும்." என்றான்.

இவர்கள் ஆர்டர் கொடுத்து முடித்த பிறகுதான், கருணாவும் ரேவதியும் தங்கள் மகளோடு வந்து உட்கார்ந்தனர். ரேவதி முதலில் மகளுக்கு இட்லி கேட்டாள். கருணா அவனுக்குத் தோசை சொன்னான்.

இவர்கள் ஆர்டர் கொடுத்த உணவுகள் வர... மதியழகனும், மித்ராவும் ஒரு தோசையை இருவரும் சாப்பிட...

அதைக் கவனித்த கதிரேசன், "டேய் உங்களோட முடியலை டா..." என்றதற்கு,

https://t.me/tamilpdfebooks

*“நீயும் அண்ணியோட சாப்பிடேன் யாரு வேண்டாம்ன்னு சொன்னா.” மதியழகன் சொல்ல,*

*“வீடுன்னா ஊட்டி விட்டிருப்பார். இது பரவாயில்லை விடுங்க.” என்றாள் சுபத்ரா. அதைக் கேட்டு கருணாவும், ரேவதியும் சிரித்தார்கள். மதியழகன் அடுத்து ஆப்பம் சொன்னான்.*

*ரேவதி மகளுக்கு மெதுவாக ஊட்டிவிட, “நேரம் ஆகுது சீக்கிரம் கொடு.” எனக் கருணா சொன்னதற்கு, “இதுக்குதான் நான் வரலைன்னு சொன்னேன். உங்க அவசரத்துக்கு எல்லாம் என்னால ஒன்னும் பண்ண முடியாது.” என்றாள் முகத்தைச் சுளித்துக் கொண்டு.*

*“தெரியும் டி. உன் புத்தியை நீ காட்டுவேன்னு. என்னைக்காவது வெளிய கிளம்பினா சந்தோஷமா வர சொல்லு. நீயா எதாவது மனசுல நினைச்சிட்டு, வெளிய வந்தாலும் வெடுக்கு வெடுக்குன்னே பேசுற... உன்கிட்ட மனுஷன் இருக்க முடியாது.” என்றவன், எழுந்து வெளியே சென்றுவிட்டான்.*

*கதிரேசன் எழுந்து கருணா பின்னால் சென்று விட... ரேவதி சாப்பிடாமலே எழுந்துகொள்ள, சுபத்ரா அவளைப் பிடித்து உட்கார வைத்தாள்.*

https://t.me/tamilpdfebooks

*"அண்ணி, பாப்பாவை என்கிட்டே கொடுங்க." என்ற மதியழகன், "மித்ரா அந்த இட்லியை எடுத்திட்டு வா வெளிய வேடிக்கை காட்டிட்டு ஊட்டலாம்." எனக் குழந்தையைத் துக்கிக் கொண்டு செல்ல, மித்ராவும் இட்லியும் தண்ணீரும் எடுத்துக் கொண்டு அவன் பின்னே சென்றாள்.*

*"நான்தான் வரலைன்னு தானே அக்கா சொன்னேன். எப்படிப் பேசுறார் பாருங்க." என ரேவதி சுபத்ராவிடம் சொல்ல,*

*"உன்னை அங்க விட்டுட்டு வந்து, அவர் மட்டும் எப்படிச் சந்தோஷமா இருப்பார் ரேவதி. நாம இத்தனை பேர் இருக்கோம், அட்ஜஸ்ட் பண்ணிக்கலாம். நமக்கே எப்பவோ ஒரு தடவைதான் இது மாதிரி வெளிய வர சான்ஸ் கிடைக்குது."*

*"அதுதான் அக்கா எனக்குக் கோபம். நானும் இவரை ரொம்ப நாளா எங்காவது போகலாம்ன்னு சொல்லிட்டு இருக்கேன். கண்டுக்கவே இல்லை. இன்னைக்குத் தம்பி சொன்னதும், உடனே கிளம்புறார். அப்ப நமக்கு ஆத்திரமா வராதா?"*

*"என் வீட்டுகாரரும் அப்படித்தான். அவரா வெளியில கிளம்பனும்னா அது நடக்கவே நடக்காது. எதோ மதி புண்ணியத்துல இன்னைக்கு வெளிய வந்திருக்கோம். நம்ம வீட்டை பத்தி தெரிஞ்சது தானே விடு."*

*"வந்த இடத்தில சந்தோஷமா இரு."*

https://t.me/tamilpdfebooks

*சுப்த்ராவுடன் பேசிக்கொண்டே ரேவதி சாப்பிட, அங்கே மதியழகன் குழந்தைக்கு வேடிக்கை காட்ட, மித்ரா இட்லி ஊட்டினாள்.*

*"பரவயில்லையே, உனக்கு நல்லா ஊட்ட தெரியுதே... அப்ப நாம கூட இது மாதிரி ஒரு பாப்பா ரெடி பண்ணலாம்." அவன் அவளைப் பார்த்து கண்சிமிட்ட,*

*"ம்ம்... பக்கத்து வீடு பாப்பாக்கு ஊட்டி பழக்கம்." என்றாள் மித்ரா மிடுக்காக.*

*"இருந்தாலும் நாம கொஞ்ச நாள் கழிச்சே ரெடி பண்ணுவோம். நீயே நம்ம வீட்டுக்கு புதுசா வந்திருக்க, இதுல மசக்க, வாந்தின்னா உனக்கு எரிச்சலா இருக்கும். நம்ம வீடு உனக்குச் செட் ஆகட்டும். அப்புறம் ரெடி பண்ணலாம்." என்றான்.*

*"இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?"*

*"எனக்கு ரெண்டு அண்ணிங்க இருக்காங்க மேடம். ரெண்டு பேரும் கல்யாணம் ஆனதும் மாசமாகிட்டாங்க. சுபத்ரா அண்ணி பரவாயில்லை சமாளிச்சிட்டாங்க. ரேவதி அண்ணி ரொம்பக் கஷ்ட்டபட்டாங்க."*

https://t.me/tamilpdfebooks

*“அவங்களுக்கு எது சாப்பிட்டாலும் நிக்காது. இதுல இவன் போய் என்னத்தைப் பேசுவானோ… அவங்க எரிச்சல்ல சண்டை பிடிப்பாங்க. அப்ப இருந்தே ரெண்டு பேரும் இப்படித்தான்.”*

*“இவங்க அவனைக் குறை சொல்வாங்க. அவன் இவங்களைக் குறை சொல்வான். ரெண்டு பேருக்குள்ள புரிஞ்சிக்கிற தன்மையே இல்லை. கல்யாணம் ஆனதும் குழந்தை வந்திடுச்சா… அதனால தான் இப்படி இருக்காங்களா தெரியலை.”*

*“நாம எதுக்கும் கொஞ்சம் கேப் விடுவோம்.”*

*மித்ரா இட்லியை ஊட்டி முடிக்க, சுபத்ராவும் ரேவதியும் வெளியே வந்தனர். கிளம்புங்க கிளம்புங்க என எல்லோரையும் வண்டியில் ஏற்றி, ஒரு வழியாகப் பன்னிரெண்டு மணி போல் கொடைக்காணல் வந்து விட்டனர்.*

*கதிரேசன் வெளியே சாமான்யமாக வர மாட்டான். ஆனால் வந்து விட்டால், மனைவி குழந்தைகளை நன்றாகக் கவனிப்பான். அவர்களோடு அவனும் அனுபவிப்பான்.*

https://t.me/tamilpdfebooks

கருணாவும் ரேவதியும் இன்னும் முறைத்துக் கொண்டுதான் இருந்தனர். அதற்கு நடுவிலும் சுற்ற வேண்டிய இடங்களைச் சுற்றி பார்த்தனர்.

மித்ரா செல் போனில் படங்களாக எடுத்து ஜெய்க்கு அனுப்பி வைத்தாள். தங்கை முகத்தில் தெரியும் மகிழ்ச்சி, அண்ணன் அவன் முகத்தையும் மலர செய்தது.

மாலை வரை சுற்றிவிட்டு, ஏற்கனவே பதிவு செய்திருந்த அறைக்குத் திரும்பினர். கருணாதான் தன் நண்பர்கள் மூலமாக அறை பதிவு செய்திருந்தான்.

மதியழகன் மித்ராவுக்கு ஒரு இடத்திலும், இவர்களுக்கு வேறு இடத்திலும் பதிவு செய்திருந்தான்.

அவர்களை அந்த ஹோட்டலில் இறக்கிவிட்டு, தானும் அவர்களுடன் கீழே இறங்கிய கருணா"மதி, நீ நாளைக்கு உன் பொண்டாட்டியோட தனியா சுத்தி பாரு. சாயங்காலம் வீட்டுக்கு போகும் போது, வழியில வந்து ஏறிக்கோ." என்றான்.

"ஏன் அண்ணே நாங்க மட்டும் தனியா? சேர்ந்து வந்திட்டு, சேர்ந்தே போவோம்."

https://t.me/tamilpdfebooks

*“டேய் சொன்னாக் கேளு… நாங்க பிள்ளைங்களை வச்சிக்கிட்டு கிளம்ப எல்லாம் லேட் ஆகும்.”*

*மதியழகன் அங்கிருந்தே கதிரேசனைப் பார்க்க, அவன் சொல்றதை கேள் என்பதைப் போலத் தலையசைத்தான்.*

*“சரி அண்ணே… ஆனா நீ அண்ணிக் கூடச் சண்டை போடாத என்ன?” எனச் சொல்லிவிட்டு மதியழகன் மித்ராவுடன் கிளம்ப.*

*“இந்தா இந்தப் பணத்தை வச்சுக்கோ.” என மதியழகன் மறுக்க மறுக்க, கருணா தம்பியிடம் பணத்தைக் கொடுத்து விட்டே சென்றான்.*

*காரில் ஏறிய கருணாவிடம், “இவங்க மட்டும் ஏன் தனியா இருக்காங்க.” என ரேவதி கேட்க, “நம்ம ஹோட்டல்ல ரெண்டு ரூம் தான் இருந்துச்சு.” என்றான்.*

*பெரிய ஹோட்டல் எல்லாம் இல்லை. நடுத்தர மக்கள் தங்க வசதியான ஹோட்டல். ஆனால் நன்றாகச் சுத்தமாக, அதுவும் முக்கியச் சாலையில் இருந்தது.*

https://t.me/tamilpdfebooks

அறைக்குச் சென்றதும் களைப்பில் மதியழகன் கட்டிலில் படுத்து விட. அந்தக் குளிரிலும் குளித்தால் நன்றாக இருக்கும் எனத் தோன்ற... மித்ரா சென்று வெந்நீரில் குளித்துக் காட்டன் சுடிதார் அணிந்து வந்தாள்.

அவள் சென்று கட்டிலில் கணவனின் அருகே அமர்ந்து அவன் நெற்றியை அழுத்தி விட... அதில் கண் திறந்தவன், அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

"ஹே குளிச்சிட்டியா? நானும் குளிச்சிட்டு வரேன்." என்றவன், துண்டை கையில் எடுத்துக் கொண்டு குளியல் அறைக்குள் சென்றான்.

குளித்து விட்டு வரும் போது, கையேடு உள்ளாடைகளைத் துவைத்துக் கொண்டு வந்திருந்தான், அவனோடது மட்டும் அல்ல அவளோடதும்.

"உங்களுக்கு ஏன் இந்த வேலை? நீங்க குளிச்சதும், நான் துவைக்கலாம்ன்னு இருந்தேன்."

"ஏன் நான் துவைக்கக் கூடாதா... அதை அவனே காய வேறு போட..." மித்ரா தலையில் அடித்துக் கொண்டாள்.

"ரூம் சர்விஸ் இருக்கு. என்ன சாப்பாடு வேணும், நீயே போன் பண்ணி சொல்லு. இங்கயே உட்கார்ந்து சாப்பிடுவோம்." என்றவன், உடைகளை எடுத்து அணிய.. மித்ரா போன்னில் பிரைட் ரைஸ் நூட்லஸ் சொன்னாள்.

https://t.me/tamilpdfebooks

மதியழகன் மித்ராவின் அருகே சோபாவில் அமர்ந்தான். "என்ன மேடம் யோசிக்கிறீங்க?"

"நீங்க என்னைக் கொஞ்சமாவே கவனீங்க. அப்புறம் பின்னாடி நீங்க சண்டை போட்டா எனக்குக் கஷ்ட்டமா இருக்கும்." என்றாள்.

"நாமும் அண்ணன் அண்ணி மாதிரி சண்டை போட்டுபோம்ன்னு நினைக்கிறியா?"

"தெரியலை... ஆனா கொஞ்சம் பயமா இருக்கு." என்றவள், அவன் நெஞ்சில் சாய்ந்து கொண்டாள்.

"நமக்கும் சண்டை வரும் மித்ரா, புருஷன் பொண்டாட்டினா சண்டை வராம இருக்காது. நம்ம ரூம்குள்ள நீ எவ்வளவு சண்டைனாலும் போடு, வெளிய என்னை விட்டுக் கொடுக்காத, நானும் உன்னை விட்டுக் கொடுக்க மாட்டேன்."

"அன்னைக்குக் கார்ல பேசின மாதிரி நீ பேசினா, கோபத்தில நானும் பேசிடுவேன்."

https://t.me/tamilpdfebooks

*“எனக்கு எவ்வளவு சொந்தம் இருந்தாலும், நீ தனிதான். அதே போலத்தான் உனக்கு நானும்.”*

*“ஆமாம் அது எனக்குப் புரியுது. நாம இனி கொஞ்சம் அடக்கியே வாசிக்கலாம். எனக்கு என்னவோ நம்மைப் பார்த்துதான் சின்ன அத்தான் அக்காகுள்ள சண்டை வருதோன்னு தோணுது.”*

*“இங்க பாரு மத்தவங்களுக்காக நாம வாழ முடியாது புரியுதா? என் அன்பை நான் உனக்குக் காட்டுறேன் இதுல என்ன தப்பு?”*

*“எனக்கு மட்டும் காட்டுங்க போதும்.” என்றாள் மித்ரா. அவனின் மீசையைப் பிடித்து இழுத்தபடி... அதில் கிறங்கியவன், அவளை அணைக்க, அந்த நேரம் ஆர்டர் செய்த உணவுகள் வர.... இருவர் மட்டும் தனியே இருப்பதால்... மாற்றி மாற்றி ஊட்டிவிட்டுக் கொண்டு சாப்பிட்டு முடித்தனர்.*

*சாப்பிட்டு முடித்ததும், “வெளியே நடந்துவிட்டு வரலாம்.” என மதியழகன் மித்ராவை அழைத்துக் கொண்டு சென்றான்.*

*அவள் தோளில் கைபோட்டு, அவளிடம் கதை பேசியபடி நடந்து செல்ல, இருவருக்கும் அது புது அனுபவமாக இருந்தது. அவர்கள் ஊரில் இப்படி அவர்களால் இருக்க முடியாது. வந்த இடத்தில் அனுபவித்தனர்.*

https://t.me/tamilpdfebooks

*அங்கே காரில் இருந்து இறங்கும் போதே கதிரேசன் கருணாவிடம் சொல்லிவிட்டான். "டேய் காலையில பார்ப்போம். எப்படியும் நாங்க கிளம்பப் பத்து மணி ஆகிடும்." என்று. அதற்குக் கருணாவும் சரி என்றான்.*

*குழந்தைகளுக்கு உடை மாற்றிவிட்டு, தானும் குளித்துச் சுபத்ரா சுடிதார் அணிந்து, கதிரேசன் மனைவியைப் பார்வையாலையே பருகிக் கொண்டு இருந்தான்.*

*குழந்தைகள் இருவரும் விளையாட... அவனின் அருகே வந்தவள், "இப்படியே பார்த்திட்டே இருக்கப் போறீங்களா?" என்றாள்.*

*"பசங்க தூங்கிற வரை ஒன்னும் பண்ண முடியாதே? அதுதான் பார்த்திட்டாவது இருக்கேன்." என்றான்.*

*"அப்புறம் பாருங்க, பசிக்குது." என்றாள்.*

*"வெளியே போய்ச் சாப்பிடுவோமா?" கதிரேசன் கேட்க, சுபத்ரா சந்தோஷமாகச் சரி என... குழந்தைகளை அழைத்துக் கொண்டு இருவரும் கிளம்பி விட்டனர்.*

https://t.me/tamilpdfebooks

அங்கே அறைக்கே உணவு வரவழைத்து, குழந்தைகளைச் சாப்பிட வைத்து, கருணாவும் ரேவதியும் சாப்பிட்டு முடிக்கவே வெகு நேரம் ஆகி விட்டது. குழந்தைகள் விளையாட, கருணா டிவி பார்க்க, ரேவதி கட்டிலில் படுத்து இருந்தாள்.

சிறிது நேரம் விளையாடிவிட்டுப் பிள்ளைகள் இருவரும் அசதியில் உறங்க ஆரம்பிக்க, அவர்களைக் கட்டிலில் வசதியாகப் படுக்க வைத்த கருணா, சோபாவை படுக்கையாக மாற்றிவிட்டு வந்தவன், விளக்கை அனைத்து விட்டு, கட்டிலில் படுத்து இருந்த ரேவதியை கைகளில் தூக்கிக் கொண்டு சோபாவிற்குச் சென்றான்.

“விடுங்க என்னை.” ரேவதி கத்த,

“காலையில சண்டை போடலாம். ப்ளீஸ் ரேவதி.” என்றான்.

ரேவதியும் கணவனின் கைகளில் உருக ஆரம்பிக்க, அதை உணர்ந்த கருணா மகிழ்ச்சியாக மேலும் முன்னேறினான்.

மறுநாள் காலை சீக்கிரமே எழுந்து மதியழகனும் மித்ராவும் நன்றாக உடை அணிந்து, வெளியே சுற்ற கிளம்பி விட்டனர்.

https://t.me/tamilpdfebooks

*மற்ற இரண்டு குடும்பமும் நிதானமாக எழுந்து, கிளம்பி, ஊர் சுற்றி பார்க்க சென்றனர். இன்று ரேவதி கொஞ்சம் சாதாரணமாக இருந்தாள். அதைக் கவனித்த கதிரேசனுக்கும், சுப்த்ராவுக்கும் நிம்மதியாக இருந்தது.*

*அப்படி இப்படி என ஊர் கிளம்ப மாலை ஆறு மணி ஆகிவிட்டது. வழியில் மதியழகனும் மித்ராவும் இவர்களோடு சேர்ந்து கொண்டனர். எல்லோருமே நல்ல மனநிலையில் இருந்ததால்... வண்டியில் ஒருவரோடு ஒருவர் அரட்டை அடித்துக் கொண்டு ஜாலியாக வந்தனர். இந்த நிலை தொடருமா?*

# அத்தியாயம் 11

கொடைக்காணல் சென்று வந்த மறுவாரம் ஞாயிற்றுகிழமை நீலவேணியிடம் சொல்லிவிட்டு, மதியழகன் மித்ராவை அழைத்துக் கொண்டு, முதலில் வெங்கடேஷ் வீட்டிற்கும், அடுத்து அவனையும் சேர்த்துக் கொண்டு நட்ராஜ் வீட்டிற்கும் சென்றனர்.

https://t.me/tamilpdfebooks

நட்ராஜ் வீட்டில் இவர்களுக்கு ஒரு சிறிய விருந்தே தயார் செய்து இருந்தனர். அதுவும் அவர்களின் இரட்டை பையன்கள் வேறு மிகவும் சேட்டை. மித்ராவிடம் அத்தை எனப் பாசமாக ஒட்டிக் கொண்டனர்.

எல்லோருமாகச் சேர்ந்து பேசி சிரித்து இரவு உணவு சந்தோஷமாகக் சாப்பிட்டனர்.

அடுத்த மாதம் வந்த ஞாயிறு விடுமுறையில் மித்ரா கேட்கும் முன்பே, மதியழகன் மித்ராவை அவளது பிறந்த வீட்டிற்கு அழைத்துச் சென்றான். துரை கூட இப்போது எதற்கு என்றார். ஆனால் போவதில் மதியழகன் உறுதியாக இருக்க... சரி என விட்டு விட்டார்.

“நீயும் வரியா அக்கா.” மித்ரா சுபத்ராவிடம் கேட்க,

“நான் அடுத்தத் தடவை வரேன். நீ இப்ப போயிட்டு வா.” என்றாள். இவளும் சேர்ந்து சென்றால், வீட்டில் யார் வேலை பார்ப்பது.

முதல் நாள் இரவே இருவரும் சென்றுவிட்டனர். இருவர் மட்டுமே என்பதால்... பேருந்தில்தான் சென்றனர். ஜெய் அவர்களுக்காகப் பேருந்து நிலையத்தில் காரோடு நின்றிருந்தான்.

https://t.me/tamilpdfebooks

*தங்கையைப் பார்த்ததும் அவனுக்கு அவ்வளவு மகிழ்ச்சி. மறுநாள் அண்ணனும் தங்கையும் மட்டும் இருக்கும் வேளையில், "ஏய் வாலு, அம்மாகிட்ட என்ன சொன்ன? உனக்கு ரொம்பத் தெரியுமா?" என்றான்.*

*முதலில் அவன் என்ன சொல்கிறான் என மித்ராவுக்குப் புரியவில்லை. பிறகு தான் புரிந்தது.*

*"அவதான் எனக்குப் போன் பண்ணுவான்னு உனக்கு நல்லா தெரியும், ஆனா நீ எடுத்து ஹலோன்னு சொல்லிட்டுதான் என்கிட்டே கொடுப்பா… அவளும் ஒருநாள் கூட உங்க அண்ணன் ஏன் போன் எடுக்கிறாருன்னு கேட்டதே இல்லை."*

*"இதுலையே தெரியலையா உங்க லட்சணம்."*

*"அது அவ தானான்னு செக் பண்ணிட்டுக் கொடுப்பேன். அதை நீ தப்பா புரிஞ்சிகிட்டா, நான் என்ன பண்றது?"*

*ஜெய் ஒத்துக் கொள்ளாமல் முரண்டு பிடிக்க, "சரி போ, அப்ப அவ வேண்டாம்ன்னு அம்மாகிட்ட சொல்லிடுறேன்." மித்ரா அப்படிச் சொன்னதும் ஜெய் பதறிவிட்டான்.*

https://t.me/tamilpdfebooks

"ஹே...அப்படி எல்லாம் எதுவும் பண்ணிடாத. நீ பார்த்த பொண்ணு, எனக்கு ஓகே தான்." என்றான்.

மித்ரா அவனை முறைக்க," தேங்க்ஸ்..." எனச் சொல்லி புன்னகையுடன் சென்றான். அதில் அவளுக்கும் சிரிப்பு வந்துவிட்டது.

மாலை வரை அண்ணனுடன் வம்பு வளர்த்து விட்டே கிளம்பி வந்தாள்.

புகுந்த வீட்டின் நடவடிக்கைகள் இப்போது மித்ராவுக்கு ஓரளவுக்கு அத்துப்படி. முன்பு போல் யாரையும் கேட்டுச் செய்யாமல், சூழ்நிலைக்கு ஏற்ற மாதிரி அவளே பார்த்து நடந்து கொண்டாள்.

இன்னும் உணவுப் பழக்கம் மட்டும் சற்று மாற்ற வேண்டியது இருந்தது. வீட்டிலேயே சுவையாகச் சமைத்தால்... வெளியே ஏன் சாப்பிட போகிறார்கள்.

https://t.me/tamilpdfebooks

*"இன்னும் ஒரு பொரியல் வைக்கலாம் அக்கா. நாமளே எதாவது வறுவல் மாதிரி பண்ணா, இந்த அப்பளம், பக்கோடான்னு இல்லாம சாப்பிடலாம் இல்ல… பசங்களும் நல்லா சாப்பிடுவாங்க." என்றாள்.*

*"இதுவரை மாமா சொல்லித்தான் சமைச்சு இருக்கோம். அவர் எதாவது நினைச்சிகிட்டா?" என்றாள் சுபத்ரா.*

*"நீங்க என்ன சொல்றீங்க ரேவதி அக்கா?"*

*"என்னை இதுல இழுக்காத. எனக்குத் தெரியாது." என்றாள் அவள்.*

*மாமியாரிடம் காய்கறி நறுக்கக் கொடுப்பது போலச் சென்ற மித்ரா, "அத்தை, மாமா சொன்னதோட இன்னும் ஒரு காய் பண்ணுவோமா… அப்பளம் பக்கோடான்னு வச்சிகிறதுக்குப் பதில். வீட்லயே பண்ணலாம்." எனக் கேட்டாள்.*

*மித்ராவின் சமையலை துரை விரும்பி சாப்பிட்டார் என்ற தைரியத்தில் நீலவேணி சரி என்றார்.*

https://t.me/tamilpdfebooks

*"இன்னொன்னு என்ன பண்ணலாம்?" மித்ரா யோசிக்க,*

*"உனக்கு இந்தக் காலிஃபிளவர் வறுப்பாங்களே, அது செய்யத் தெரியுமா?" நீலவேணி கேட்க, மித்ரா தெரியும் என்றார்.*

*"போய் உன் புருஷனுக்குப் போன் போட்டு தேவையானது வாங்கிட்டு வர சொல்லி, அதே பண்ணு." என்றார்.*

*வீட்டில் இருக்கும் செல்லை எடுத்து மித்ரா மதியழகனை அழைத்துச் சொல்ல, அவன் அவள் கேட்டதை வாங்கி வந்து கொடுத்துவிட்டுச் சென்றான்.*

*வழக்கமான சமையலை சுபத்ராவும் ரேவதியும் செய்ய, காலிஃபிளவர் வறுவலை மித்ரா செய்தாள். மித்ரா செய்து முடித்ததும், "மாமா திடிர்ன்னு ஒரு ஆட்டம் ஆடினாலும் ஆடுவார்." ரேவதி சொல்ல, மித்ராவுக்குப் பயமாகவும் இருந்தது.*

*மதிய உணவுக்கு வந்த பிள்ளைகள் வறுவல் இருந்ததால்... அன்று நன்றாகச் சாப்பிட்டு சென்றனர்.*

https://t.me/tamilpdfebooks

*துரை சாப்பிட வரும்போது மித்ராவுக்கு ஒரே பயம், அவள் பின்கட்டில் போய் நின்று கொண்டாள்.*

*“என்ன இன்னைக்குப் புதுசா எல்லாம் எதோ இருக்கு.” துரை கேட்க,*

*“அது பிள்ளைகளுக்காக மித்ரா செய்தா. இன்னைக்குதான் பிள்ளைங்க ஒழுங்கா சாப்பிட்டு இருக்குங்க.” நீலவேணி சொல்ல, துரை ஒன்றும் சொல்லாமல் சாப்பிட்டார்.*

*“இனிமே இன்னும் ஒன்னு வைக்கச் சொல்லுவோமா?”*

*“நானா வேண்டாம்ன்னு சொன்னேன். நீங்கதான் காய்கறி யாருக்கும் பிடிக்கிறது இல்லைன்னு சொன்னீங்க. இனிமே முன்னாடியே என்ன வேணும்ன்னு சொல்லச் சொல்லு. நானே வாங்கிக் கொடுத்து விடுறேன்.” என்றார்.*

*துரை படுக்கச் சென்றதும் மித்ரா வந்து, “மாமா என்ன சொன்னார் அத்தை?” எனக் கேட்க, “இனிமே என்ன காய் வேணும்ன்னு முன்னாடியே சொல்லியாம். அவரே வாங்கிக் கொடுத்து விடுறாராம்.” என்றதும்தான், மித்ராவுக்கு மூச்சே வந்தது.*

https://t.me/tamilpdfebooks

அன்று மதியம் வந்த கதிரேசன், மதியழகன் எல்லோரும் காலிஃப்பிளவர் இருந்ததால்…நன்றாகச் சாப்பிட. கடைசியாகச் சாப்பிட வந்த கருணாவிடம் மித்ராவே,

"சின்ன அத்தான், உங்களுக்காகதான் இந்த வறுவல் பண்ணி இருக்கு. இன்னைக்கும் பக்கோடா வச்சு சாப்பிடாதீங்க." என அவளே நேராகச் சொல்லிவிட…

"அப்படியா? நீ சொன்னா சரிதான்." எனக் கருணா சாப்பிட்டான். மதியழகன் ரேவதி முகத்தை ஓரக்கண்ணால் ஆராய்ந்தான். அவன் எதிர்ப்பார்த்தது போலக் கருத்துப் போய்தான் இருந்தது.

இரவும் மித்ரா சப்பாத்தி சூட்டு குருமா வைக்க, சோறு சாப்பிட போன கருணாவை, "இது கொஞ்சம் சாப்பிட்டு பாருண்ணா, எப்ப பாரு சோறு சாப்பிட்டுத் தொப்பையைதான் பெரிசா வளர்த்து வச்சிருக்க." என மதியழகன் வற்புறுத்தி சப்பாத்தி சாப்பிட வைத்தான்.

"குருமா நல்லா கரிக்கொழம்பு மாதிரி இருக்கே." எனச் சொல்லியபடி கருணா நன்றாக ரசித்து சாப்பிட்டான்.

https://t.me/tamilpdfebooks

*"உனக்கு என்ன வேணுமோ வீட்ல செய்யச் சொல்லி சாப்பிடு. இனி ரோட்டு கடையில எதாவது வாங்கிச் சாப்பிட்ட, அவ்வளவுதான்." மதியழகன் சொல்ல,*

*"உன் நல்லதுக்குதானே கருணா சொல்றான். அவன் சொல்றதை தான் கேளேன்." என்றான் கதிரேசனும். சரி சரி என்றான் கருணா.*

*துரையும் அன்று சப்பாத்தி தான் சாப்பிட்டு இருந்தார். "இனிமே நைட் டிபனே பண்ணிடுங்க." என்றார்.*

*மித்ராவின் கை அந்தக் குடும்பத்தில் ஓங்கிக்கொண்டு வருவதாக ரேவதி நினைத்தாள். அவளைத் தட்டி வைக்க எண்ணி, வேண்டுமென்றே நன்றாக இருந்தாலும் குறை சொல்லுவாள்.*

*எதாவது செய்தாலும், இதை இப்படிப் பண்ணி இருந்தா நல்லா இருக்கும் என்பாள். அதே மித்ரா அன்று எதுவும் செய்யவில்லை என்றாள்... அவ்வளவுதானா என்பாள்.*

*மித்ராவுக்குக் கடுப்பாக இருக்கும். மதியழகனிடம் சென்று புலம்புவாள். "நீ எனக்காகப் பண்றியா இல்லை அவங்களுக்காகப் பண்றியா? நீ பண்றது எனக்குப் பிடிச்சிருக்கு." என்பான்.*

https://t.me/tamilpdfebooks

*இந்த நேரத்தில் எழிலரசி வந்தாள். தம்பியையும் தம்பி மனைவியையும் விருந்துக்கு அழைத்து விட்டு, அப்படியே மூன்று நாட்கள் தங்கிவிட்டுப் போகலாம் எனத் தன் பிள்ளைகளுடன் வந்திருந்தாள்.*

*பிரியமான நாத்தனார் என்பதால்... அந்த வீட்டின் மூன்று மருமகளுமே... எழிலரசியை நன்றாகவே கவனித்தனர். மாலை நான்கு பேருமாகச் சேர்ந்து கோவிலுக்குச் சென்றுவிட்டு வந்து, வீட்டுக்குப் பக்கவாட்டில் இருக்கும் திறந்த வெளியில் உட்கார்ந்து அரட்டை அடித்தனர். எல்லாம் நன்றாகவே சென்றது.*

*எழிலரசியின் பிள்ளைகள் இருவருமே பெரிய பையன்கள். அவர்கள் வயதிற்கு நன்றாகச் சாப்பிட்டார்கள். மித்ரா அவர்களுக்கு என்ன பிடிக்குமோ அதையே செய்து கொடுத்தாள். மதியழகனும் நல்லா சமைச்சு போடு, என அவள் கேட்டதை எல்லம் வாங்கி வந்து கொடுத்தான்.*

*அவர்களுக்குப் பிடித்த பிரைட் ரைஸ், சிக்கென் ஃபிரை, நூடல்ஸ் எல்லாம் செய்து கொடுத்த மித்ரா அத்தையை அவர்களுக்கு மிகவும் பிடித்து விட்டது.*

*“எங்க அம்மாவுக்கு இதெல்லாம் செய்யவே தெரியாது அத்தை. எப்பவும் பிரியாணி பண்ணுவாங்க, இல்லைனா குழம்பு வைப்பாங்க. நீங்க எங்க வீட்டுக்கு வந்திடுங்க அத்தை.” என அழைத்தனர்.*

https://t.me/tamilpdfebooks

*"உங்க மாமா விட்டா வரேன்." என்றாள் மித்ரா மதியழகனை பார்த்துக் கொண்டு.*

*"டேய் ! ஏன் டா என் மடியில கை வைக்கிறீங்க? ஞாயிற்றுக்கிழமை இங்க வந்திடுங்க. வந்து உங்களுக்குப் பிடிச்சது சாப்பிட்டு போங்க." என்றான் மதியழகன்.*

*"சரி மாமா…" எனச் சொல்லிவிட்டுப் பிள்ளைகள் விளையாட சென்றுவிட்டனர்.*

*எழிலரசியும், "மித்ரா எல்லாமே நல்லா பண்ற. உனக்கு நல்ல கைப்பக்குவம் இருக்கு." என்றாள்.*

*"ஆமாம் நீங்க சொல்றது சரிதான்." என ரேவதி ஒத்துக் கொள்ளவும் எல்லோருக்குமே ஆச்சர்யம். இவ இவ்வளவு நல்லவ கிடையாதே எனக் கருணா பார்த்து இருந்தான்.*

*"அவளுக்கு என்ன இப்ப குழந்தையா குட்டியா… அதெல்லாம் வந்த பிறகு தானே தெரியும். இன்னைக்குப் புதுசா வந்த பவுசியில பண்றா, எங்களுக்கு*

https://t.me/tamilpdfebooks

அப்படியா? பசங்களை மேய்க்கவே நேரம் சரியா இருக்கு. அவ சும்மா இருக்கிறதுக்குச் செய்ய வேண்டியது தான்." என்றாள்.

கதிரேசனுக்கு மிகவும் கோபம் வந்தது. இப்போ நீங்க பேசுறீங்களா இல்லை நான் பேசவா என்பது போல, அவன் அம்மாவைப் ஒரு பார்வை பார்த்து வைக்க, நீலவேணி, "நீ எதுக்கும் எதுக்கும் முடிச்சு போடுற?" என்றார்.

"குழந்தை இல்லைனா மட்டும், நீ அப்படியே கிளுகிளுன்னு வேலை பார்த்திடுவ? ஆமாம் நீ இதுல எதுக்கு உன்னோட அண்ணியைச் சேர்க்கிற?" என நக்கலாகக் கேட்டான் கருணா.

"இரு அண்ணா, அண்ணி சொல்றது சரிதான். அவங்களுக்கு உடனே குழந்தை வந்ததுனால நமக்கு அவங்களோட திறமை தெரியாம போய்டுச்சு." என்றவன்,

"இப்ப என்ன அண்ணி? மித்ரா மாசமானா நீங்க சமைங்க, உங்களுக்குத்தான் பசங்க பெரிசாகிட்டாங்களே... நீங்க பண்ணாலும் நாங்க சாப்பிடுவோம் அண்ணி." என மதியழகன் புன்னகைக்க, அதுவரை முகம் வாடிப் போய் இருந்த மித்ராவின் முகம் மலர, தங்கையின் கையை அழுத்திவிட்டாள் சுபத்ரா.

"எங்க நமக்குத் தோசை ஊத்த, சப்பாத்தி சுடவே வலிக்கும், அதுக்குத்தான் சோத்தையே போடுறது." கருணா நக்கலடிக்க, அறையில் இருந்து இவர்கள்

https://t.me/tamilpdfebooks

*பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த துரை, "எல்லோரும் பேசாம போய்ப் படுங்க." என்றார் அதட்டலாக.*

*துரையின் குரல் கேட்டதும், எல்லோரும் நொடியில் இடத்தைக் காலி செய்தனர்.*

*தங்கள் பகுதிக்கு வந்ததும், ரேவதி கருணாவிடம் சண்டை பிடித்தாள். "மதி அவன் பொண்டாட்டியை தலையில தூக்கி வச்சிட்டு ஆடுறான், ஆனா நீங்க என்னை எப்படிப் பேசுறீங்க?"*

*"எழில் மித்ராவை புகழ்ந்தா உனக்கு ஏன் வலிக்குது. நீ செய்யலைன்னு யாரும் சொன்னாங்களா? அது சின்னப் பொண்ணு ஏதோ ஆர்வமா பண்ணுது. அதைப் பாராட்டினா உனக்கு என்ன?"*

*"உனக்கும் ஆர்வம் இருந்தா நீயும் பண்ணு. நீயும் மாசம் ஆன நாள்ல இருந்து, எனக்கு முடியலை முடியலைன்னுதான் சொல்லிட்டு இருக்க."*

*"நீ போடுற பழையதை சாப்பிட்டு, நான் பேசமா தான் இருந்தேன். உன்னை எதாவது சொன்னேன்?"*

https://t.me/tamilpdfebooks

*“இப்ப நீயா வந்துதான் வாயை கொடுத்து மாட்டிகிட்ட, மதி, சொல்லிட்டான் இல்ல... நீங்களும் பண்ணுங்கன்னு.”*

*“அவன் சொன்னா நான் பண்ணனுமா?”*

*“முடியாது இல்ல, அப்ப வாயை மூடிட்டு இரு. எதுக்கு அவன் பொண்டாட்டியை வம்பு இழுக்கிற?” என்ற கருணா கட்டிலில் திரும்பி படுத்து விட... ரேவதி அவனையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.*

*ரேவதிக்கு ரொம்ப நேரம் அடுப்படியில் நின்று சமைப்பது எல்லாம் ஆகாது. சீக்கிரம் வேலை முடித்து விட்டு வந்து விட வேண்டும்.*

*எல்லோருக்கும் தனி ஆளாகச் செய்யச் சுபத்ராவல் முடியாது. அதனால் அவளால் முடிந்த அன்று டிபன், முடியாத அன்று சாதம் என வைத்துக் கொண்டு இருந்தாள்.*

*ரேவதிக்கு எப்படிச் சமையலில் ஆர்வம் இல்லையோ, அதே போல் சாப்பிடுவதிலும் ஆர்வம் இல்லை. எதோ கடமைக்கு என்றுதான் சாப்பிடுவாள். அதனால் ஆளும் ஒல்லியாகத்தான் இருப்பாள்.*

https://t.me/tamilpdfebooks

கணவருக்கு என்ன பிடிக்கும்? அதைக் கேட்டுச் செய்வோம் என்று எல்லாம் நினைக்க மாட்டாள். என்னால இதுதான் முடியும், நீ சாப்பிட்டுதான் ஆக வேண்டும் என்பாள். அவளோடு மல்லு கட்டுவதற்கு, வீட்டில் அவள் போடுவதைச் சாப்பிட்டுவிட்டு, வெளியில் அவனுக்குப் பிடித்ததை வாங்கிக் கருணா சாப்பிட்டுக் கொள்வான்.

ரேவதிக்குக் கணவனிடம் எப்படி அன்பாகப் பேச வேண்டும் என்றும் தெரியாது. இவள் எதாவது வெடுக்கென்று பேசிவைக்க, வீட்டிற்கு வரவே கருணாவுக்கு எரிச்சலாக இருக்கும். மொத்தத்தில் ரேவதி அவளும் வாழ்க்கையை அனுபவிக்காமல், கருணாவையும் அனுபவிக்க விடாமல் செய்து கொண்டிருந்தாள்.

இரவில் கணவன் தன்னை நெருங்கும் போதும், ஒரு தடவை குதர்க்கமாக அவள் பேசி வைக்க, “இதுக்கும் என்னை வெளியில போக வச்சிடாதா. அதுக்கு எனக்கு ரொம்ப நேரம் ஆகாது. எங்க அப்பா ஒருத்தருக்காகதான், இல்லைனா உன்னை எப்பவோ தூக்கி போட்டுட்டு போயிருப்பேன்.” என்றான்.

அன்றிலிருந்து கணவன் நெருங்கினால் மட்டும், அவள் வாயே திறப்பதில்லை.

https://t.me/tamilpdfebooks

அங்கே மித்ராவோ மதியழகனின் சிண்டை பிடித்து ஆய்ந்துக் கொண்டு இருந்தாள்.

“நான் இந்த வீட்ல இனி ஒன்னும் பண்ணலைப்பா. எனக்கு எதுக்கு இந்தப் பேச்சு வாங்கனும்ன்னு தலையெழுத்தா என்ன?”

“நான் பாட்டுக்கு படிச்சிட்டு இருந்தேன், எங்க அக்கா படுபாவியும், உங்க அண்ணனும் சேர்ந்து பண்ண வேலை. என்னை இங்க கொண்டு வந்து தள்ளினாங்க.”

“நான் யார் கிட்டயும் பேர் வாங்க எல்லாம் செய்யலை. எனக்குத் தோனுச்சு நான் செஞ்சேன்.”

“உங்க அண்ணி குழந்தை இருக்கிறதுனால செய்யலையா... முதல்ல அந்தக் குழந்தைக்கு ஒழுங்கா சோறு கொடுக்கச் சொல்லுங்க. எப்பவும் ஆறி போனதுதான் கொடுக்கிறாங்க.”

இப்படியெல்லாம் சொல்லிக் கொண்டு வந்தவள், கடைசியில் “எனக்குக் குழந்தை இல்லைன்னு சொல்லிட்டாங்க இல்ல, உங்க அண்ணி.” என அழுதே விட....

https://t.me/tamilpdfebooks

*அவளை இறுக அணைத்த மதியழகன், "ஹேற லூசு, அவங்க அப்படிச் சொல்லலை... குழந்தை வந்தா நீ வேலை செய்ய மாட்டேன்னு தான் சொன்னாங்க."*

*"ஏன் அப்போ, நான் இப்பவே எதுவும் செய்ய மாட்டேன் போ..."*

*"அதுக்குதான் அவங்க சொல்றாங்க. உன்னைச் சீண்டி விட்டு உன்னையும் அவங்க மாதிரியே ஆக்க பார்கிறாங்க. உனக்கு அது புரியலையா டி?"*

*"நீ தப்பு செய்யலை இல்லை. அப்ப ஏன் நீ அவங்க வார்த்தைக்கு மதிப்பு கொடுக்கிற?"*

*"இது நம்ம வாழ்க்கை, நமக்குப் பிடிச்ச மாதிரிதான் நாம வாழனும். அவங்களுக்காக நீ உன்னை மாத்திப்பியா?"*

*"எங்க அப்பா அம்மா எதுவும் சொன்னா நீ வருத்தப்படலாம். அவங்க உன்னை எதுவும் சொன்னாங்களா?"*

*மதியழகன் கேட்க கேட்க மித்ரா யோசிக்க ஆரம்பித்தாள். அதுதானே நான் ஏன் யாருக்காகவோ மாறணும்.*

https://t.me/tamilpdfebooks

இருடி ரேவதி சொக்கா... உன்னை மாத்தி காட்றேன் டி என் அக்கா என நினைத்துக் கொண்டாள்.

# அத்தியாயம் 12

மறுநாள் ரேவதி முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டே இருந்தாள். எழிலரசியோடும் சரியாகப் பேசவில்லை. “நான்தான் வாயை வச்சிட்டு சும்மா இல்லாம பிரச்சனையை இழுத்து விட்டுடேனோ.” என வருந்தியபடி எழிலரசி கிளம்பி சென்றாள்.

அன்று மித்ராவும் ரேவதியும் பாத்திரம் கழுவ வேண்டிய நேரம், “நீ பாதிக் கழுவி வச்சிட்டு போ, நான் மீதியை அப்புறம் கழுவிக்கிறேன்.” என்றாள். அதே போல மித்ரா பாதிப் பாத்திரம் விலக்கிவிட்டு சென்றாள்.

ரேவதி மேல் வேலைகள் செய்வாள்தான். ஆனால் சமையலும் மேலோட்டமாகவே பார்த்து விட்டு போய் விடுவாள்.

இரவு மித்ராவும் சுபத்ராவும் பாத்திரம் தேய்த்தனர். “நீதான் ரேவதி அக்காவை கெடுத்து வச்சிருக்க.” எனத் தன் உடன் பிறந்தவளையே மித்ரா குற்றம் சாட்டினாள்.

https://t.me/tamilpdfebooks

*“நான் என்ன டி பண்ணேன்?” சுபத்ரா அப்பாவியாகக் கேட்க,*

*“எல்லாத்தையும் நீயே இழுத்து போட்டு செஞ்சா, அவங்களுக்கு எப்படி நாம பண்ணனும்ன்னு தோணும்?”*

*“நான் தெரியாமதான் கேட்கிறேன், நீ இந்த வீட்டு மருமகளா? இல்லை வேலைக்காரியா? உன்னை அப்பாவும் அம்மாவும் இந்த வீட்டுக்கு சும்மா அனுப்பினாங்களா? இரு அண்ணன் கிட்டயே சொல்றேன்.” மித்ரா கோபமாகப் பொரிய, சுபத்ரா பெருமூச்சு விட்டாள்.*

*“நீ இந்த வீட்டுக்கு வர்றதுக்கு முன்னாடி, நான் நிறைய நாள் அவ பண்ணுவான்னு பார்த்தா, அவ பண்ணவே மாட்டா… அதுக்கு அப்புறம் நான்தான் அவசரமா பண்ணனும். அது எதுக்கு? அதுதான் நானே பண்ணிடுவேன்.”*

*“நீ இவ்வளவு நல்லவளா இருந்தா, உனக்குச் சிலையா வைக்கப்போறாங்க. இளிச்சவாயன்னு பட்டம்தான் கொடுக்கப் போறாங்க.”*

*“என்ன டி செய்யறது?”*

https://t.me/tamilpdfebooks

*“இப்படியே விடக் கூடாது அக்கா, கருணா அத்தானுக்காகவாவது நாம எதாவது செய்யணும்.”*

*“மாமாவுக்குத் தெரிஞ்சா பிரச்சனை ஆகும் மித்ரா.”*

*“விடு அதை நான் பார்த்துகிறேன்.” என்ற மித்ராவுக்கு, அடுத்த இரண்டாவது நாளே அதற்கான வாய்ப்புக் கிடைத்தது.*

*நீலவேணியின் தம்பி வீட்டு திருமணதிற்குத் துரையும், நீலவேணியும் கிளம்பி சென்றனர். கல்யாணம் சென்னையில் என்பதால், எல்லோரும் செல்லவில்லை. பிறகு இங்கே நடக்கும் வரவேற்பில் அனைவரும் கலந்து கொள்வதாக இருந்தது. முன்தினம் காலையே துரையும் நீலவேணியும் கிளம்பி சென்றனர்.*

*“இன்னைக்கு நைட் வெளியே சாப்டிட்டு அப்படியே படத்துக்குப் போயிட்டு வருவோமா?” மதிய உணவுக்கு வந்த மதியழகன் கேட்க, எல்லோர் முகத்திலும் விருப்பம் தெரிந்தது.*

https://t.me/tamilpdfebooks

*“அப்பாவுக்குத் தெரிஞ்சிட்டா.” கருணா கேட்க,*

*“எதுக்கு டா வம்பு? அப்பாகிட்ட சொல்லிட்டே போவோம்.” என்றான் கதிரேசன்.*

*“நாம போனா அப்பா ஒன்னும் சொல்ல மாட்டார். ஆனா இவங்களைக் கூடிட்டு போக ஒத்துப்பாரா தெரியலையே?” மதியழகன் யோசிக்க,*

*“ஹலோ, நாங்க எல்லாம் உங்க பொண்டாட்டிங்க தான... எதோ கேர்ள் பிரான்ட் கூடப் போற மாதிரி பில்ட் அப் கொடுக்கிறீங்க.” என்றாள் மித்ரா.*

*“இங்க பாரு கடை மூடிட்டு போனா நைட் ஷோக்கு தான் போக முடியும். திரும்ப வர ஒரு மணி ஆகும். நைட் நேரம் எதுக்குப் பொம்பளைங்களைக் கூடிட்டு போறீங்கன்னு சொல்வார்.”*

*“நீங்கதான் ஆசை காட்டினீங்க.”*

*“சரி இப்படி வேணா செய்வோம். இன்னைக்கு ஹோட்டல் மட்டும் போவோம். இன்னொரு நாளைக்குப் படத்துக்குப் போகலாம்.” என்றான் கதிரேசன். அதற்கு*

https://t.me/tamilpdfebooks

எல்லோரும் ஒத்துக்கொள்ள, சுபத்ராவும், ரேவதியும் புடவையில் வர, மித்ரா மட்டும் சுடிதாரில் வந்தாள்.

அவர்கள் ஊருக்கு பக்கத்து டவுன்ணில் இருந்த அசைவ ஹோட்டலுக்குச் சென்று, நன்றாக ஒரு கட்டு கட்டிவிட்டு வந்தனர். ரேவதி வெளியிடங்களுக்கு வந்தால்.... நன்றாகத்தான் சாப்பிடுகிறாள் என்பதை மித்ரா கவனித்தாள். வீட்டில் செய்ய சோம்பேறித்தனம் வேறு ஒன்றுமில்லை.

இரவு ஒன்பது மணிக்குச் சென்றவர்கள், திரும்ப வரும் போது பதினொான்றுக்கு மேல் ஆகிவிட்டது. ரேவதி காரில் இருந்து இறங்கி அப்படியே அவர்கள் பகுதிக்கு சென்று விட, சுபத்ராவிடம் மித்ரா, "அக்கா, நீ காலையில எதுவும் பண்ணாத. இறங்கியே வராத." என்றாள்.

என்னதான் நடக்கிறது பார்ப்போமே என நினைத்த சுபத்ராவும் சரி என்றாள்.

மறுநாள் காலை தாமதமாக ரேவதி எழுந்து வந்து பார்த்த போது, காலை சமையலுக்காக எந்த வேலையும் நடந்தது போல இல்லை. பால் மட்டும் காய்ச்சி இருந்தது. மித்ரா கோலம் போட்டுவிட்டு பாலைக் காய்ச்சி விட்டு சென்றிருந்தாள். ஆண்கள் கடை திறக்க சென்றிருந்தனர்.

https://t.me/tamilpdfebooks

*ரேவதி தன் பிள்ளைகளுக்குப் பாலும், தனக்குக் காபி கலந்து எடுத்துக் கொண்டு சென்றாள். திரும்ப அவள் குளித்து விட்டு வந்து பார்த்த போதும், யாரும் சமையல் அறையில் இல்லை.*

*காலை உணவுக்கு ஆண்கள் மூவரும் வந்துவிட்டனர். ஆனால் காலை உணவு தயாராக இல்லை. தோசை மாவும் இல்லை. இருந்தால், தோசையாவது ஊற்றலாம் என ரேவதி நினைத்தாள்.*

*எப்படியும் சுபத்ரா அக்கா வந்து செய்வார்கள், இல்லயென்றால் மித்ரா செய்வாள் என நம்பிக்கையாக இருந்தாள். இன்று இருவரும் வரவில்லை.*

*“உங்க அண்ணி உடம்பு முடியலைன்னு படுத்திருக்கா.” என்ற கதிரேசன் சுபத்ராவை பார்க்கச் சென்றான். மதியழகன் மித்ராவை தேடி சென்றான். மித்ரா சேரில் கால் நீட்டி அமர்ந்து டிவி பார்த்துக் கொண்டே, வாழைப்பழம் சாப்பிட்டுக் கொண்டு இருந்தாள்*

.

*“ஹே… சண்ட கோழி, என்ன இங்க தனியா உட்கார்ந்து அமுக்கிட்டு இருக்க.” என்றபடி மதியழகன் வந்தான். அவன் இப்போது எல்லாம் சண்ட கோழி என்றுதான் அவளைச் செல்லமாக அழைக்கிறான். (சண்ட கோழி காரணப்பெயர் அல்ல செல்லப் பெயர்)*

https://t.me/tamilpdfebooks

*“காலைலைக்கு ஒன்னும் பண்ணலை?” மதியழகன் கேட்க,*

*“இன்னைக்குத்தான் நான் ப்ரீயா இருக்கேன். அது கூட உங்களுக்குப் பொறுக்காதா?” என்றாள் மித்ரா.*

*“என்ன டி ஒரு தினுசா பேசுற? ஒரு நாள் எங்க அப்பா அம்மா இல்லை, அதுக்கே எங்களுக்குச் சாப்பாடு போட மாட்றீங்க.”*

*“ஏன் உங்க அண்ணிங்க என்ன பண்றாங்க?” எனத் தெரியாதது போலக் கேட்டுக்கொண்டே மித்ரா எழுந்து பெரிய வீட்டிற்குச் சென்றாள்.*

*மித்ராவை பார்த்ததும் சுபத்ரா, “ஏன் டி ஒரு நாள் நான் கொஞ்சம் தூங்கிட்டேன். ஏன் நீ டிபன் பண்ணக் கூடாதா? என்றாள்.*

*“நீ தானக்கா எப்பவும் பண்ணுவ… அதனால நீ பண்ணுவேன்னு நினைச்சேன்.”*

*“எப்பவும் நானேதான் பண்ணனுமா?”*

https://t.me/tamilpdfebooks

*“இங்க பாரு என்னைக் கேள்வி கேட்கிற வேலை எல்லாம் வச்சுக்காத. நீயும் இந்த வீட்டு மருமகள், நானும் இந்த வீட்டு மருமகள். உன் தங்கச்சின்னு நீ என்னை என்ன வேணா பேசுவியா? ஏன் ரேவதி அக்காவை இப்படிக் கேட்க வேண்டியது தான.”*

*என்ன டா இதுங்க ரெண்டும் சண்டை போட்டுகுதுங்க என அண்ணன் தம்பி மூவரும் புரியாமல் பார்த்தனர். அக்காவும் தங்கையும் சண்டை போடுவதைப் பார்த்து ரேவதிக்கு மகிழ்ச்சி.*

*“மித்ரா…” என்ற மதியழகன் குரலுக்கோ, “சுபத்ரா நீயாவது பேசாம இரேன்.” என்ற கதிரேசனின் குரலுக்கோ, அங்கே மதிப்பே இல்லை.*

*“எனக்குத் தெரியும் யாரை கேட்கணும்ன்னு, நீ வாயை மூடு.” என்றாள் சுபத்ரா.*

*“இனிமே இந்த அக்கா தங்கை எல்லாம் வேணாம். நீ என் வீட்டுக்காரரோட அண்ணி, அப்படித்தான் இனி உன்னைப் பார்ப்பேன்.”*

*“அப்படியா சரி, அப்பவும் நான்தானே மூத்தவ, நான் சொல்றதை தான் நீ கேட்கணும்.” என்றாள் சுபத்ரா.*

https://t.me/tamilpdfebooks

“அதெல்லாம் என்னால முடியாது. இனி அவங்கவங்க வேலையைப் பிரிச்சிக்கலாம்.” என்ற மித்ரா, “ஒரு நாள் காலையில நீ டிபன் செஞ்சா, அடுத்த நாள் ரேவதி அக்கா செய்யட்டும் அதுக்கு அடுத்த நாள் நான் செய்றேன். அதே போல ராத்திரியும். மதியம் மட்டும் எப்பவும் போல சேர்ந்து செய்வோம்.”

“நீயே எல்லா வேலையும் செய்றேன்னு, நீயும் பெருமை பேசிக்க வேண்டாம். நாங்க செய்யலைன்னு எங்களைக் குறையும் சொல்ல வேண்டாம்.” என்றாள் மித்ரா.

எல்லோருக்கும் புரிந்து விட்டது. இது அக்காள் தங்கை சண்டை இல்லை. ரேவதிக்கு வைக்கும் ஆப்பு என்று.

இத்தனை நாள் கும்பலில் பஜனை பாட்டு பாடிக் கொண்டிருந்த ரேவதியை தனிப் பாட்டு பாட சொன்னால்... அவளின் நிலை.

“சரி இன்னைக்குச் சொன்னதுதான், பேச்சு மாத்தின அவ்வளவுதான்.” எனச் சென்ற சுபத்ரா, வேகமாகக் கோதுமை மாவு , ரவை கலந்து ஊறவிட்டு, ஒரு பக்கம் சட்னி அரைத்தாள்.

https://t.me/tamilpdfebooks

*அவள் இரண்டு அடுப்பிலும் தோசை கல்லை காய வைத்து மட மடவென்று தோசை ஊற்ற, மித்ரா எடுத்து சென்று எல்லோருக்கும் பரிமாறினாள். ஆண்கள் சாப்பிட்டு கடைக்குக் கிளம்ப, பிறகு விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளை அழைத்து, அவர்களுக்கும் கொடுத்து இவர்களும் சாப்பிட்டனர்.*

*மதியம் மூவரும் சேர்ந்து செய்தனர். இரவு மித்ராவின் முறை. அவள் சப்பாத்தியும் குருமாவும் செய்தாள். அடுத்த நாள் காலை என்ன செய்வது என ரேவதிக்கு இப்போதே யோசனை. எப்போதும் சுபத்ரா தான் செய்வாள், இவள் வந்து சட்னி அரைத்து விட்டு சென்று விடுவாள்.*

*மறுநாள் காலை திருமணதிற்குச் சென்றுவிட்டு வந்த நீலவேணிக்கு நடு மருமகள் சமையல் அறையில் நின்று சமைத்து கொண்டிருப்பதைப் பார்த்ததும் ஆச்சர்யம்.*

*முன் தினம் மாவு அரைத்து இருந்ததால்.. இட்லி ஊற்றி சட்னி வைத்திருந்தாள். மித்ரா என்றால் இரண்டு சட்னி செய்வாள் என்பதால்….. இவளும் இரண்டு சட்னி செய்து இருந்தாள்.*

*மற்றவருக்குச் செய்யும் போது கணவருக்குக் கொடுக்க மாட்டாளா என்ன? ஆவி பறக்கும் இட்லியை தட்டில் வைத்துக் கருணாவிடம் கொடுக்க, அவனுக்கு அவ்வளவு மகிழ்ச்சி.*

https://t.me/tamilpdfebooks

*“சட்னி சூப்பர் அண்ணி.” என்ற மதியழகன், “மித்ரா அண்ணி கிட்ட கத்துக்கோ.” என வேண்டுமென்றே மனைவியை வம்பு இழுக்க...*

*“வா டா வா... அப்புறம் வருவ இல்லை.” என்பது போல மித்ரா பார்வையாலையே அவனை மிரட்ட, “போடி சண்ட கோழி.” என அவனும் உதடசைத்தான்.*

பகலில் மனைவி தங்கள் வீட்டில் இருக்கும் நேரத்தை அறிந்து வந்த கருணா, அவளிடம் அப்போது சூடாகப் போட்டிருந்த சீரணியை நீட்ட, ‘என்ன டா இது? இவர் இப்படி எல்லாம் பண்றார். மழையே வராத நாம ஊர்ல கூட மழை வந்திடுமோ?’ என ரேவதி நினைத்து ஆச்சர்யபட்டு போனாள்.

அது அப்படி இல்லை. இவள் நன்றாக நடந்து கொள்ளவும், நாமும் அவளுக்கு எதாவது செய்ய வேண்டும் என்ற ஆசையில் கருணாவும் இறங்கி வந்தான். அப்போது இன்னும் நன்றாகச் செய்ய வேண்டும் என ஆசை வரும் அல்லவா... ரேவதிக்கும் வந்தது.

முன்னால் கூட்டத்தில் பஜனைப் பாடிக் கொண்டிருந்தனர். இப்போது அப்படி இல்லை அல்லவா..இன்று யார் சமையல் என நன்றாகத் தெரியும். உணவு பதார்த்தங்களும் எது நன்றாக இருக்கிறது என ஆண்களால் அலசி ஆராயபட்டது. அது பெண்கள் மூவருக்குள்ளும் ஒரு போட்டி எண்ணத்தை உருவாக்கியது.

https://t.me/tamilpdfebooks

தங்களுக்கே தெரியாமல் பெண்களுக்குள், அப்படி ஒரு போட்டி எண்ணம் உருவாக ஆண்களும் காரணமாகினர்.

இன்னைக்கு நீ பண்ணியா, நாளைக்கு நான் இதை விட நல்லா பண்றேன் பாரு எனப் பெண்கள் மூவரும் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு செய்தனர்.

முதலில் எல்லாம் மூவரும் பேசிக்கொண்டு வேலை செய்வார்கள். இப்போது அப்படி இல்லை. பெண்கள் மூவருக்குள்ளும் இருந்த ஒற்றுமை குறைந்து விட்டது.

இதை வீட்டின் மூத்த உறுப்பினர்கள் கவனித்துக் கொண்டே இருந்தனர், இன்று போட்டியில் ஆரம்பிக்கிறது, நாளைக்குப் பொறாமை வரும், அடுத்து என்ன பிரிவு தான். இவர்களை இப்படியே விட்டால், சரிப்பட மாட்டார்கள் என உணர்ந்த துரை, அன்று இரவு உணவு முடிந்ததும், எல்லோரையும் ஹாலுக்கு அழைத்துப் பேசினார்.

“எங்க காலத்து வரைதான் கூட்டுக் குடும்பம் எல்லாம் ஒத்து வரும்ன்னு எனக்கும் தெரியும். அதுதான் அவங்க அவங்களுக்குத் தனியா அடுப்படியோடவே வீடு கட்டி கொடுத்திருக்கேன். சொத்தும் அவங்கவங்க பேர்ல தனித் தனியாதான் வாங்கி போட்டு இருக்கேன். நாளைக்கு நீங்க எதுக்கும் ஒருத்தரோட ஒருத்தர் அடிச்சிக்கக் கூடாது.”

https://t.me/tamilpdfebooks

*“இன்னைக்குப் போட்டி போட்டு வேலை செய்றீங்க. ஆனா அதைச் சந்தோஷமா சேர்ந்து பேசி சிரிச்சு செய்றீங்களா?”*

*துரை இப்படிச் சொன்னதும், பெண்கள் மூவருக்கும் தெரிந்துவிட்டது, தங்களைத்தான் மாமனார் சொல்கிறார் என்று. மூவர் முகமும் கருத்து விட்டது.*

*“நான் வீட்டுக்குள்ள வரும்போது, இன்னைக்கு மருமகள்கள் என்ன சமையல் செஞ்சிருப்பாங்கன்னு வரமாட்டேன். என் மருமகள்கள் சேர்ந்து இருக்காங்கங்கலான்னு தான் பார்த்திட்டு வருவேன்.”*

*“இன்னைக்குப் போட்டியில ஆரம்பிக்கும், நாளைக்கு அது எதுல போய் முடியுமோ? நாளைக்குச் சண்டை போட்டு பிரியறதை விட.. இப்பவே தனியா போகணும்ன்னு நினைக்கிறவங்க, தனியா போயிடுங்க. விலகி இருந்தாலும், ஒருத்தரோட முகம் கொடுத்து பேசி சந்தோஷமா இருப்பீங்க.” என்றார்.*

*அவர் பேசி முடித்ததும், அங்கே அப்படி ஒரு கனத்த மௌனம். அப்பா பேசியதை கேட்ட மகன்கள் முகத்திலும் இறுக்கம். நீலவேணி எல்லாவற்றையும் அமைதியாகப் பார்த்துக் கொண்டு இருந்தார். அவர் என்றுமே எந்த ஒரு மருமகளை உயர்த்தியும், தாழ்த்தியும் பேச மாட்டார்.*

https://t.me/tamilpdfebooks

துரை அறைக்குள் சென்றதும், யாரும் யாரோடும் பேசாமல் கலைந்து சென்றனர்.

கதிரேசனுக்குத் தன் மனைவியைப் பற்றித் தெரியும். அவள் என்றுமே தனியாகப் போக வேண்டும் என நினைக்க மாட்டாள். ஒரு வேளை தம்பிகள் சென்றாலும், அவன் எப்போதும் பெற்றோரோடு சேர்ந்து இருப்பது என்பது, அவன் எப்போதோ எடுத்த முடிவு. இப்போதும் அதில் மாற்று கருத்து இல்லை.

தங்கள் பகுதிக்கு வந்த கருணா ரேவதியிடம், "இங்கப் பாரு, நீ இன்னைக்கு எதோ அவங்களோட போட்டி போடனுமேன்னு செய்ற.. ஆனா எப்பவும் செய்வியா தெரியாது."

"பேசாம எங்க அப்பா கொடுக்கிற ஆஃபர் எடுத்திட்டு தனியா வந்திடு. நீ என்னைத்தை செஞ்சு போட்டாலும், எனக்குப் பிரச்சனை இல்லை. எங்க அப்பா சொல்ற மாதிரி சண்டையாவது வராமல் இருக்கும்." என்றான்.

"நான் தனியா வந்திட்டா, அவங்க அக்கா தங்கச்சி இல்ல சேர்ந்துப்பாங்க. நான் வர மாட்டேன்." என்றாள் ரேவதி.

https://t.me/tamilpdfebooks

*அங்கே மதியழகன் மித்ராவை முறைத்துக் கொண்டே இருந்தான்.*

*“இதெல்லாம் நீ ஆரம்பிச்சு வச்சது தான....” அவன் சொல்ல, மித்ரா முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.*

*“ஹே சண்ட கோழி, இப்படியே பண்ணிட்டு இருந்தன்னு வை, அந்த வெடுக்கு வெடுக்குன்னு ஆடுற கழுத்தை அப்படியே திருகி போட்டுடுவேன்.” என்றதற்கு, மித்ரா பதில் சொல்லாமல் முறைத்தாள்.*

*“நீ தனியாப் போகணும்ன்னு சொல்லுவ? மதியழகன் மிரட்டலாகக் கேட்க,*

*“நான் இப்ப எதாவது சொன்னேனா?” மித்ரா திருப்பிக் கேட்க,*

*“இல்லை நீ சொல்லி தான் பாரேன்.” என்றான்.*

*மித்ரா எதுவும் பேசாமல் படுத்துக் கொண்டாள். அவள் பேசாமல் படுத்ததும், மதியழகனுக்கே ஒருமாதிரி ஆகிவிட்டது. மித்ராவுக்கு அந்த மாதிரி எண்ணம் இல்லை என அவனுக்கும் தெரியும்.*

https://t.me/tamilpdfebooks

*“ஹே இங்கப் பாருடி என்னை.” என அவளைத் தன் பக்கம் திருப்பியவன், அவள் கண்ணீரை பார்த்ததும், பதறி போய் விட்டான்.*

*“ஹே... மித்ரா சாரி டி, நான் எதோ கோபத்தில பேசிட்டேன்.”*

*“நீங்களே இப்படிச் சொல்றீங்க, அப்ப மத்தவங்களும் அப்படித்தானே நினைப்பாங்க. நான் ரேவதி அக்கா மாறணும்ன்னு தான் நினைச்சேன். தனியா போகணும்ன்னு எல்லாம் ஒருநாளும் நினைச்சது இல்லை.” என்றாள் அழுகையின் இடையே...*

*“தப்பு எல்லார் மேலையும்தான். ஏன் எங்க மேலையும் தான். உங்களுக்குள்ள போட்டி உருவாக்கிவிட்டது நாங்கதான்.”*

*“நடந்தது நடந்திடுச்சு, இனி பார்த்து இருந்துப்போம்.” என்றான். ஆனால் எல்லோருக்கும் ஒரு பயம் இருந்தது. எங்கே ரேவதி தனியாகச் சென்று விடுவாளோ என...அன்று இரவு யாராலும் சரியாகவே உறங்க முடியவில்லை.*

*காலையில் சீக்கிரமே எழுந்து குளித்து அடித்துப் பிடித்து மித்ரா பெரிய வீட்டிற்குச் சென்றால்.... இவளைப் போலவே சுபத்ராவும் ரேவதியும் வந்து நின்றனர்.*

https://t.me/tamilpdfebooks

*“என்ன டிபன் செய்யலாம் ரேவதி அக்கா?” மித்ராவே ஆரம்பிக்க,*

*“மாவு இல்லை. பூரி செய்வோம்.” என்றாள்.*

*சுபத்ரா மாவு பிசைய, மித்ரா தேவையானது நறுக்கி கொடுக்க, ரேவதி அடுப்பில் நின்று சமைத்தாள். அதைப் பார்த்த மற்றவர்களுக்குச் சந்தோஷம்.*

*மூவரும் சேர்ந்து செய்தாலும், கொஞ்சம் இறுக்கமாகவே இருந்தனர். மதிய சமையலுக்கு வழக்கம் போல் காய்கறிகள் வர…*

*“இன்னைக்கு என்ன சமையலோ?” மித்ரா சொல்ல,*

*“அந்த லவ் லெட்டரை எடுத்து படி, தெரியும்.” என ரேவதி சொன்னதும், மற்ற இருவருக்கும் அப்படி ஒரு சிரிப்பு. அவர்களோடு ரேவதியும் இணைந்து கொள்ள… மூவரின் சிரிப்பு சத்தமும் வீட்டை நிறைக்க, இந்தப் பக்கம் ஒரு கண்ணை வைத்திருந்த நீலவேணிக்கும் சந்தோஷம்.*

https://t.me/tamilpdfebooks

# அத்தியாயம் 13

அன்று ரேவதிக்குக் காலையில் இருந்தே ஒரு மாதிரி வயிற்று வலி இருந்து கொண்டே இருந்தது. ஆனால் வீட்டில் யாரிடம் சொல்லாமல் வேலைப் பார்த்துக் கொண்டிருந்தாள். பிள்ளைகள் பள்ளியில் இருந்து வந்து, மதிய உணவு சாப்பிட்டு சென்றிருந்தனர்.

சமையல் அறையில் நின்ற ரேவதி எதற்காகவோ திரும்பி பார்க்க, மித்ரா பார்வையில் அப்படி ஒரு அதிர்ச்சி, இவள் அப்படி எதைப் பார்க்கிறாள் எனக் குனிந்து பார்த்தவள், தன் காலுக்கு இடையே வழியும் உதிரத்தை அப்போதுதான் பார்த்தாள்.

அவளுக்கு இத்தனைக்கும் மாத விடாயும் இல்லை. சொல்லப்போனால் அவளுக்கு மாத விடாய் வந்தும் நாட்கள் ஆகிவிட்டது.

ரேவதியின் காலுக்கு அடியில் தேங்கி நின்ற ரத்தத்தைப் பார்த்து மித்ராவுக்கு அதிர்ச்சியில் பேச்சே வரவில்லை. கஷ்ட்டப்பட்டு, “அக்கா…” என அவள் கத்தி அழைக்க, பின்கட்டில் நின்ற சுபத்ரா தலை தெறிக்க ஓடி வந்தாள்.

https://t.me/tamilpdfebooks

*"என்ன டி?"*

*"அங்க பாரேன்." மித்ரா காட்ட, சுபத்ராவுக்குப் பார்த்ததும் புரிந்து விட்டது.*

*"வா ரேவதி..." என்றவள், "மித்ரா கருணாவுக்குப் போன் போட்டு வர சொல்லு, அப்படியே மதியை கார் எடுத்திட்டு வர சொல்லு." என்றவள், பயந்து போயிருந்த ரேவதியிடம், "உனக்குப் பீரியட்ஸ் வந்து எவ்வளவு நாள் ஆச்சு." எனப் பேச்சுக் கொடுத்தபடி, அவளைக் குளியல் அறைக்கு அழைத்துச் சென்றாள்.*

*"அக்கா, கருணா அத்தான் எடுக்கவே மாட்டேங்கிறாங்க. இவரோட போன் கிடைக்கவே மாட்டேங்குது. நான் நேர்ல போய்க் கூடிட்டு வரேன்." என்றவள் சிட்டாகப் பறந்தாள். காலில் செருப்பு கூடப் போடவில்லை.*

*மித்ரா ஓட்டமும் நடையுமாக நடந்து வருவதைப் பார்த்த மதியழகன், அவள் கடைக்கு வருவதற்கு முன்பே, அவளிடம் ஓடினான். எதோ அவசரம் இல்லாமல் கடைக்கு வரமாட்டாள் எனத் தெரியும்.*

*"என்ன மித்ரா?"*

https://t.me/tamilpdfebooks

*“ரேவதி அக்காவுக்கு உடம்பு சரியில்லை. ஹாஸ்பிடல் போகணும். கார் எடுத்து வருவீங்களாம். கருணா அத்தானுக்கும் சொல்லிடுங்க. அவர் போன் எடுக்க மாட்டேங்கிறார்.” என்றவள், முகத்தில் அவ்வளவு பதட்டம்.*

*“என்ன? ஏது? எனக் கேட்டு நேரத்தை விரயம் ஆக்காமல், “நீ போ…நான் வரேன்.” என்றவன், கடைக்குச் சென்று கார் சாவி எடுத்துக் கொண்டு வேகமாக ஓடினான். கார் செட்டில் நிற்கும்.*

*மித்ரா வீட்டிற்கு வருவதற்கும், ரேவதியை சுத்தபடுத்தி, வேறு புடவை மாற்ற வைத்து, சுபத்ரா வெளியில் அழைத்து வருவதற்கும் சரியாக இருந்தது.*

*வியர்த்து விறுவிறுத்து போய் மித்ரா வந்தாள். அவளுக்கு நேர்மாறாகச் சுபத்ரா பதட்டபடாமல் நிலைமையைக் கையாண்டாள். இதெல்லாம் தெரியாமல் நீலவேணி அறையில் படுத்து இருந்தார்.*

*“மித்ரா ரேவதிக்குக் கொஞ்சம் சாப்பாடு போட்டு ஊட்டி விடு.” என்றவள், சமையல் அறையில் சிந்தி இருந்த உதிரத்தை பழைய துணி கொண்டுவந்து துடைக்க ஆரம்பித்தாள்.*

*வேண்டாம் என மறுத்த ரேவதியை கட்டயப்படுத்தி மித்ரா சாப்பிட வைத்தாள். நான்கு வாய்தான் சாப்பிட்டு இருப்பாள், அதற்குள் கருணாவும் மதியும் வந்து விட்டனர்.*

https://t.me/tamilpdfebooks

துணியில் இருந்த ரத்தத்தைப் பார்த்தே, அவர்கள் இருவரும் அரண்டு போய் விட... "அபார்ஷன் மாதிரி இருக்கு, உடனே டாக்டர்கிட்ட போய்டலாம்." என்றாள் சுபத்ரா.

கேட்டதும் கருணா தலையில் அடித்துக் கொண்டு அழ, ரேவதிக்கும் அழுகை வந்தது. "இப்போ நீ தைரியமா இருக்கணும்." என்ற மதியழகன் , "மித்ரா வீட்டை பார்த்துக்கோ. அப்பா அம்மாகிட்ட அண்ணிக்கு வயித்து வலின்னு மட்டும் சொல்லு. மத்தது அப்புறம் சொல்லிக்கலாம்." என்றவன், காரை எடுக்கச் செல்ல, ரேவதியை கருணாவும் சுபத்ராவும் அழைத்துச் சென்றனர்.

ரேவதியின் ஒரு வயது மகளும் நீலவேணியோடு உறங்கிக் கொண்டு இருந்தாள். அவர்கள் எழுவதற்குள் மித்ரா முகம் கழுவி தன்னைச் சீராக்கினாள்.

மதியழகன் காரை பறக்க விட, இருபது நிமிடத்தில் பக்கத்து டவுனில் இருந்த மிகப் பெரிய மகப்பேறு மருத்துவமனைக்கு ரேவதியை அழைத்துச் சென்றனர்.

துரை சாப்பிட வரும் நேரம் எழுந்து வந்த நீலவேணியிடம், "ரேவதி அக்காவுக்கு வயித்த வலி, சுபத்ரா அக்காவும் கருணா அத்தானும் ஹாஸ்பிடல் கூடிட்டு போய் இருக்காங்க." என்றாள் மித்ரா.

https://t.me/tamilpdfebooks

அவர் எதுவும் பெரிதாக இருக்கும் என நினைக்கவில்லை. சாப்பிட வந்த துரையிடமும் சாதரணமாகவே சொன்னார். துரை போன் செய்து மதியழகனிடம் கேட்க, “இப்பதான் பா டாக்டர் பார்க்கிறாங்க. அவங்களைக் கேட்டுட்டு சொல்றேன்.” என வைத்து விட்டான்.

ரேவதிக்கு உடனே ஸ்கேன் எடுத்துப் பார்க்கப் பட்டது. பிறகு இவர்களை அழைத்து மருத்துவர் பேசினார்.

“அவங்க கர்ப்பமா இருந்திருக்காங்க. ஆனா இப்ப ப்ளீடிங் ஆகுது. குழந்தையும் போதிய வளர்ச்சி இல்லை. அபார்ஷன் தான் பண்ணனும். ஆனா அதுக்கும் உடம்பில ரத்தம் இல்லை.”

“இப்ப இருக்கிற நிலைமையில அபார்ஷன் செஞ்சா... அவங்க உயிருக்கே கூட ஆபத்தா போகலாம்.”

“ஏற்கனவே ரெண்டு குழந்தைகள் இருக்கு. நீங்க கொஞ்சம் ஜாக்கிரதையா இருந்திருக்கலாம்.” என்றார்.

https://t.me/tamilpdfebooks

இரண்டாவது குழந்தை பெற்றபோதும், அவள் பலகீனமாக இருந்ததால் தான், அவளுக்குக் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சையும் செய்யாமல் விட்டிருந்தனர்.

இத்தனைக்கும் குழந்தை வரக் கூடாது எனக் கவனமாகத்தான் இருந்தனர். ஆனால் எதோ பிசக்கில் உருவாகிவிட்டிருந்தது.

“டாக்டர், எனக்கு அவளை எப்படியாவது காப்பாத்திக் கொடுங்க.” என்றான் கருணா கண்ணீருடன். இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள், ரேவதி இல்லாமல் அவனால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

“அவங்களை அட்மிட் பண்ணுங்க. எங்களால முடிஞ்சது பண்றோம்.” என்றார்.

மதி கதிரேசனுக்குப் போன் செய்து, விவரத்தை சொல்லி, நிலைமை கொஞ்சம் சரி இல்லைதான். ஆனால் சரி செய்து விடலாம் என்றான். வீட்டில் பெரியவர்கள் இருவரும் உடைந்து போனார்கள்.

ரேவதிக்கு முதலில் ரத்தப் போக்கு நிறுத்தபட்டது. ரத்தம், ட்ரிப்ஸ் என ஏற்றினர். சில நாட்கள் மருத்துவமனையிலே இருந்து கொஞ்சம் அவளுக்கு உடல்நிலை சரியானதும், நாற்பது நாட்கள்தான் என்பதால்... கருகலைப்புக்கு வீரியம் இல்லாத மாத்திரையே கொடுத்தனர்.

https://t.me/tamilpdfebooks

*மூன்று நாட்களில் ரத்தபோக்கு குறைய... ஐந்தாம் நாள் சுத்தமாக நின்றுவிட, அதன் பிறகே அவளை வீட்டிற்கு அனுப்பினர்.*

*அவள் மருத்துவமனையில் இருந்த பத்து நாட்களும், சுபத்ராவும் மித்ராவும் மாற்றி மாற்றி அவளுக்குத் துணைக்கு ஆஸ்பத்திரியில் இருந்தனர். கருணா மனைவியுடனே மருத்துவமனையில் தங்கி விட... கூட ரேவதியின் அம்மாவும் இருந்தார்.*

*கதிரேசனும், மதியழகனும் தங்கள் மனைவியை மருத்துவமனைக்கு அழைத்து வருவது, திரும்பக் கூட்டி செல்வது, உணவு கொண்டு வருவது என இருவரும் அலைந்து கொண்டே இருந்தனர்.*

*வீட்டையும் குழந்தைகளையும் பார்க்க, எழிலரசி வந்து விட, நீலவேணிக்கு மிகவும் உதவியாக இருந்தது.*

*ரேவதியின் பிறந்த வீட்டில் அவ்வளவு வசதி கிடையாது. அதுவும் அவளது அண்ணியோடு ரேவதிக்கு சுமுக உறவும் இல்லை. இப்போது இருக்கும் நிலையில், ரேவதியை அங்கே அழைத்துப் போனால், தன்னால் ரேவதியையும், அவள் குழந்தையும் தனியாளாகப் பார்க்க முடியாது என நினைத்து ரேவதியின் அம்மா, நான் எங்க வீட்ல வச்சுப் பார்த்துகிறேன் என எதுவும் சொல்லவில்லை.*

https://t.me/tamilpdfebooks

*ரேவதிக்கு மிகவும் கஷ்ட்டமாக இருந்தது. தன்னால் சுபத்ராவுக்கும் மித்ராவுக்கும் ரொம்பக் கஷ்ட்டம் என நினைத்தாள். அவள் அம்மா அழைத்தால்... அங்கே சில நாட்கள் செல்லலாம் என நினைத்து இருந்தாள்.. ஆனால் அவர்கள் அழைக்கவே இல்லை.*

*தானாக எப்படிக் கேட்பது எனத் தெரியாமல் இருந்தாள். திரும்ப வீட்டிற்கு வரும் வழியில், அவளுக்கு அதை நினைத்து அழுகை வர,*

*ஏன் அழுகிறாள்? எனப் புரியாமல் மித்ராவும், சுபதாரவும் பதறி விட்டனர்.*

*"என்ன பண்ணுது ரேவதி?" கருணாவும் பதற...*

*"இல்லை எங்க அம்மா என்னைக் கூப்பிடுவாங்கன்னு நினைச்சேன், கூப்பிடவே இல்லை. என்னால உங்களுக்கு எல்லாம் கஷ்ட்டம்." என்றாள். காரை ஓட்டியபடி அதைக் கேட்ட மதியழகன், காரை ஓரமாக நிறுத்தி விட்டான்.*

*"என்ன அண்ணி எங்களுக்குக் கஷ்ட்டம்? நீங்க யாரு? உங்களுக்கு நாங்க பார்க்காம யாரு பார்ப்பா?"*

https://t.me/tamilpdfebooks

*“முதல்ல அவங்க ஏன் உங்களைப் பார்க்கணும்? நம்ம எல்லாம் ஒரு குடும்பம் அண்ணி. உங்களுக்கு எதுனாலும் நாங்கதான் பார்க்கணும்.”*

*“இனிமே இது மாதிரி பேசிட்டு இருக்காதீங்க. நீங்க நல்லா ஆகி வந்ததே எங்களுக்குச் சந்தோஷம். இனியாவது நல்லா சாப்பிடுங்க, சத்தாவும் சாப்பிடுங்க.” என்றான்.*

*தான் உணவு மீது அக்கறை காட்டாதது, இவ்வளவு பெரிய சிக்கலில் கொண்டு போய் விடும் என அவள் நினைக்கவே இல்லை.*

*நீலவேணி ரேவதியை பெரிய வீட்டில் கீழே இருக்கும் அறையிலேயே இருக்கச் சொல்லி விட்டார். இன்னும் கொஞ்சம் உடம்பு தேரட்டும், அதோடு அவளைக் கவனிக்க வசதியாக இருக்கும் என நினைத்தே சொன்னார்.*

*ரேவதி வீட்டிற்கு வந்ததும், அவளைப் பார்த்து விட்டு எழிலரசி கிளம்பி சென்றாள். ரேவதிக்கு முழு ஓய்வு கொடுத்துவிட்டு சுபத்ராவும், மித்ராவும் எல்லாம் பார்த்துக் கொண்டனர்.*

*மதியழகன் பதினோரு மணிக்கு பழங்களோடு வந்துவிடுவான். அவனே ஜூஸ் போட்டு ரேவதிக்கு கொடுப்பான். அப்போதும் பொண்டாட்டியை விட்டு விட மாட்டான்.*

https://t.me/tamilpdfebooks

*"சண்ட கோழி, இந்தா இதைக் குடிச்சிட்டு தெம்பா வேலைப் பாரு." என மனைவிக்குக் கண்டிப்பாகக் கொடுத்து விடுவான்.*

*இதுவரை தம்பியை கிண்டலாகப் பார்த்துக் கொண்டிருந்த கதிரேசனுக்கும், கருணாவுக்கும் கூட, மனைவியின் உடல் நலனில் நாமும் அக்கறை காட்டி இருக்கலாம் எனத் தோன்றியது.*

*சுபத்ரா என்னதான் வேலைப் பார்த்துக் கொண்டிருந்தாலும், சாப்பிடுவதிலும் அக்கறை காட்டுவாள். ஒழுங்காகக் காய்கறி, பால் பழங்கள் எல்லாம் சேர்த்துக் கொள்வாள். ஆனால் ரேவதிக்கு பால் பிடிக்காது, பழங்கள் சாப்பிட சோம்பேறித்தனம். காய்கறியும் பிடிக்காது. அனேக நேரங்களில் ஊறுகாய் தொட்டுக் கொண்டுதான் சாப்பிடுவாள். அதனால் பழங்கள் வாங்கிப் போட்டாலும், வீணாகப் போகிறது எனக் கருணா வாங்கவே மாட்டன்.*

*காலையில் பாலைக் காய்ச்சியதும், மித்ரா முதலில் ரேவதிக்கு தான் ஹார்லிக்ஸ் போட்டுக் கொண்டு போய்க் கொடுப்பாள். பிறகு சுபத்ரா வந்ததும், இருவரும் சேர்ந்து வேலை செய்வார்கள். பகல் நேரத்தில் பழங்கள் ஜூஸ் போட்டுக் கொடுக்க மதியழகன் வந்து விடுவான். இரவு சுபத்ரா ரேவதிக்கு பால் கொடுத்து விட்டே படுக்கச் செல்வாள்.*

https://t.me/tamilpdfebooks

*இப்படி ஆளாளுக்கு ரேவதியை நன்றாகத் தாங்கினர். ஆனால் அது அவளுக்கு மிகுந்த குற்ற உணர்வை கொடுத்தது. புகுந்த வீட்டு உறவுகளின் அருமை, இப்போது அவளுக்குப் புரிந்தது. ஏட்டிக்குப் போட்டியாக நடந்து கொண்டதால் பாதிக்கப்பட்டது அவள்தான். பிறந்த வீட்டினர் கைவிட்ட நிலையில் புகுந்த வீட்டினர் பார்க்க வில்லை என்றால், தன்னுடைய கதி என்ன ஆகி இருக்கும் என நினைக்கும் போதே அச்சமாக இருந்தது.*

*இப்போது ரேவதியும் வேலை செய்ய முடியாததால்... சுபத்ராவுக்கு மித்ராவுக்குதான் வேலை அதிகம். ஆனால் இருவரும் எதையும் காட்டிக் கொள்ளாது வேலைப் பார்த்தனர்.*

*“சுபத்ரா மித்ரா தான் பாவம், அவங்களுக்கு ரொம்ப வேலை இருக்கு. பாத்திரம் கழுவ மட்டும் ஆளு வைப்போமா?” எனத் தன் கணவரிடம் கேட்டார் நீலவேணி,*

*“ஏன் கேட்டுட்டு இருக்க வச்சிடு. அப்புறம் இவங்களுக்கு எதுவும் முடியாம போயிட போகுது.” என்றார். இதே முன்பு என்றால்... ஒத்துக் கொண்டிருக்க மாட்டார் தான். இப்போது ரேவதிக்கு முடியாமல் போனதில் கொஞ்சம் அரண்டு போய்தான் இருந்தார்.*

*பாத்திரம் கழுவ காலை மாலை ஆள் வைத்ததும், வேலையும் கொஞ்சம் குறைந்தது. ஒரு மாதம் சென்று ரத்த பரிசோதனை செய்ததில், ரேவதிக்கு இப்போது ரத்த சோகை இல்லை என்பதும் உறுதியானது.*

https://t.me/tamilpdfebooks

மூன்று மாதங்கள் சென்று...

ஜெய்யின் நிச்சயத்திற்கு முதல் நாளே மித்ராவை அழைத்துக் கொண்டு மதியழகன் சென்றுவிட்டான். மறுநாள் அப்பா அம்மாவையும் அழைத்துக் கொண்டு கதிரேசனின் குடும்பம் சென்றது. கருணாவும், ரேவதியும் திருமணதிற்கு வருவதாக இருந்தது.

ஜெய் நிஷா நிச்சயம் நல்லபடியாக முடிய. மித்ராவை தவிர மற்றவர்கள் மட்டும் அன்றே கிளம்பிவிட்டனர். மித்ரா ஒருவாரம் கழித்து வருவதாக இருந்தது.

மறுவாரம் மதியழகன் அவளை அழைக்க வர... அப்போது மித்ரா அவனிடம் சந்தோஷமான விஷயம் சொல்ல... கேட்டதும், அவனுக்குச் சந்தோஷத்தில் தலை கால் புரியவில்லை... "ஹே... நான் அப்பா ஆகிட்டேன்." என மனைவியைச் சந்தோஷமாகத் தூக்கி சுற்றினான்.

மித்ரா கர்ப்பமாக இருப்பது உறுதி ஆக. அவளை அங்கேயே விட்டு, அவன் மட்டும் கிளம்பி சென்றான்.

"இந்த மாதிரி நேரத்தில அலையக் கூடாது பா... அதுதான் அங்கயே விட்டுட்டு வந்துட்டேன்." என்றான் துரையிடம்.

https://t.me/tamilpdfebooks

அவனுக்குத் தெரியும், இந்த மாதிரி நேரத்தில் தான் என்ன தாங்கினாலும், அவளுக்குப் பிறந்த வீட்டினர் பார்ப்பது போல இருக்காது என்று… அதுவும் இந்த மாதிரி சந்தர்ப்பத்தில் தான் அவள் பிறந்த வீட்டில் தங்கி சீரடாவும் முடியும்.

ஜெய்யின் திருமணம் வேறு இரண்டு மாதங்களில் இருந்ததால்… திருமணம் முடிந்தே அவளை அழைத்துக் கொள்ளலாம், இல்லையென்றால் அவள் தேவை இல்லாமல் அலைய வேண்டும் என நினைத்தான்.

மித்ராவுக்குக் கொஞ்சம் மசக்கையும் படுத்தியது. இதே புகுந்த வீடு என்றால்… நாம படுத்திருக்கோம், அவர்கள் வேலைப் பார்கிறார்களே என உறுத்தலாக இருக்கும். இது அம்மா வீடு என்பதால்… எந்தக் கவலையுமின்றி, நிம்மதியாக உறக்கம் வரும் நேரம் எல்லாம் உறங்கி எழுந்தாள்.

ஜெய் பற்றிக் கேட்கவே வேண்டாம். அவனுக்கு மதியழகன் மித்ராவை இங்கே விட்டுச் சென்றது, அவ்வளவு சந்தோஷம், அதெல்லாம் சேர்த்து வைத்து தங்கையை நன்றாகக் கவனித்தான்.

https://t.me/tamilpdfebooks

திருமணதிற்கு நான்கு நாட்கள் முன்பு சுபத்ராவும் வந்துவிட... இரண்டு தங்கைகளும் வந்திருந்தது... வீடே நிறைந்திருப்பது போல அவனுக்கு நிறைவாக இருந்தது.

மதியழகன் திருமணதிற்கு முன்தினம்தான் வந்தான். இரண்டு மாதங்களாக மனைவியைப் பிரிந்திருந்ததால்...வீட்டிற்கு வந்ததும் மித்ராவை, அவன் கண்கள் ஆவலாகத் தேடியது.

கீழே ஹாலில் கணவன் குரல் கேட்டதும், மித்ராவும் அவனைப் பார்க்க விரைந்து வந்தாள். இருவரின் பார்வையும் ஒன்றையொன்று தழுவி இருக்க, மற்றவர்கள் இருக்கிறார்கள் என்றெல்லாம் நினைக்காமல், மித்ரா மதியழகன் அருகே சென்று, அவன் கையைப் பிடித்துக் கொண்டாள்.

அவனுக்கும் பார்வையை மனைவியை விட்டு திருப்ப முடியவில்லை. "ஹே சண்ட கோழி எப்படி இருக்க?" என்றான் ஆவலாக.

இரண்டு மாதங்களாக அவன் அவளோடு போன்னில் கூடச் சரியாகப் பேசி இருக்கவில்லை. எங்கே பேசினால்... அவளைத் தான் அங்கே அழைத்து விடுவோமோ என நினைத்தே பேசவில்லை.

https://t.me/tamilpdfebooks

இருவரின் நிலையையும் உணர்ந்த ஜெய், “அவரைக் கூட்டிட்டு மாடிக்கு போ.” என்றான்.

அறைக்கு வந்ததும் மனைவியை அணைத்து, “நீ இல்லாம இருக்கவே முடியலை மித்ரா.” என்றவன், ஆசையாக அவள் வயிற்றை வருடி, அவள் முன்பு மண்டியிட்டு அமர்ந்து, “பேபி... அப்பாவை விட்டு ரொம்ப நாள் இருந்துடீங்க. இனிமே அப்பாதான் உங்களைக் கவனிப்பேன்.” என்றவன், இதமாக அவள் வயிற்றில் முத்தமிட்டான்.

குறித்த முஹூர்தத்தில் ஜெய் நிஷா திருமணம் நன்றாக நடந்து முடிய, மறுநாள் மதியழகன் மித்ரா மற்றவர்களுடன் கிளம்பி தங்கள் வீட்டிற்கு வந்து விட்டனர்.

இரவு வந்து உறங்கியது களைப்பாக இருக்க, மறுநாள் மித்ரா தாமதமாகவே எழுந்தாள். ஆனால் அவள் எழுந்து விட்டது தெரிந்ததும், ரேவதி ஒரு பெரிய டம்ளர் நிறைய ஹார்லிக்ஸ் கொண்டு வந்து கொடுத்து விட்டு சென்றாள்.

அன்று அவள் மித்ராவை எந்த வேலையும் செய்ய விடவில்லை. மித்ரா உட்கார்ந்து பேசிக் கொண்டு இருக்க, ரேவதிதான் செய்தாள்.

https://t.me/tamilpdfebooks

*மதியழகன் பதினொரு மணி போல் பழங்களோடு வர... "நீ இல்லாம உன் வீட்டுக்காரர் வீட்டலையே இல்லை. பசலை நோய்க் கண்ட தலைவின்னு தான் கேள்வி பட்டிருக்கேன். ஆனா தலைவனை இப்போதான் பார்த்தேன்." என ரேவதி சிரித்துக் கொண்டே சொல்ல,*

*"ஏன் அண்ணி இப்படி ஓட்றீங்க?" என்றான் மதியழகன்.*

*"பிறகு சொல்லாம, இத்தனை நாள் கழிச்சு இன்னைக்குத்தானே இந்த நேரத்துல வீட்டுக்கு வந்திருக்க."*

*"என்னைப் பார்த்தா உங்களுக்குச் சந்தோஷமா இருக்குமா? உங்களைக் கவனிக்க அண்ணனை அனுப்பி வச்சேனா இல்லையா?" என்றான்.*

*"ஓ... அது உன் வேலைதானா... என்ன டா நம்ம வீட்டுக்காரருக்கு கூட இப்படியெல்லாம் தோணுதேன்னு நினைச்சேன்." அவள் சொல்லும் போதே, கருணா பழங்களோடு வர...*

*"பாருங்க இப்ப நான் சொல்லி எல்லாம் அண்ணன் வரலை." என்றவன், "வா மித்ரா நாம அவங்களை டிஸ்டர்ப் பண்ண வேண்டாம்." என அவன் மனைவியை அழைத்துக் கொண்டு செல்ல,*

https://t.me/tamilpdfebooks

*“டேய் ! நீ போறதுன்னா போடா. அது ஏன் எங்களைக் காரணம் காட்டிட்டு போற?” என்றான் கருணா.*

*“அது பொண்டாட்டிக்கு ஊட்டி விடனும் இல்ல, அதுக்குதான்.” என்றாள் ரேவதி சிரிப்புடன்.*

*“நீங்கதான் அண்ணி என்னைப் பத்தி நல்லா தெரிஞ்சு வச்சிருக்கீங்க.” என்றான் மதியழகன்.*

*அவர்கள் பகுதிக்கு வந்ததும், “ஏங்க இப்படிப் பண்றீங்க?” மித்ரா கேட்க,*

*“நான் தான டி உன்னைக் கவனிக்கணும்.” என்றான். ஆனால் அவன் கவனித்ததோ வேறு விதத்தில்... கூடல் முடிந்து விலகிய கணவனை, விலக விடாமல் இழுத்தவள், “இதுக்குதான் தனியா கூடிட்டு வந்தீங்களா?” என்றாள் கண்களில் காதலை தேக்கி,*

*“ரொம்ப நாள் ஆச்சா, அதுதான் நைட் வரை வெயிட் பண்ண முடியலை.” என்றவன், அவள் நெற்றியில் இதமாக இதழ் ஒற்றி விலகினான்.*

https://t.me/tamilpdfebooks

***ஏழாம் மாசம் பிரசவத்திற்கு அம்மா வீட்டிற்குப் போகிறாயா? எனக் கேட்ட கணவனிடம், "இல்லை, அவ்வளவு நாள் உங்களை விட்டுட்டு இருக்க முடியாது. ஒன்பதாவது மாசம் போறேன்." என்றாள் மித்ரா.***

***ஒன்பதாவது மாதம் மித்ராவுக்கு வீட்டிலேயே வளைக்காப்பு செய்தனர். அவளைப் பிரிந்து இருக்க வேண்டுமே, அதோடு எப்படிப் பிரசவம் இருக்கப் போகிறதோ என அந்த எண்ணம் வேறு, அதனால் மதியழகன் கொஞ்சம் பதட்டமாகவே சுற்றிக் கொண்டு இருந்தான்.***

***"நீங்க இப்படி இருந்தா, நான் எப்படிப் போறது?" எனக் கேட்ட மனைவிக்காக, முகம் மலர புன்னகைத்தான்.***

***கிளம்பும் சமயம் மித்ரா எல்லோரிடம் சொல்லிக்கொண்டவள், சுபத்ரா மற்றும் ரேவதியிடம், "அக்காஸ், நான் குழந்தை பிறந்து ஒரு மாசத்தில வந்திடுறேன்." என்றாள்.***

***அவளைப் பார்த்து கும்பிட்ட கதிரேசன், "நீ நல்லபடியா மூனாவது மாசமே வா தாயே.... இல்லைனா எங்க மொத்த குடும்பத்தையும் வரிசையில நிக்க வச்சு திட்டுவ." என அவன் பாவமாக் சொல்ல, அதைக் கேட்டு சுபத்ராவுக்கும் மதியழகனுக்கும் அப்படி ஒரு சிரிப்பு, அசடு வழிந்த மித்ரா, "உங்களுக்குத்தான் அத்தான் தேங்க்ஸ் சொல்லணும்." என்றாள்.***

https://t.me/tamilpdfebooks

“எதுக்கு மா? என் தம்பியை உனக்குக் கட்டி வச்சதுக்கா?” என்றான் சரியாக.

ஆமாம் எனத் தலையசைத்தவள், “தேங்க்ஸ் அத்தான்.” என்றாள் வெட்கத்துடன்.

கணவனைப் பிரியும் வருத்தத்தில் காரில் ஏறிய மித்ரா கண்ணீர் சிந்த, “நம்ம வீட்டுக்குத்தானே வர அழக் கூடாது. அவர் உன்னை அடிக்கடி பார்க்க வருவாரு.” என ஓட்டுனர் இருக்கையில் இருந்த ஜெய் தங்கையைத் தேற்றினான்.

பெண்கள் பிறந்த வீட்டை பிரிந்தாலும் அழுகிறார்கள், புகுந்த வீட்டை விட்டு வந்தாலும் அழுகிறார்கள். போங்க டா பசங்களா, என்ன இருந்தாலும், பெண்கள் தான் பாசமானவர்கள்.

மித்ராவுக்குச் சொன்ன தேதியில், அழகான பெண் குழந்தை பிறந்தது. மதியழகன் அப்போது அவளுடன்தான் இருந்தான். ஒரு மாசத்தில் வருகிறேன் என்றவளை மூன்று மாதங்கள் சென்றுதான் அழைத்து வந்தான்.

https://t.me/tamilpdfebooks

குழந்தை பெரிய வீட்டில் தொட்டிலில் உறங்க, நீலவேணி தொட்டிலை ஆட்டிக் கொண்டு இருந்தார். மருமகள்கள் மூன்று பேரும் எப்போதும் போல,பேசி, சிரித்து வேலை செய்து கொண்டிருந்தனர்.

"எங்கள் குடும்பத்தை இப்படியே சந்தோஷமா வை இறைவா." என இறைவனிடம் வேண்டியபடி, நீலவேணி குழந்தைக்குத் தாலாட்டு பாடிக் கொண்டிருந்தார்.

அன்று கார்த்திகை தீபம், மூன்று மருமகள்களும் ஒரே மாதிரி பட்டுபுடவையில், வீடெங்கும் விளக்கேற்றிக் கொண்டிருந்தனர். அவர்களை இப்படிச் சேர்ந்து பார்க்க துரைக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

அதே மாதிரி அண்ணன் தம்பிகள் மூவரும் ஒரே மாதிரி வேட்டி சட்டை அணிந்து, அவர்களுக்கு உதவுகிறேன் என்ற பேரில், தங்கள் மனைவியை உரசிக் கொண்டு நின்றனர்.

"இப்ப நீங்க என்ன பண்றீங்க?" மித்ரா கேட்க,

"சண்ட கோழி, இப்ப நல்லா வெட கோழி மாதிரி இருக்கியா... அதுதான் தள்ளி இருக்க முடியலை." என்றான் மதியழகன் கண்ணில் கிறக்கத்துடன்.

https://t.me/tamilpdfebooks

*“உங்க முதல் பாப்பா இன்னும் தொட்டில்தான் தூங்குது. உங்களுக்கு அது நினைவு இருக்கட்டும்.” மித்ரா குழந்தையைக் கண்களால் காட்ட... மதியழகன் மையல்லாகப் புன்னகைத்தான்.*

*விளக்கேற்றி முடித்ததும், எல்லோருமாக வாசலில் சேர்ந்து நின்று மத்தாப்பு கொளுத்தினர்.*

*அப்போது டிவியில், “எங்க வீட்டில் எல்லா நாளும் கார்த்திகை, எங்கள் நிலவில் என்றும் இல்லை தேய்பிறை....” எனப் பாடிக் கொண்டிருந்தது.*